# எண் சோதிட ஜோ

# NUMEROLOGY.





1174

செல்வி. S. P. வைலற். ச

திருகோணம

# எண் சோதிட ஜோதி

## NUMEROLOGY

82244

செல்வி S. P. வைலற் சரோஜா

திருகோணமலை.

நூல் : எண் சோதிட ஜோதி.

முதற் பதிப்பு : ஜனவரி 1983.

ஆக்கம் : S. P. வைலற் சரோஜா, யாழ் பல்கலைக்கழகம்,

அச்சுப் பதிப்பு : கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

விற்பனை : பூபாலசிங்கம் புத்தகசாலை,
சாரதா புத்தகசாலை,
வஸ் நிலையம் முன்பாக, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சிதம்பரப்பிள்ளை அன் சன்ஸ்,
வஸ் நிலையத்திற்கு அருகாமையில்,
திருகோணமலை.

கணேசன் ஸ்டோர்ஸ்,
12, 13, மத்திய வீதி
மட்டக்களப்பு

விலை ரூபா 18/-

உ

ஓம் சக்தி

111, 2ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
1-10-1982.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் வணிகப் பிரிவில் (3ம் வருடம்) கல்வி பயிலும் செல்வி S. P. வைலற் சரோஜா ஆகிய இவர் தன்னுடைய நீண்டகால எண் சோதிட அனுபவத்தைக் கொண்டு என்னுடைய பிறந்த திகதி, மாதம், ஆண்டைக் கொண்டும் கணித்துக்கூறிய விடயங்கள் நூற்றுக்கு நூறு உண்மையாக இருப்பதைக்கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

சில உண்மைச் சம்பவங்களைக் குறிப்பிட்ட வயதுகளில் சரியாகக் கூறியது மேலும வியப்பூட்டியது. மேலும் எனது முன்னேற்றத்திற்குக் கலை எவ்வாறு வளர்ந்தது என்பதையும், எனது விளைவு சூரியனாக இருப்பதால் மேன்மையான ஓர் ஸ்தானத்தில் விளங்குகின்றீர் என்பதையும் தன்னுடைய நுண்ணிய கணிப்பின்மூலம் சுட்டிக்காட்டினார். மேலும் குரு ஆதிக்கம்கொண்ட என்னைப்போன்ற கலைஞர்கள்தான் அழிந்துபோகும் இக்கலைக்குப் புத்துயிர் ஊட்டி வளர்ப்பவர்கள் என்பதையும் குறிப்பாக எடுத்துரைத்தார். கல்வித்தானம் எனது இலட்சியமாக இருப்பதினால் கலைத்துறையில் மேன்மேலும் பிரகாசிக்க இடமுண்டு என்று குறிப்பிட்டார்.

இவருடைய எண் கணிப்புக்கள் முற்றிலும் சரியாக அமைந்துள்ளபடியினால் வாசக நேயர்கள் இந்நூலினால் பெரிதும் பயனடைவார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லையென நான் கருதுகிறேன்.

இளம் வயதுடைய இம்மாணவி தன்னுடைய விடாமுயற்சியினால் மேன் மேலும் இக்கலையை வளர்த்து, சமுதாயத்துக்கும், நாட்டிற்கும், தேசத்திற்கும் பணிபுரிவார் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

வணக்கம்.

இங்ஙனம்

''சிற்பக் கலாநிதி''

**செ. சிவப்பிரகாசம்**

சித்திராசிரியர்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

---

யாழ் பல்கலைக் கழகம்,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணம்.
07-09-82.

யாழ் பல்கலைக் கழகக் கலைப்பீட வணிகப் பிரிவின் 3ம் வருட மாணவியும், எமது நண்பியுமான செல்வி S. P. வைலட் சரோஜா என்பவர் இந்நூலை ஆக்கி அளிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இவர் தாம் கற்றறிந்த எண் ஜோதிட கலை அறிவால் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பல உண்மையான ஜோதிடம் கூறியுள்ளார். நாம் இவவிடம் சென்று எண் ஜோதிடம் கேட்டபோது எமது பிறந்த திகதி, மாதம், ஆண்டு என்பவற்றைக் கொண்டு எமக்குக் கூறிய குறிப்புகள் 100க்கு 98% சரியானவையாகவே காணப்பட்டது. இன்னும் பல்கலைக் கழகத்தைச் சூழவுள்ள சமூகத்தினரிடையேகூட இவரது எண் ஜோதிடம் பிரபல்யம் அடைந்துள்ளது என்பதை நாம் அறிந்துள்ளோம். ''இவர் கூறியது அப்படியே எமக்கு நடந்தது'' என்று எம்மிடம் பலர் கூறவும் கேட்டுள்ளோம். இத்தகைய ஓர் சூழலில் இவரது நூல் வெளியிடப்படுவது பலராலும் வரவேற்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

யாழ் பல்கலைக் கழகத்தின் நூல் வெளியீடுகள் அருகிக்கொண்டுவரும் இக் காலகட்டத்தில் இவர்தம் ஆக்கம் வெளியிடப்படுவது வரவேற்கக் கூடிய ஒன்றாகவே எமக்குத் தென்படுகின்றது. அத்துடன் எண் ஜோதிடம் சார்ந்த ஓர் நூல் யாழ் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்படுவது இதுவே முதல் முறையாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரைப் பலரும் நாடிவருவதிலிருந்து இந் நூல் பலருக்கும் பயனளிக்கும் என எதிர்பார்க் கின்றோம்.

இறுதியாக இவரிடம் உள்ள இந்த ஆற்றல் தளைத்து, அறிவு பெருகி, நன்மை பயக்க இறை வன் அருள் நாடி வாழ்த்துக் கூறி நிற்கின்றோம்.

இஃது

நண்பிகள்

**S. M. மல்லிகா, S. பிலோமினா,**
**S. சுபத்திரா, K. கமலினி,**
**P. பாமதி.**

(யாழ் பல்கலைக் கழகம்)

---

94, Jalan Cochvane,
Kualalumpur,
Malaysia.

To whom it may concern,

This short letter which I am giving to Miss S. P. Violet Sarojah that she had read my horoscope by only referring to the actual date of Birth such as the exact date, month and year. After that she had narrated me the past and future of my activities, like the nature of business and the present, future she also stated about my health. I found out what she had stated are all true, and I can vouch that whoever wishes to know about this reading without any hesitation.

Yours faithfully,

*K. A. Ratnam.*

# நன்றியுரை

இந்நூலை ஆக்கி அகிலத்துக்களிப்பதில் என்னுடன் சரிநிகராக நின்று ஒத்துழைத்த கத்தோலிக்க அச்சகத்தார் அனைவருக்கும், அத்துடன் நிர்வாகத்தினருக்கும், எனக்கு விடார்முயற்சியாக ஊக்கமளித்த ஞானச்சகோதரர்களாகிய S. A. ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், S. கிறேசியன்பிள்ளை அவர்களுக்கும் எனது அன்பான நன்றியை நல்கிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மற்றும் எனக்கு இப்புத்தக ஆக்கத்துக்கு ஊக்கமளித்த சக மாணவர்களுக்கும், என்னைத் தட்டிக்கொடுத்து ஆர்வமூட்டிய விரிவுரையாளர்களுக்கும் எனது அன்பான நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

நன்றி.

**S. P. வைலற் சரோஜா.**

# எண்கள் கூறும் அதிஷ்டம்

மனித வாழ்க்கையில் எண்கள் எத்தனையோ சாதனைகளை நிலைநாட்டி இருப்பதை நாம் அறிவோம். கணக்குகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்துள்ளது, எண்களேயாகும். இவ்வெண்கள் மனித வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமைந்துள்ளதை எம்மில் சிலர் அறியாமலே இருக்கின்றனர். இன்னும் சிலர் அரைகுறையாகப் புரிந்து கொண்டு மனதைப் போட்டு அலட்டிக்கொள்கிறார்கள். பிறந்த திகதி எண்தான் தம்மை ஆள்வதாக சிலர் கருதி அதைப்பற்றி மட்டுமே ஆராய்ந்துவிட்டு இருந்துவிடுகிறார்கள். இவ்வாறு எண்களின் அதிர்ஷ்ட விஞ்ஞானம்பற்றி அறிய ஆவலாகத் துடிக்கும் உள்ளங்களுக்கு இந்நூல் உதவிபுரியும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. பிறந்த திகதி, மாதம், வருடம், இவற்றைக் கொண்டும், எமது பெயர் எண், நாம் வாழும் நாட்டு எண் ஆகியவற்றைக் கொண்டு எமது வாழ்க்கையைச் சீராக அமைத்துக்கொள்ள இந்நூல் பெரிதும் உதவி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

சிலர் அதிஷ்ட நாட்களில் பிறந்தும், துர்அதிஸ்ட எண்களில் பெயரை வைத்துவிட்டு, தாம் அதிஸ்டசாலிகள் அல்ல என அலட்டிக்கொள்கிறார்கள், இன்னும் சிலர் துர் அதிஸ்ட நாடுகளில் குடிபுகுந்து, தமது அதிர்ஷ்டத்தைக் கெடுத்துக்கொள்கிறார்கள். இவ்வாறு இன்னல்களுக்குள்ளாகும். அனைவருக்கும் இந்நூல் பெரிதும் கைகொடுத்துக் காக்கும் என்பதில் நான் திருப்தி அடைகிறேன். இந்நூலை நன்றாகப் படித்து விளங்கிக்கொண்டபின், எங்கே உங்கள் பிரச்சனைகளை தீர்க்க வழிதேடுங்கள்.

அதுமட்டுமா, உங்கள் நண்பர்கள் என்ன எண் ஆதிக்கராக அமையவேண்டும் என்பதையும் அறிந்து, அவர்களை தேர்ந்தெடுங்கள். வாழ்க்கைத் துணைவியரோ, துணைவனோ என்ன எண் ஆதிக்கராக அமையவேண்டுமென்பதை அறிந்து தெரிவு செய்துகொள்ளுங்கள்.

# எண்களும் கிரக நிலையும்

''எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்
எண்களின் திண்மை அறியப் பெற்றோர் !!!''

எண்களுக்குரிய கிரகங்களையும் அவற்றின் தன்மைகளையும் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். நவகிரகங்கள் தாம் எம்மை ஆளும் கிரகங்கள். எனவே எமது எண்களுக்குரிய கிரகங்கள் எவை, அவற்றின் தன்மை யாது என்பதை நோக்குவோம்.

| எண்கள் | | கிரகநிலை | | தன்மை |
|---|---|---|---|---|
| 1 | — | சூரியன் | — | மேன்மை |
| 2 | — | சந்திரன் | — | மென்மை |
| 3 | — | குரு | — | போதனை |
| 4 | — | இராகு | — | பகை |
| 5 | — | புதன் | — | தோழமை |
| 6 | — | சுக்கிரன் | — | ரசனை |
| 7 | — | கேது | — | சோதனை |
| 8 | — | சனி | — | வேதனை |
| 9 | — | செவ்வாய் | — | சாதனை |

நவக்கிரகங்களுக்குரிய தன்மையை ஒரு சொல்லில் அடக்கிக் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஒன்றிக்குரிய கிரகம் சூரியன். அதன் தன்மை மேன்மை, அதாவது, எல்லாக் கிரகங்களிலும் பிரகாசம் கூடியதும் பெரிதாகவும் துலங்குவது சூரியனுகும். எனவே சூரிய ஆதிக்கமுள்ளவர்கள் எப்போதும் மேன்மையான ஒரு ஸ்தானத்தில் இருப்பார்கள் என்பதை குறித்து நிற்கிறது. நாம் எமது பிறந்த ஆண்டு, மாதம், திகதிகளைக் கொண்டு எந்தெந்தக் கிரகங்களால் ஆளப்படுகிறோம் என்பதை அறிந்துகொண்டு, பின்பு தனித் தனி ஒவ்வொரு கிரகங்களையும்பற்றி ஆராய்வோம்.

முதலில் ஒவ்வொருவரையும் ஆளும் கிரகங்களைப் பற்றி நோக்குவோம்.



# ஒருவரை ஆளும் கிரகங்களை கணிக்கும் முறை

ஒருவர் பிறந்த திகதி, மாதம், வருடம். இவற்றைக்கொண்டு, வாழ்க்கையை ஐந்தம்சமாக வகுத்து ஆராயும் முறையே இது. அதாவது, பிறந்த திகதியையோ, அல்லது திகதி, மாதம், ஆண்டு இவற்றைக் கூட்டிவரும் எண்ணையோ கொண்டு வாழ்வை நிர்ணயித்துவிட முடியாது. உதாரணமாக ஒரு பேனாவின் மூடியையும், முனையையும் எடுத்துக்கொண்டு இதுதான் பேனா என வாதிடுவதை, பேனாவைப்பற்றி அறிந்த எவரும் ஏற்கமாட்டார்கள். எனவே, அதன் உருவ அமைப்பு, மை, நிப்பு, மூடி, முனை இவ்வாறு ஒவ்வொரு அங்கமும் சேர்ந்துதான் ஈற்றில் ஒரு அமைப்புடைய பேனாவாக உருப்பெறுகின்றது.

எனவே எமது பிறப்பைக்கொண்டு எவ்வாறு எம்மை ஆளும் கிரகங்களை அறியலாம் என்பதை நோக்குவோம்.

ஆங்கிலேயருக்கு மண்டியிட மறுத்துக் கடைசிவரை தாய்த்திரு நாட்டுக்காகப் போராடி ஈற்றில் தூக்கிலிடப்பட்ட மஹாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன். இவனுடைய பிறந்த தேதி, மாதம், ஆண்டு இவற்றை உதாரணமாக எடுத்தாராய்வோம்.

தோற்றம்: *3 - 1 - 1760.*

| | எண்கள் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| மாத எண் | 4 | இராகு | பகை | |
| வருட எண் | 8 | சனி | வேதனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |

இங்கு முறையே, திகதி எண், மாத எண், வருட எண், விதி எண், விளைவு எண் என ஐந்து அம்சமாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, திகதி எண் திகதியை மட்டும் குறிப்பது. உதாரணமாக, 26ம் திகதி பிறந்தால் 2 + 6 = 8 எனக் கணிக்கலாம். 24ம் திகதி பிறந்தால் 2 + 4 = 6 எனக் கணிக்கலாம். மாத எண் காண்பதாயின் திகதியையும் மாதத்தையும் கூட்டுதல் வேண்டும். மேல்காட்டிய விளக்கத்தின்படி 3ம் திகதி 1ம் மாதம் இவை இரண்டையும் கூட்டினல், 3 + 1 = 4 வரும். வருட எண் காண்பது திகதியையும் வருடத்தையும் கூட்டுதல்வேண்டும். 3 + 1 + 7 + 6 + 0 = 8 வரும். பின்பு விதி எண் காண்பதாயின் 3 + 1 + 1 + 7 + 6 + 0 = 9. பின்பு விளைவு எண் காண்பதாயில், மேலே நாம் கணித்தெடுத்த எல்லா எண்களையும் கூட்டுதல்வேண்டும். அதாவது,

| | | | |
|---|---|---|---|
| திகதி எண் | — | 3 + | |
| மாத எண் | — | 4 | 3+4+8+9 = 24 |
| வருட எண் | — | 8 | |
| விதி எண் | — | 9 | 2+4 = 6 |
| விளைவு எண் | — | 6 | |

இவ்வாறு பிறந்த திகதி, மாதம், ஆண்டு போன்றவற்றைக்கொண்டு எம்மை ஆளும் கிரகங்களைக் கணித்தால் மட்டும் போதாது. இவ்ஐந்து எண்களுக்கும் உரிய கிரகங்கள் எம்மீது சரிசமமான ஆட்சி செலுத்துவதில்லை. அவை அமைந்திருக்கும் இடத்திற்கு ஏற்ப எம்மீது ஆட்சி செலுத்துகின்றன. அவ்வாறாயின் அவை அமைந்து எம்மீது எத்தகைய ஆட்சி செலுத்துகின்றது என்பதைக் கவனிப்போம். சிறு உதாரணத்தின் ஊடாக நாம் இதை இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும். திகதி எண்ணை நாம் நிலத்துக்கொப்பாகவும், மாத எண், வருட எண்களை முறையே நீர், பசளைக்கும், விதி எண்ணை விதைக்கும் ஒப்பாக நோக்குவோம். இந் நிலத்தைக்கொண்டு நீர், பசளையை உபயோகித்து, விதையை விதைத்து கிடைத்த விளைவைத்தான் விளைவு எண் சித்தரிக்கின்றது. இப்போது நோக்கும்போது, நிலத்தையோ, பசளையையோ, நீரையோ, திரும்பப் பெறுவதில்லை. புதிதாக



ஒரு விளைவைப் பெறுகிறோம். அவ்வாறுதான் இங்கும் நோக்கவேண்டும். அதனுல், நிலமும் விதையும் தேவையற்றவை என்ற கருத்தாகாது. விளைவுதான் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அவன் அடையும் பலனைக் குறிப்பிடும். விதி எண் என்று கூறும்போது நாம் அடிக்கடி கேட்டிருப்போம். ''அது அவனுடைய விதி அப்படி நேர்ந்துவிட்டது'' என்று. ஆம் ஒருவருடைய விதி எவ்வாறு அமையுமென்பதை விதி எண் கூறுகிறது. சிலர் கூறுவர் விதி என்ன விதி, விதியையும் மதியால் வெல்லலாம் என்றும். ஆனுல் இளங்கோ அடிகளார் கூறி உள்ளார்கள், மதியால் வெல்லும் அக்கடைசி முடிவுதான் விதி. அவனுக்கு அப்படி ஒரு விதி இருந்த பட்சத்திலேயே அவன் மதி அவனுக்கு உதவியது.

எனவே ஒருவனுக்கு முதலில் விளைவெண்ணும், இரண்டாவதாக விதி எண்ணும், மூன்றுவதாகத் திகதி எண்ணும் முக்கியமானவை. மாத எண், வருட எண்களுக்குரிய கிரக பலன்கள் வெளிப்படமாட்டாது. உதாரணமாக, ஒரு இருட்டறையில் ஒரு மெழுகுவர்த்தி எரியும்போது ஒரு பெற்றோல்மக்ஸ்சைக் கொழுத்திவைத்தால் அங்கு மெழுகுதிரி எரிந்தாலும் அதன் ஒளியைப் பெற்றோல்மக்சினுடைய ஒளி பிரகாசிக்க விடுவதில்லை. அவ்வாறே திகதி எண், விதி எண், விளைவெண் வலிமை உடையவையாக இருப்பின் மாத எண், வருட எண் ஆகியவற்றின் தன்மைகள் வெளிப்படமாட்டாது.

இனி ஐந்து அம்சங்களைப்பற்றி தனித்தனி நோக்குவோம். முதலாவதாகத் திகதி எண்ணை நாம் நிலத்துக்கு ஒப்பிட்டோம். ஆம், நிலம் மாருத்தன்மை உள்ளது. அதாவது, கடற்கரை மண்ணுனல் முடிவுகாலம்வரை கடற்கரை மண்தான். இடையில் அது களிமண்ணுக மாற்றமடையமாட்டாது. அத்துடன் நிலமானது கமக்காரனுடைய ஆதிக்கத்துக்குரியது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஒருவர் எந்தக் குடும்பத்தில் பிறக்கிருரோ அவரது பெற்றோர் அவர்மீது எந்தளவு கரிசனை உடையவர்களாக உள்ளார்கள் என்பதை நோக்கவேண்டும்,

தந்தையருடன் நாம் வாழும் காலகட்டத்தையே அனேகமாக திகதி எண் காட்டி நின்றபோதும் விதி எண்ணை நாம் விதைக்கு ஒப்பிட்டிருந்தோம். இவ்விதை வளர்ந்து அந்தரத்தில் நிற்கவில்லை நிலத்தில்தான் நிற்கிறது. எனவே, திகதி எண் ஆதிக்கமும் தொடர்ந்து இடம்பெறும். உதாரணமாக, நிலம் மாறுபடாத்தன்மை உடையது என்று கூறும்போது ஒருவருடைய பெயர் ரவியாக இருந்தால் அவர் இடையில் தனது பெயரை ராமு என மாற்றினாலும், தன்மை, தனது அமைப்பை மாற்றமுடியாது. அனைவருக்கும் தெரியும். இவர் இன்னாருடைய மகன் இன்ன வம்சம் போன்ற உண்மைகளை மாற்றமுடியாது. வீரபாண்டிய கட்டப்பொம்மன் பிறந்த அன்று எத்தனையோ குழந்தைகள் பிறந்திருக்கலாம். ஆனால், வீரபாண்டிய கட்டப்பொம்மனைப்போன்று அக்குழந்தைகள் சாதனையை நிலைநாட்டவில்லை. காரணம், அவன் பிறந்த இடம், தாய் தந்தையர் அவனுக்குப் போட்ட உரம் இவற்றையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இனி விதி எண்ணைப்பற்றி வோக்குவோம். அதாவது, விதி எண் விதைக்கு ஒப்பாகும் என்று பார்த்தோம். விதை மாறுபடும் தன்மை கொண்டது. அதாவது, முளை வந்து, மரமாகி, மொட்டாகி, பூவாகி, காயாகி, பழமாகி, பலன்தரும் தன்மையது. விதி எண், நாம் விபரமறிந்து இயங்கிச்செல்லும் காலத்தைக் காட்டுகின்றது. திகதி எண்ணிலும் விதி எண் அதிஸ்டமாக அமைந்துவிட்டால் வாழ்க்கை தானாகவே முன்னேறும்.

விளை எண்ணைப்பற்றி நோக்கும்போது எமக்கு வாழ்வில் என்ன பலன் அடிக்கடி கிடைக்கிறது என்பதைக் காட்டி நிற்கின்றது. உதாரணமாக, வீரபாண்டிய கட்டப்பொம்மனுடைய அமைப்பை நோக்கினோம். அவனுடைய திகதி எண் 3 குரு. இதன் தன்மை போதனை. இது அவன் சிறு வயது முதல் ஆற்றலும், அறிவும், தேசபக்தியும், பொறுப்புணர்ச்சி உடையவனுமாக வளர்ந்துவந்ததைக் குறிப்பிடும். 9 செவ்வாய். இது சாதனையைக் குறிப்பிடும்.



யாருக்கும் அஞ்சாமையையும், தலை வணங்காமையையும், எவரை எப்படி ஆளவேண்டும் என்ற ராஜதந்திர மூளையையும் குறிப்பிடும். 6, எண்களிலேயே அதிஸ்டமானது. இங்கு வீரபாண்டியனின் விளைவு எண் 6. எனவே, எல்லாவிதமான இன்பங்களையும் அனுபவித்து வாழும் அமைப்பையும், கட்டுமஸ்தான உடல் அமைப்பையும், ரசிகத்தன்மையையும் குறிக்கும். மொத்தத்தில் இவ்வமைப்புக் கொண்டவர்கள் வீரபுருஷர்களாக விளங்குவர். 3, 9, 6 இவையே வீரபாண்டிய கட்டப்பொம்மனுடைய எண்களாகும். எனவே, கட்டுமஸ்தான உடல் அமைப்பு, அறிவு, வீரம், அத்துடன் சுதந்திரப் பிரியர்களாகவும், அனைவரையும் வழிநடத்தும் வள்ளல்களாகவும், பிடிவாத குணமுடையவர்களாகவும் திகழ்வார்கள்.

கொள்கையில் இருந்து விலகா வீரர்கள், உயிர் போயினும் கொள்கை மாறமாட்டார்கள். இவனுடைய மறைவு 16-10-1799ல ஏற்பட்டது. அவன் 39வது வயதில் தனது சாதனைக்காகத் தன் உயிரையே தியாகம் செய்தான். சுயகௌரவத்தை எந்த இடத்திலும் இழக்க விரும்பமாட்டார்கள். அதேபோன்று சுதந்திரச் சிற்பியும் பாரதத்தின் முதல் ஜனாதிபதியுமாகிய டாக்டர் ராஜேந்திர பிரசாத் தோற்றம் 3 - 12 - 1884. ராஜேந்திர பிரசாத்தினுடைய அமைப்பை நோக்குவோம். அவர் பிறந்தது 3 - 12 - 1884ம் ஆண்டு. ஆகவே அவரது அமைப்பை நோக்குவோம்.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| மாத எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| வருட எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இங்கும் நாம் அதே அமைப்பைத்தான் காண்கின்றோம். இவரும் சுதந்திரத்திற்காகப் போராடியவரே, இனி ஒவ்வொரு எண்களையும் அதன்கீழ் உள்ள அமைப்புபற்றியும் நோக்குவோம்.

ஒவ்வொரு எண்களைப்பற்றியும் அறிந்தபின்பு எம்மையாளும் எண்கள் எவை எவையென கணித்து அவற்றிக்குரிய தன்மைகளை அளவிட்டுக்கொள்ளமுடியும்.

## எண்: 1 கிரகம்: சூரியன் தன்மை: மேன்மை

"சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்"

இதன் தன்மை மேன்மை கிரகங்களின் நாயகராகக் கருதப்படும். உன்னதமான நிலையை அளிக்கும் எண்ணாகத் துலங்குவது ஒன்று. பொதுவாக 1, 10, 19, 28ம் தேதிகளில் பிறந்தோர்க்கும், கூட்டுத் தொகை அதாவது விதி எண் ஒன்று வருவோர்க்கும், விளைவு ஒன்று வருவோருக்கும், பெயர் ஒன்றில் வருவோருக்கும் இக்கிரகத்தின் தன்மைகள் காணப்படும். ஆனால் ஒன்றைமட்டும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது பிறந்த திகதியோ, விதி எண்ணோ, விளைவோ, அல்லது பெயர் எண் மட்டுமோ, எமது வாழ்வை நிர்ணயிப்பது அல்ல. பிறந்தது ஒன்றாயின் அத்துடன் இணையும் விதி எண், விளைவெண், பெயர் எண், வாழும் நாட்டு எண், உறவாடும் நண்பர்களின் எண், துணைவன், துணைவியரின் எண்களும், சேர்ந்தே ஒருவரின் வாழ்வை நிர்ணயிக்கும். ஆனாலும் ஒன்று ஆதிக்கம் உள்ளவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் சரி, எந்த ஒரு சமூகத்தில் வாழ்ந்தாலும் சரி, குடும்பத்திலும் சரி, நண்பர்கள் மத்தியிலும் சரி முக்கியமானவர்களாகக் கருதப்பட்டு அவர்கள் வாக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களும் தாம் சொல்வதே சரியென வாதாடித் தமது சொல்லை நிலைநாட்டுவார்கள். அதிகமாக அரசியல் ஈடுபாடு இவ்வெண்காரர்களுக்கு அதிகமாகக் காணப்படும். வாழ்க்கையில் பிரகாசம், நேர்மை, கம்பீரம், சிறப்பான நடை உடை எல்லா சுகங்களையும் திருத்தியுடன் அனுபவிப்பார்கள். இவர்கள் செலவு



செய்வதிலுல் பின்நிற்பதில்லை. மனதில் தோன்றும் யாவற்றையும் இலகுவில் வெளியிட்டுவிடுவார்கள். இவர்களுக்கு அரசியலில்தான் அதிஸ்டம் அதிகமுண்டு. கூட்டு எண்ணோ அல்லது விளைவெண்ணோ 8 டாக அமைந்தால் அரசியல் ஆதிக்கம் மிக அதிகமாகக் காணப்படும்.

10ம் திகதியில் பிறந்தவர்களும், கூட்டு எண் 10தாக வருபவர்களும் 10 விளைவாக வருபவர்கள் 10தை எழுதும் பெயரிலோ, அல்லது கூப்பிடும் பெயரிலோ 10 இருந்தால் கூடிய விரைவில் கண்ணாடி அணிவார்கள். முதலாம் எண் ஆதிக்கமுள்ளவர்கள் பிறர் கூறும் அபிப்பிராயங்களை அலட்சியம் செய்வார்கள். இவர்கள் அதிகமாக உரத்த குரலில் தான் பேசுவார்கள். இவர்கள் மிகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகக் காணப்படுவார்கள். ஆகையால் இவர்கள் முயற்சிகள் தடங்கல்கள் இன்றி வெற்றிபெறும். இவர்களை ஆளும் கிரகம் சூரியன். அதாவது சூரியனால் பொதுஜனத்துக்கு நன்மையே அல்லாது சூரியனால் சூரியனுக்கு எதுவித நன்மையும் கிடையாது. இவர்களைப் பொதுமக்கள் புகழ்வார்கள், போற்றுவார்கள். இதனால் இவர்கள் ஒரு மேன்மையான நிலையை அடைவர். இவர்களிடம் சுதந்திர உணர்ச்சி அதிகமானதால் சுலபமாக எவருக்கும் கீழ்ப்படியமாட்டார்கள். சுயகௌரவம் அதிகம் பாராட்டுவார்கள்.

நாம் தனியாக ஒன்றுக்கான குணநலன்களை நோக்குவதைவிட ஒன்றுடன் விதி எண், விளைவெண்கள் சேரும்போது என்ன நிலை ஏற்படும் என்பதை ஆராய்வதே சாலச் சிறப்புடையது. ஏனெனில் பிறப்பெண்ணோ அல்லது விதி எண்ணோ அல்லது விளைவெண்ணோ எம்மைத் தனித்தாழ்வதில்லை. மாறாக திகதி எண், விதி எண், விளைவெண், பெயர் எண் போன்ற நான்கு எண்களுமே எம்மில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி எம்மை வழிநடத்துகின்றன. எனவே, எமது முன்னோடிகளான உலகப் பிரசித்திபெற்ற ஒருசில பெரியாரின் வாழ்க்கை அமைப்புகளை நோக்குதல் நன்றே.

தொழிலாள வர்க்கத்தின் தோழன், பொதுவுடமைத் தத்துவத்தின் பிதா, புரட்சி வீரர் என வர்ணிக்கப் படும் லெனின் :-

தோற்றம் ; 10 - 4 - 1870

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 8 | சனி | வேதனை | |
| விதி எண் | 3 | குரு | போதனை | |
| விளைவு | 8 | சனி | வேதனை | |

இங்கு லெனினுடைய வாழ்க்கையை எண்களைக் கொண்டு ஐந்து அம்சங்களாக வகுத்துப் பார்க்கும்போது இங்கு அவர் பிறந்த திகதி 10தாக உள்ளமையால் சூரிய ஆதிக்கத்தின்கீழ் பிறந்தபோதும் 3 விதி எண்ணாக உள்ளமையால், கூர்மையான அறிவாற்றல் உள்ளவராகவும், பொறுப்புணர்ச்சி மிக்கவராகவும், விளை 8 ஐக் கொண்டு அமைந்த காரணத்தால் சற்றும் பயமற்ற வீரபுருஷராகவும் துலங்கி இருப்பார். இவரது அமைப்பு, 1, 3, 8 ஆகிய எண்களின் ஆதிக்கத்தால் துலங்குகின்றது. இவர் 10ம் திகதியில் பிறந்தபோதும் 3, 8ன் குண அம்சங்களைக் கொண்டும் காணப்படுவார். நிறைந்த நெஞ்சழுத்தமும், துணிவும் மிக்கவராகக் காணப்படுவார்.

இனி நாம், ஒன்றுடன் நான்கு சேர்ந்து வரும் போது அதன் தன்மை எவ்வாறு அமையும் என்பதை நோக்குவோம். அதற்கு விளக்கம் தேடும்முகமாக மக்களின் மனதைக் கொள்ளைகொண்ட பிரதமர் டட்லி சேனநாயக்கா வின் தோற்றத்தை நோக்குவோம்.

தோற்றம் : 19 - 6 - 1911.



| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 7 | கேது | சோதனை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | |
| விதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இங்கு திகதி எண்ணும், விதி எண்ணும் ஒன்று. அதாவது சூரியனுக்குரிய எண், விளைவு 4 ஆக உள்ளது. 4 க்குரிய கிரகம் இராகு. இதன் தன்மை பகை. அதாவது, நண்பர்களோடுசரி, உறவினர்களோடும் சரி எவ்வளவு நன்றாகப் பழகியபோதும், வீண் பகைகள் காலத்துக்குக் காலம் ஏற்படும். எதையும் இவர்கள் மனதில் மறைத்து வைப்பதில்லை. மாறாக வெளி, வெளியாகப் பேசிவிடுவார்கள். பெரியவர், சிறியவர், மூத்தவர், இளையவர் என்ற பாகுபாடு இவர்களிடம் காணப்படமாட்டாது. அரசியல் ஆதிக்கம் படைத்தவர்கள். ஒன்றுக்குமே அடிபணிந்துபோக மனம் ஒப்பமாட்டார்கள். சில்சமயங்களில் உளறுவாயர்களாகவும் விளங்குவார்கள். இரகசியங்களை மனதில் வைத்துக் காக்கத் தெரியாத இவர்கள் எல்லாவற்றையும் அம்பலமாக்கிவிடு வார்கள். வாதிடும் திறமையும் இவர்களிடம் காணப்படும். எந்த ஒரு விடயத்தையும் சரியாக இருந்தாலும் உடன் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நீண்ட வாதாட்டத்தை நடத்துவதில்தான் இவர்களுக்கு இன்பம். வாதாடுவதில் இவர்களுக்கு இவர்களே நிகராவார்கள். எவரையும் எடுத் தெறிந்து பேசிவிடுவார்கள். இவ்வாறு அமைப்பைக்கொண்ட வர்கள், நிதானமாகப் பேசக் கற்றுக்கொள்ளவேண்டும். யாருடன் என்ன ? எப்படிப் பேசுகிறோம் ? இதனால் என்ன விளைவு வரும் என்பவற்றையும், காலம், நேரம், இடம், ஆள் அறிந்து தமது வார்த்தைகளைக் கொட்டவேண்டும். வார்த்தைகளைக் கொட்டினால் மீண்டும் அள்ளமுடியாது என்பதை இவர்கள் உணரவேண்டும்.

''யார்காவராயினும் நா காக்க • காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு''

என்ற குறலின் மகத்துவம் அறிந்து பேசப் பழகிக்கொள்ள வேண்டும். தமக்கு வரப்போகும் நற்பயன்களைத் தமது வாயால் இழப்பர். பகைவர்களை வாயாலேயே தேடிக் கொள்வர். மமதையான பேச்சுக்களால் மற்றவரின் கோபத்துக்குள்ளாவர். வாயால் தமது காதலி அல்லது காதலனை இழப்பர். திருமணம் செய்யாது அல்லல் உறும் நிலைமையும் ஏற்படலாம்.

இனி ஒன்றுடன் ஆறு, இரண்டு சேர்ந்துவந்தால் எவ்வாறு அமையும் என்பதை நோக்குவோம்.

1857ல் இந்தியப் புரட்சியில் முன்னின்று போராடிய ஜான்சி ராணிலக்ஷ்மிபாய் :-

தோற்றம் : 19 - 11 - 1835.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 3 | குரு | போதனை | |
| வருட எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இங்கு ஒன்றுடன், இரண்டும் ஆறும் இணைந்து காணப்படுவதால், போராட்டம், புரட்சிகளில் முன்னிக்கும் தன்மையைக் கொடுக்கும். 19ல் வரும் ஒன்று துரிதமாக இயங்கும் சக்தி படைத்தது. இவ்வாறான அமைப்பு உடையவர்கள், சிறந்த கற்பனாவாதிகளாகவும், கலைஞராகவும், போராட்டப் போர்வழிகளாகவும் காணப்படுவர், அதேவேளையில் விதியில் இரண்டு அமைந்திருப்பதால், இவர்கள் வாழ்வில் இருபதாவது வயதுக்கும், இருபத்தோராவது வயதுக்கும் இடைப்பட்ட காலத்தில், ஆணையின் பெண்ணாலும், பெண்ணையின் ஆணாலும் ஏமாற்றப்பட்டு, வாழ்க்கையில் துன்பத்தை அனுபவித்து, வாழ்வில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்துவர். 20 தொடக்கம் 21ம் வயது வரை இவர்கள் அவதானமாகத் தமது வாழ்க்கையை நடத்தினால் இவ் ஆபத்தில் இருந்து ஓரளவு தப்பமுடியும். இவ்வயதில் சிறந்த பாதுகாப்பு இருப்பது அவசியம். பின்பு 24, 25, 27, 28 போன்ற வயதுகளில் படிப்படியான நன்மைகள் ஏற்படும். எதிர்பாராத அதிஸ்டங்கள், பெரியோர் உதவி என்பன வாழ்வில் தாமாகத் தேடிவரும். விளைவை ஒட்டிப் பெயரும் அமைந்தால் நல்ல அதிஸ்டசாலிகளாகத் துலங்குவர்.



இனி எட்டாம் எண்ணும், ஒன்பதும் இணைந்து வரும்போது நிலையை நோக்குவோம்.

ஆபிரிக்காக் கண்டத்தைக் கண்டுபிடித்த முதல்வன், அங்கு விக்டோரியா நீர் வீழ்ச்சியைத் தேடிக்கண்ட இஸ் கொட்லன் தேசத்தவர் டேவிட் லிவிங்ஸ்டன் :-

தோற்றம் : 19 - 3 - 1813.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 4 | இராகு | பகை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | |
| விதி எண் | 8 | சனி | வேதனை | |
| விளைவு | 9 | செவ்வாய் | சாதனை | |

இவ்வாறான அமைப்பை உடையோர் சரியான நெஞ்சழுத்தக்காரராகவும், மிக ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்பவர்களாகக் காணப்படுவார்கள். சூத்திரமான மூளை காணப்படும். விளையாட்டு வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும், நிமிர்ந்த கம்பீரமான தோற்றம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்கள். அதிகாரத்தால் மற்றவரை அடிபணியவைக்க முயல்வார்கள். ஆனால் தன்னிலும் திறமைவாய்ந்தவர்களுக்கு அடங்கிப்போவார்கள். நீண்ட கடல் பிரயாணங்களை மேற்கொள்வார்கள். இதனால் பண

மும், பொருளும், புகழும் பெறுவார்கள். மற்றவர்களை அலட்சியம்பண்ணிக் கிண்டல்செய்து பேசும் பாணி இவர்களிடம் காணப்படும். இதை இவர்கள் விலக்கிப் பழக வேண்டும். சிறந்த ஊக்கமும், பிரயாசையும் உடையவர்கள். நிறைய சம்பாதித்தபோதும், வரவைவிட செலவை அதிகமாகவே மேற்கொள்வார்கள். எனவே, செலவைக் குறைத்துப் பழகவேண்டும். எதையும் தாங்கும் இதயம் படைத்த இவர்கள் எதற்கும் அஞ்சாமல் நெஞ்சை நிமிர்த்தி நின்று போராடும் ஆற்றல் படைத்தவர்கள். இவர்களுடன் சவால் விடுபவர்கள் தோற்று பின்பு இவர்களிடம் சரண் அடைந்துவிடுவார்கள். சூத்திரமான அறிவாற்றலால் ஒவ்வொருவரையும் நுணுக்கமாக அறிந்து, கவர்ந்துவிடுவார்கள். பெயரும் ஒழுங்காக அமைந்துவிட்டால், தாம் வாழும் சமூகத்தில் பேரும் புகளோடும் துலங்குவர் என்பதில் ஐயமில்லை. மதுவுக்கோ அல்லது மாதுக்கோ அடிமையானால் மீள்வது மிகக் கஷ்டமாக அமையும். எனவே தம்மை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துப் பழகவேண்டும்.

இனி ஒன்றுடன், ஏழு இணையும்போது ஏற்படும் நிலைபற்றி நோக்குவோம். சிறந்த கல்விமானும், கத்தோலிக்க அறிஞருமான கலாநிதி அதி. வண. பிதா. பீட்டர்பிள்ளை.

தோற்றம் : *19 - 10 - 1904.*

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| வருட எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விதி எண் | 7 | கேது | சோதனை | |
| விளைவு | 7 | கேது | சோதனை | |

இங்கு ஒன்றுடன் ஏழு விதியாகவும், விளைவாகவும் காணப்படுவதால், கேது ஏழுக்குரிய கிரகம். இதன் தன்மை சோதனை வாழ்க்கை. தமக்குள்ளாகவே பெரும் சோதனை நிறைந்த வாழ்க்கையாகக் காணப்படும். இவர்



களுக்குத் திருமண வாழ்வு அமைவது கடினம். அப்படி அமைந்தாலும் பிரச்சனையாகவே காணப்படும். பிரிவினை இறப்பினால் விதவைக்கோலமடைதல் அல்லது விவாகரத்தை மேற்கொள்ளுதல், குழந்தைச் செல்வம் அற்ற நிலை. எனவே இவ்வாறான அமைப்புள்ளோர் நாட்டுக்கு நலன்புரியும் புனிதத் தொண்டை மேற்கொள்வது நல்ல பயனைத்தரும்.

இனி ஒன்று எண்ணுக்கான ஆதிக்கம் உள்ளவர்கள் தமது பெயரை ஒன்றில் மாற்றுதல் நலன்தரும். விதி எண் அல்லது விளைவு ஒன்று வருமானால் ஒன்றில் பெயரை வைக்கலாம். அத்துடன் நாலாம் இலக்கம் விளைவு அல்லது விதியாக வருபவர்களும் தமது பெயரை ஒன்றுக்கு மாற்றித் தமது வெற்றிகளை நிலைநாட்டமுடியும். எனவே, ஒன்று வரும் எண்களுக்கான தனிப்பட்ட பலன்களை ஆராய்தல் மிக நன்று. அதற்குமுன்பு ஆங்கில எழுத்துக்களுக்கான எண்களை நோக்குவோம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | T | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | D | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உதாரணமா :- S P. VIOLET என்ற பெயரை பின்வருமாறு நோக்கின் S. P. V I O L E T
*3. 8. 6 1 7 3 5 4*

$$3+8+6+1+7+3+5+4 = 37.$$

$3+7 = 1.$ சூரியன் - மேன்மை.

இங்கு VIOLET என்று அழைக்கும்போது 8 வரும். முதல் எழுத்துக்கான S. P. ஐச் சேர்க்கும்போது 37 ஆக மாறும். எனவே இங்கு 26 எட்டுக்கான பலனும், 37 ஒன்

றுக்கான பலனும் இணைந்தே பிரதிபலிக்கும் என்பதை மறக்கக்கூடாது. அதுமட்டுமல்ல முதல் எழுத்துகளுக்கான $3+8=11$, $1+1=2$ ஆக வரும். இதன் பலனும் இங்கு சிறிது பிரதிபலித்தபோதும், ஒன்றின் பலன் இரண்டின் பலனை இயங்கவிடாது. காரணம், 1க்குரிய கிரகம் சூரியன், 2க்குரிய கிரகம் சந்திரன். எனவே சந்திரனுக்குத் தனிமையாக இயங்கும் சக்தி இருப்பதில்லை. சூரிய ஒளியில்தான் தங்கி நிற்கின்றது. எனவே இரண்டின் ஆதிக்கம் இப்பெயரில் பிரதிபலிக்க இடமில்லை. இப்பெயர் V என்ற எழுத்தைக் கொண்டு தொடங்குவதால் 6ன் செல்வாக்கைப் பெறத் தவறுவதில்லை. இந்த ஆறு, சாந்தமான வாழ்க்கை, குறைவற்ற வாழ்க்கை நிலை, திருப்தியான மனம், ஒரே நிதானமான வாழ்க்கை இவைகளை இவ்வெண் குறிக்கிறது. இவ்வெண்ணிற்குத் தனித்திருப்பதால் அதிக பலன் கிடைப்பதில்லை. எனவே நாம் பெயரை அமைக்கும்போது முதல் எழுத்துகளைக் கூட்ட வரும் எண், பெயரைக் கூட்ட வரும் எண், பெயர் தொடங்கும் எழுத்தெண், கூப்பிடும்போது பெயர் இடம்பெறும் எண் இவற்றின் பலன்களை ஒத்துநோக்க வேண்டும். சிலவேளைகளில் எழுதும் பெயர் அதிஸ்டமாகவும், கூப்பிடும் பெயர் துர்அதிஷ்டமாகவும் அமைந்து வாழ்வில் இன்னல்களை ஏற்படுத்தித் தவிக்கவைக்கலாம். பெயரை மாற்றும்போது, அவதானமாக மாற்றவேண்டும். அதிகமாக விளைவு எண்ணுக்கேற்பவோ அல்லது விளைவெண்ணுகவோ பெயரை மாற்றுவது மிகுந்த அதிஸ்டத்துக்கு வழிவகுக்கலாம், பிறந்த திகதிக்குப் பெயரை மாற்றுவது அவ்வளவாக நன்மை தரமாட்டா. காரணம், திகதி எண் தாய் தந்தையரின் ஆதிக்கத்திலுள்ள காலகட்டத்தைத்தான் நிர்ணயிக்கின்றது. விளைவெண்தான் நாம் அடையும் ஒவ்வொரு வெற்றிக்கும் தோல்விக்கும் மூலகாரணமாக அமைகிறது. எனவே உங்களுடைய விளைவை முன்காட்டப்பட்ட பிரகாரம் சரியாகச் கணித்து, அதற்கேற்ப பெயரை மாற்ற வேண்டும். பெயரை மாற்றிவிட்டதும் வேலை முடிந்துவிட்டது என இருந்துவிடுவது மடமைத்தனம். அதாவது, தயாராகிய உணவைப் பாத்திரத்தில் இட்டு மேசைமீது வைத்துவிட்டு நான் எனது பசியைத் திர்த்துக்கொண்டேன்



எனக் கூறமுடியாது. அள்ளி உண்டால்தான் அந்த உணவு ஜீரணித்து எமது உடலில் கலந்து பலன்தரும். எனவே பெயர் மாற்றியதும், எந்த எண்ணில் பெயரை மாற்றினீர்களோ அந்த எண்வரும் திகதியிலோ அல்லது அந்த எண் விளைவு அல்லது விதி எண்ணுக வரும் நாளில் முதல் 108 தடவைகள் எழுதிப் பின்பு நாள் தவருது என்ன எண்ணுக்கு உங்கள் பெயரை மாற்றினீர்களோ அந்த எண் அளவு தடவை பெயரை எழுதவேண்டும். அதாவது 37க்குப் பெயரை மாற்றினுல் 37 தடவை நாள்தோறும் விடாமல் எழுதிவர அதன் பலன் உங்களுக்குக் கிட்டும். இனி ஒன்றுவரும் எண்களுக்கான தனிப்பட்ட பலன்களை நோக்குவோம்.

## 10

இவ்வெண்ணைத் தனது பெயரில் கொண்டவர், வாழ்க்கையில் கீர்த்தி அடைவார். வாழ்வில் தன்னம்பிக்கையும், மன உறுதியும் ஏற்படும். வாழ்வில் இடையிடையே அதிஸ்டங்கள் ஏற்படினும் சகடயோகமாகவே காணப்படும். இவர்கள் நேர்மையைக் கடைப்பிடிப்பது அவசியம். மனமகிழ்வான வாழ்க்கை அமையும்.

## 19

இவ்வெண் ஆதவனின் உதயத்தைக் குறிப்பதினுல் இவர்கள் அளவுக்கதிகமான சுறுசுறுப்புடையவர்கள். சிறிது நேரமும் சும்மா சோம்பேறிகளாகக் காலம் கழிக்க விரும்ப மாட்டார்கள். துடுதுடுப்பாகப் பேசுவார்கள். மிக அவசரப் புத்திக்காரர், பின்புதான் யோசிப்பார்கள். இவர்கள் வாழ்வில் அஸ்தமனம் கிடையாது. பொழுது போகப்போக அதிகப்படும். வெளிச்சம்போல இவர்கள் வாழ்வும் பிரபல்யம் அடையும். ஆயிரம் கைகள் இவர்கள் உயர்ச்சியை மறைத்தாலும் மங்காது பிரகாசிப்பார்கள். பதவி, கௌரவம், சந்தோஷம், வெற்றி, செல்வம் எல்லாம் அதிகரித்துக் கொண்டேபோகும். ஒரு திட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் இவர்கள் நல்ல வாழ்க்கைத் துணைவரை அல்லது துணைவியரை அடைவர். என்றும் சக்தி இவர்களைப் பிரியாது.

வயோதிப காலத்திலும் இளைஞர்போல் சுறுசுறுப்புடன் திடசாலிகளாகக் காணப்படுவர். கடைகிவரை வாலிபராகவே திகழ்வர். சுகானுபவங்களில் நேர்மையே இவர்களுக்கு வெற்றி அளிக்கும். நண்பர்களின் ஆலோசனைகளை உடனே ஏற்பது தீமைக்கு வழிகோலலாம். சிறிது யோசனையுடன் நடப்பது நலன்தரும். உதாரணமாக: G O W R I என ஒருவரை அழைக்கும்போது 19 வரலாம். 3+7+6+2+1=19

## 28

வாழ்க்கை ஆரம்பம் உன்னதமாக இருந்தபோது வாழ்வில் திடீர் என அமாவாசை தோன்றலாம். போட்டியும், பூசலும் ஏற்பட்டுப் போராட்ட வாழ்வை ஏற்படுத்தும். கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள் இன்னொருவர் அனுபவிக்கப் போய்ச்சேரும், இந்த எண் வலுவற்ற கிரகமான 2ஐக் கொண்டும், சனியான 8ஐ இணைத்தும் காணப்படுகிறது. சந்திரனும் சனியும் இணைந்து சூரியபகவனுடைய அமைப்பைப் பெறுகின்றன. இரண்டு வீண் அலைச்சல், பிரயாசத்துக்கேற்ப பலன் இன்மை போன்றவற்றைக் குறிக்கும். எட்டு, திடீர் உயர்ச்சியும், அதைத்தொடர்ந்து திடீர் வீழ்ச்சியையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. எனவே 28ல் பெயர் உடையவர்களது விதி எண், விளைவெண் பலம் குறைவாக அமைந்திருந்தால் இன்னல்கள் அதிகமாகக் காணப்படும்.

## 37

இவ்வெண்ணில் பெயர் மாற்றும்போது கவனிக்க வேண்டியது என்னவெனில், மிக உன்னத நிலையில் உள்ளவர்கள் இவ்வெண்ணில் பெயரை மாற்றக்கூடாது. அப்படி மாற்றினுல் கீழ்நோக்கியே தள்ளப்படுவார்கள். ஆனுல் மிக கீழ்த்தரமான நிலையில் உள்ளவர்களையும் இந்த எண் மிக வேகமாக மேல்நோக்கித் தள்ளிச்செல்லும் வல்லமை படைத்தது. மகோன்னத நிலையை அடையச்செய்யும். மிகுந்த வசீகரமளிக்கும். காதலில் வெற்றியைத்தரும். தன் அந்தஸ்துக்கு மேம்பட்டவர்களால் விரும்பப்படுவர். ஆண், பெண்



இருபாலாரிலும் விசேடமான நண்பர்களும், நன்மைகளும் உண்டாகும். பெரிய மனிதர் ஆதரவும். உதவியும் தேடி வரும். வியாபாரத்துக்கு அதிஸ்டமான பங்காளிகள் வந்து இணைவர். பலவித முயற்சியாலும் பொருள் சேரும். எடுத்த காரியம் வெற்றி எனும் முடிவைத் தரும். கவர்ச்சிகரமான நடை, உடை பாவனைகளும், வாக்குச் சாதுர்யமும் உண்டாகும். உன்னதமான நிலையை அடைந்தபின் திருப்தி அடையவேண்டும். பேராசை கூடாது. வீண் அலைச்சலைத் தரும். நன்மைகள் தானே விளைந்து இன்னல்களை இல்லாது அழித்துவிடும்.

## 46

இவ்வெண் 4 ஐயும், 6 ஐயும் கொண்டு ஒன்று என்ற முடிவை நாடி நிற்கிறது. 4ன் கிரகம் இராகு. இதன் தன்மை பகை. ஆறின் கிரகம் சுக்கிரன். இதன் தன்மை ரசனை. இவ்வெண்ணில் பெயர் அமையப்பெறுவோர் வீண் பகையைச் சம்பாதித்தும், அதிஸ்டங்களை அடிக்கடி பெற்றும்கொள்வார்கள். காலம், நேரம், இடம், சந்தர்ப்ப சூழ்நிலை அறிந்து பேசப் பழகிக்கொள்வது நலன்பயக்கும். ஆறின் தன்மை அரச பதவிக்கும் உயர்த்தக்கூடியது. வயது ஏறஏறப் பதவியும், அந்தஸ்தும் உயர்வடையும். இவர்கள் லஞ்ச ஊழல்களில் ஈடுபடாது நேர்மையாகவும், கண்ணியமாகவும் நடந்தால், மேல் அதிகாரிகளின் ஆதரவும் தேடி வந்து இவர்கள் வாழ்வு தானுக மேல்நோக்கி நகரும்.

## 55

இவ்வெண் இரண்டு ஐந்தெண்களைக் காண்டு ஒன்ருக மாறி நிற்கிறது. 5+5=10, ஐந்திற்குரிய கிரகம் புதன். இதன் தன்மை தோழமை. இவர்களுக்கு அதிக நண்பர்கள் வந்து சேர்வார்கள். பிரபல்யமடைய வாய்ப்பு ஏற்படும். பேச்சாலும், அறிவாற்றலாலும் ஆண், பெண் இரு சாராரையும் கவரும் கண்ணியம் இவ்வெண்காரருக்குக் கைவந்த கலையாக மாறிவிடும். பாலியல் உணர்வுகள் சிறிது அதிகமாகப் பிரதிபலித்தபோதும் கட்டுக்கடங்கி செயற்

படும். இவர்கள் தமது மூளையைச் சரியாக உபயோகிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். பிரமிக்கத்தக்க அறிவு வளர்ச்சி ஏற்படும்.

## 64

இவ்வெண் ஆறு, நாலு போன்ற இரு எண்களைக் கொண்டு ஒன்ருக மாறி நிற்கிறது. அது அதிஸ்டத்தைக் காத்துயர்த்தும் தொழில் புரிகிறது. நாலும் பகையைத் தேடித்தரக்கூடியது. மிதமிஞ்சிய கலைஞானம், ஆற்றல், திறமை, மனோவலிமை உண்டாகி செயற்கரிய செயல்கள் புரியச்செய்து கீர்த்தியை உண்டாக்கும். அரசாங்கத்தில் பெரும் பதவியையும் தரும். அதிகார பதவி வகிக்கக்கூடிய நிலையை உண்டாக்கும். யாவரும் பிரமிக்கும் வண்ணம் கிறீடம் அணிந்த அரசன்போல பிரகாசிக்கவும் செய்துவிடும்.

## 73

இது ஏழு, மூன்று போன்ற எண்களை இணைத்துக் காணப்படும் ஒரு அமைப்பாக உள்ளது. ஏழுக்கான கிரகம் கேது. அதன் தன்மை சோதனை. மூன்றுக்குரிய கிரகம் குரு. அதன் தன்மை போதனை. எனவே இவ்வெண் ஆரம்பத்தில் தடங்கல்களையும் சோதனைகளையும் ஏற்படுத்தி பின்பு வெற்றியை நோக்கி இழுத்துச்செல்லும். இவர்களுக்கு அரசாங்க ஆதரவு வந்துசேரும். பொருள் சேரும். நேர்மையைக் கடைப் பிடிப்பது அவசியம்.

## 91

இங்கு ஒன்பதுக்குரிய கிரகம் செவ்வாய். ஒன்றுக் குரிய கிரகம் சூரியன். எனவே இவ்வெண் ஆதிக்கம் பிடிவாத குணம் மிக்கவராகவும், விடாமுயற்சியும் நினைத்ததைச் சாதிக்கும் தன்மையும் படைத்தவராகக் காணப்படுவார்கள். வெளிநாட்டுப் பயணங்கள்மூலம் பொருளும் புகழும் சேரும். சுகவாழ்வு அமையும்.



## 100

இங்கு ஒன்றுடன் இரண்டு பூச்சியங்கள் இணைந்து காணப்படுவதால், பணம் வந்துசேரும். சகட ஓட்டமாக வாழ்க்கை அமையும் திடசங்கற்பத்தை அளிக்கும் எண்ணுகை இது துலங்குகின்றது.

இனி ஒன்றுகிய சூரிய பகவானின் ஆதிக்கம் அதிகம் உள்ளவர்க்கு உண்டாகும் உடல் நோய் - உணவு - மூலிகை என்பவற்றை நோக்குவோம்.

இவ்வாதிக்கம் பெரும்பாலும் உஸ்ணதேகம் உடையவர்கள். குளிமையான உணவு வகைகளை அருந்துவது சுகம் தரும். அனேகமாக முதலாம் எண் ஆதிக்கர்களுக்குக் கண் சம்மந்தமான நோய் ஏற்படுவது சகஜமே. தீராத தலைவலியால் பீடிக்கப்பட்டு அலைமோதுவதும் இவர்களே. 10ம் திகதிகளில் பிறப்போர் சிறு வயதிலேயே கண்ணுடி அணிந்து விடுவார்கள். இவர்கள் தொப்பியோ அல்லது குடையோ இன்றி வெயிலில் அலைவது நல்லதல்ல. தலை முழுகுவதை ஒழுங்காகக் கவணிக்கவேண்டும், வயது போகப்போக இவர்களுக்கு இரத்த ஓட்டம் சம்பந்தமான வியாதிகள் ஏற்பட இடமுண்டு. ஒன்றுடன் நாலாம் எண்ணின் ஆதிக்கம் சேர்ந்து காணப்படுவார்கள். சிறந்த சாப்பாட்டுப் பிரியர்களாகத் துலங்குவர். அறுசுவைமிக்க அலங்காரமான உணவு வகைகளை நாடி அருந்தி இன்புறுவர். இவர்களுக்கு உண்டாகும் நோய்களைத் தடுக்கத் தினந்தோறும் காலையில் ஒரு தேக்கரண்டி தேனை நீரிலோ அன்றிப் பாலிலோ கலந்து அருந்திவரவேண்டும். இவர்களுக்கு அடிக்கடி அஜீரணம் ஏற்படலாம். மிளகைச் சிறிது தமது உணவில் சேர்ப்பது நலன்தரும். உணவருந்தியபின்பு, சிறுதுண்டு வெற்றிலையை வாயில் போட்டுச் சப்புவதும் சிறப்பாகும். சூடான தேகம் உடையவர்கள். ஆதலால் தலைமயிர் அதிகமாக உதிரும். அத்துடன் இளமையில் நரையும் ஏற்படும். எனவே இவர்கள் அடிக்கடி கருவேப்பிலைப் பச்சடியை உணவுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஸ்நானம் தவருது ஒழுங்காக அமைய வேண்டும்.

ஒற்றெண்ணின் ஆதிக்கத்தில் உள்ளவர்களின் அதிர்ஸ்டகாலம், முக்கிய நாட்கள், துரதிர்ஸ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம், நல்காரியம் நிகழும் வயதுகள்.

ஒன்றின் ஆதிக்கம் உள்ளவர்களின் கையை உற்று நோக்கின் சூரிய மேடு உயர்வாகக் காணப்படும். இவர்கள் சரியான அபிப்பிராயங்களேயும் ஏற்க மறுப்பர். மற்றவர் மிரளும் வகையில் உரத்த குரலில் அடக்கும் பாணியில் பேசுவார்கள். உள்ளத்தில் உள்ளதை அப்பட்டமாகக் காட்டி விடுவார்கள். கவர்ச்சியாகவோ, இனிமையாகவோ, நய மாகவோ, சாந்தமாகவோ பேச இவர்களுக்குத் தெரியாது. தற்துணிவு இவர்களிடம் இயற்கையாகவே குடிகொண்டிருக் கும். எதற்கும் நான் என்று முன்செல்வார்கள்.

10ம் எண் பிறப்பெண்ணுகவோ அன்றில் விதி எண்ணுகவோ அன்றில் விளேவெண்ணுகவோ வரப்பெறின் நிதானமாகவும், சாதுவாகவும் நடந்துகொள்வார்கள். மனதில் உள்ளதை வெளியிடாமலும் இருக்கும் சமத்தியம் தெரியும். பழக மனோரம்மியமானவர்கள். ஒன்றுடன் ஐந் தும், மூன்றும் இணைந்து காணப்பட்டால், தமாசாகப் பேசி அனைவரையும் ஆட்கொள்வார்கள்.

19ம் எண்ணே, திகதி எண்ணுகவோ அன்றில் விதி அல்லது விளேவெண்ணுகக் கொண்டு காணப்படுபவர்கள் பார்த்தால் பசுபோலவும், பூந்துபார்த்தால் புலி, சிங்கம் போலவும் காணப்படுவர். வசீகரமான தோற்றம் படைத்த இவர்கள், எளிதில் அனைவரையும் கவர்ந்துவிடுவார்கள். இவ்வெண்ணுடன் ஏழு அல்லது ஆறு இணையுமாயில் நடிப்பு, சங்கீதம், கவிதை புனைதல், நடனம் போன்றவற்றில் சிறந்து விளங்குவர்.

28ஐ திகதி எண்ணுகவோ அன்றில் விதி அல்லது விளேவெண்ணுகக்கொண்டமைந்தவர்கள், பார்வைக்கு அழ காகவும், சிரித்துப்பேசும் சுபாவம் கொண்டவர்களாகவும் காணப்படுவர். சூரிய ஆதிக்கம் இவர்களுக்குக் குறைவாக



உள்ளதால், கண்ணுடி தேவைப்படமாட்டாது. கடுமை யான தன்மையும் குறைந்து காணப்படும். விட்டுக்கொடுக் கும் மனப்பாண்மையும் இளேயோடும்.

ஒன்று எண் ஆதிக்கம் உள்ளவர்கள் 1, 10, 19, 28 திகதிகளிலும், விதி எண் அல்லது விளேவெண் 1, 10, 19, 28 வரும் நாட்களிலுல், தமது நல்ல காரியங்களேச் செய்ய லாம். அனேகமாக இவர்களின் மூக்கிய நாட்கள் 4, 13, 22, 31. இத்திகதிகளிலோ அல்லது விதி எண் விளேவெண் இந்த எண்களேக்கொண்ட நாட்களிலேதான் இவர்களின் வாழ்நாட்களில் நல்ல காரியங்கள் இடம்பெறும்.

இவர்கள் துன்புறும் திகதிகள் 8, 17, 26 வரும் திகதிகளிலும், விதி எண் அல்லது விளேவெண் இவ்வாறு அமையும் நாட்களில் வீண்பிரச்சனேகளும் இன்னல்களும் வாழ்வில் ஏற்படும். இத்திகதிகளிலோ ஏதும் ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கிஞல் அக்காரியம் இழுபட்டுச் சிர மத்தை ஏற்படுத்தும். பிரயாணங்களே இன்நாட்களில் தவிர்த்தல் நன்மை பயக்கும். இத்திகதிகளிலோ அல்லது விதி எண் விளேவெண் இவ்வாறு வரும் நாட்களில் ஏதும் காரியத்தைத் தொடங்கித் தோல்விகண்டால் தொடர்ந்து அது தோல்வியாகவே முடியும்.

இவர்களின் ஆடைகளின் வர்ணம் மஞ்சல் நிறமே மிக்க அதிர்ஸ்டம் தருவதாகும். ஆழ்ந்த மஞ்சல் முதல் இளமஞ்சல்வரை எல்லாம் பொருந்தும். உலோகம் - தங்கம் இவர்களது சரீரத்துக்கு நன்மைதரும். இரத்தினம் : மாணிக் கமே இவர்களுக்கு அதிர்ஸ்டத்தை விருத்தி செய்வதாம். டொபாஸ் (TOPAZ) கற்களும், மஞ்சல் புஷ்பராகமும் சரீர சுகத்தையும், வெற்றியையும் தரும். திங்கட்கிழமை இவர் களுக்குச் சாதகமான கிழமையாக அமையும். 1, 10, 19, 28 களிலும், 4, 13, 22, 31 வரும் வயதுகளிலும் வாழ்க்கை யில் மறக்கமுடியாத நல்ல சம்பவங்கள் நிகழும்.

இவ்வெண் ஆதிக்கரின் விவாகம், நண்பர் தெரிவு. அனேகமாக துணைவனேயோ, துணைவளேயோ, நண்பர்

களேயோ தெரியும்போது பிறந்த திகதியை மட்டுமோ அல்லது விதி எண்ணை மட்டும் கொண்டோ தெரிவு செய்தல் கூடாது. திகதி எண், விதிஎண், விளைவெண் இவற்றிற்குப் பொருந்தும் வகையில் தெரிவு அமையவேண்டும்.

தெரிவுபற்றி சில உதாரணம் மூலம் விளங்கிக் கொள்வது சிறப்பாகும்.

பிறப்பு :- 10 - 4 - 1950 ல் பிறந்த ஒருவருக்கு நண்பரோ அல்லது மனைவியோ தெரிவுசெய்வது எப்படி என்பதை நோக்குவோம்.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | மேன்மை | வாழ்க்கை |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 7 | கேது | சோதனை | |
| விதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இவருக்குப் பொருத்தமான பெண்ணின் அமைப்பு கீழ்க்காணும் வகையில் அமையவேண்டும்.

பிறப்பு :- 22 - 10 - 1954.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 4 | இராகு | பகை | |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 2 | சந்திரன் | மென்மை | |



இப் பொருத்தத்தை நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| திகதி எண் | 1 — 4 | இங்கு ஒன்றுக்கு நாலு நேரடியாகப் பொருந்துகிறது. விதி எண்ணை நோக்கின் ஆணுக்குரிய அமைப்பில் இரண்டாகவும், பெண்ணின் அமைப்பில் விளைவெண் இரண்டாகவும், ஆணின் விளைவு ஆறுகவும், பெண்ணின் விதி எண் ஆறுகவும் காணப் படுவதால் இங்கு பூரண பொருத்தம் காணப்படுகின்றது. |
| மாத எண் | 5 — 5 | |
| வருட எண் | 7 — 5 | |
| விதி எண் | 2 — 6 | |
| விளைவு | 6 — 2 | |

இவ்வாறே கணவன், மனைவி, நண்பர்களைத் தெரிவு செய்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இன்னல்களும் துயரமும் ஏற்படும்.

இன்னும் ஒரு உதாரணத்தை நோக்குவோம்.

| ஆண் | பெண் |
|---|---|
| தோற்றம் : 19-5-1954. | தோற்றம் : 7-5-1957. |

இப்பொருத்தத்தை நோக்கினுல்,

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| திகதி எண் | — | 1 | 7 |
| மாத எண் | — | 6 | 3 |
| வருட எண் | — | 2 | 2 |
| விதி எண் | — | 7 | 7 |
| விளைவு | — | 7 | 1 |

இங்கு பொருத்தம் தரை (X) வடிவமாகக் காணப் படுகிறது. இவ்வாறு பொருத்தம் அமையப்பட்ட தம்பதிகளின் தாய் தந்தையரால் கலகங்கள் ஏற்பட்டு வாழ்க்கையில் பிரச்சனைகள் தோன்றும். நேரடியாகப் பொருந்துவது தான் வரவேற்கத்தக்கது. எனவே நன்பர்களையோ அல்லது

துணைவியாரையோ, துணைவனையோ தெரியும்போது பொருத்தத்தை இலகுவாகக் கணித்துத் தெரிவுசெய்தல் நன்று. இவர்கள் ஒன்று வரும் திகதிகளில் அல்லது விளைவு அல்லது விதி ஒன்று வரும் தினங்கள் அல்லது நான்கு வரும் தினங்களில் அல்லது விதி எண், விளைவெண்ணுக்குப் பொருத்தமான தினங்களில் திருமணத்தை நடத்துவது நன்மைபயக்கும், இவர்களது எண் அமைப்பிற்கு ஏற்பவே குழந்தைகளும் பிறக்கும். சிலவேளைகளில் திருமணம் நடந்த திகதிக்கேற்பவும் திருமணம் நடைபெறும். இவர்கள் அனேகமாக அரசாங்க உத்தியோகமே பார்ப்பார்கள். சிலவேளைகளில் விதி எண், விளைவெண்ணுக்கேற்ப இவர்கள் உத்தியோகங்கள் மாறுபடும். எப்படி ஆயினும் அரசாங்க ஆதரவு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. நான் என்ற எண்ணம் கொண்டு வாழாது மற்றவர்களையும் மதித்து நடக்கப் பழக வேண்டும். ஒன்று ஆதிக்கர் ஊரின் பெயர் கூட்டி ஒன்று வரும் ஊர்களில்தான் வாழவேண்டும் அல்லது நாலு வரும் ஊர் சிறப்புடையது.

## எண் 2 கிரகம்: சந்திரன் தன்மை: மென்மை

**எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்**
**திங்களே போற்றி திருவருள் தருவாய்**
**சந்திரா போற்றி சத்குரு போற்றி**
**சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.**

இவ்வெண் ஆதிக்கர்கள் 2, 11, 20, 29, திகதிகளில் பிறந்தவர்களாகவும், விதி எண் அல்லது விளைவெண் இரண்டாக வருபவர்களுக்கும் இதன் தன்மைகள் காணப்படும். நான் முன்பே குறிப்பிட்டதுபோல ஒருவரை ஒரு எண்மட்டும் ஆளுவதல்ல. திகதி எண், விதி எண், விளைவு, பெயர் எண், அவர்கள் வாழும் ஊரினதோ கிராமத்தினதோ பெயர் கூட்டிவரும் எண்களாலும் ஆளப்படுகின்றார். எனவே இந்த இரண்டின் பொதுவான குணங்களை நோக்கிவிட்டு



இந்த இரண்டுடன் வேறு எண்கள் இணையும்போது எவ்வாறு வாழ்க்கை அமையும் என்பதை நோக்குவோம்.

இரண்டிற்குரிய கிரகம் சந்திரன். இது ஒரு நிறைவற்ற கிரகம். தன்னிச்சையாக இயங்கும் இயல்பு இதற்குக் கிடையாது. சூரியனின் ஒளி இல்லாவிடில் இக்கிரகம் இருப்பதும் உலகோருக்குத் தெரியாமல்போய்விடும். இதற்கு ஒரு நிலையான உருவ அமைப்புக் கிடைப்பதில்லை, வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி போன்ற அமைப்புகளாக மாறும் தன்மை இக்கிரகத்துக்கு உண்டு என்பதை நாம் அறிவோம். இவ்வெண்ணை, பெயரிலோ அன்றி, திகதி எண்ணிலோ, விதி அல்லது விளைவிலோ கொண்டிருப்போர் எவ்வளவு மெய்வருந்தவோ அல்லது பிரயாசை முயற்சியுடன் பாடுபட்டு உழைத்தபோதும் தகுந்த பலனை அடைவதில்லை, இவர்கள் வாழ்க்கை சகடஓட்டமாகவே அமையும். எதையும் தாங்கும் இதயம் இவர்களுக்கு இருப்பதில்லை. நண்பர்களும், பெற்றோரும், உறவினர்களுமே இவருக்கு உற்சாகம் ஊட்டி வழி நடத்த வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் இடிந்துபோவார்கள். இவர்கள் இலகுவில் ஏமாறும் பேர்வலிகள். இவர்களுக்கு எதை எப்போது? எவ்வாறு? செய்யவேண்டும் என்பது தெரிவதில்லை. இதனால் இவர்களின் செயல்கள் மற்றவர்களுக்கு எரிச்சலை மூட்டும். இதனால் மற்றவர்களின் சினத்துக்குள்ளாவார்கள்.

இலகுவில் மனவிரத்திக்குள்ளாகும் இவர்கள், சந்தேகம் நிறைந்தவர்கள். மனவிரத்தியில் தற்கொலை முயற்சியிலும் ஈடுபடமுனைவர். இவர்களின் அமைப்பில் இரண்டுடன் எட்டும் சேர்ந்திருந்தால், திடீர் விபத்து, தற்கொலை போன்றவை வாழ்வில் நேரும். நிதானம் இவர்களிடம் மிகக் குறைவு. காலையில் உற்சாகத்துடனும் சந்தோஷமாகவும் இருப்பவர் பின்னேரம் இனி இல்லை என்ற துயரில் மூழ்கித் தத்தளிப்பார். தனிமையில் அழுது புலம்பித் தனது துயருக்கு அமைதியைத் தேட முயல்வர்.

கற்பனைசக்தி மிக்கவர்கள். வாழ்க்கையை அனேக மாக கற்பனையிலேயே ஓட்டுவர். கற்பனையில் சந்தோஷம் அனுபவிப்பதில் சமர்த்தர்கள். இவர்கள் செய்யும் காரியங் கள் மற்றவர்களைச் சிலநேரங்களில் துன்புறுத்துவதாக அமைந்துவிடும். அதையிட்டு இவர்கள் சிறிதும் கவலை கொள்வதில்லை. இவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். பெண்களாயின், அயலவர்கள் எங்கே போகிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்ன வாங்கிவந்தார்கள்? என்பன போன்ற தகவல்களை ஒளிந்துநின்றுசரி ஆராய்வார்கள். இதையிட்டு மனதில் புழுக்கமும் அடைவார்கள்.

இவர்களின் வாழ்க்கையை, இவர்கள் பிறந்த இடம், இவர்கள் வாழும் சுற்றாடல், இவர்கள் கூடும் நண் பர்களைப் பொருத்து அமையும். தனக்கென ஒரு பாதையோ இவர்களுக்கு இருப்பதில்லை. மற்றவர்கள் செய்வதுபோல தானும் செய்ய முற்படுவதால், தீயவற்றையும் பின்பற்று வார்கள். எதையும் நல்லது, தீயது என்று எடைபோட்டுப் பார்ப்பதில்லை. கால்போன போக்கில் போவார்கள். பொது வாக தன்னம்பிக்கையற்ற இவர்களுக்கு, நண்பர்கள் ஊடா கத்தான் தன்னம்பிக்கை பிறக்கும். இவர்கள் பிறரை நம்ப மாட்டார்கள். எல்லாம் தாமே செய்துமுடிக்கவேண்டுமென எண்ணி, தாமே செய்துமுடிப்பர். இவர்கள் இதயம் மென்மையாகவே இருக்கும். சிறு சத்தம் கேட்டாலும் மேல் சிலிர்த்து பயம் அடைவார்கள்.

பெண்களுக்கு இவ்வெண் ஆதிக்கம் கிட்டிவிட் டாலோ, தொட்டதற்கெல்லாம் அழுது வடித்தவண்ணம் இருப்பார்கள். இவர்கள் சிறு விடயத்தையும் பெரிதாகவே கற்பனை செய்பவர்கள். இவர்களிடம் ஒரு இரகசியத்தைக் கூறிவிட்டால் தமது கற்பனைத் திறனையும் இணைத்து, சோடித்து, பெரிதாகப் புழுகுவார்கள், இவர்களில் பொய் பேசுவோர்களும், ஏமாற்றுக்காரரும் இருக்கும் அதேவேளை யில் தியாகச் செம்மல்களும், உண்மையே பேசும் உத்தமர் களும் காணப்படுகிறார்கள். நிச்சயமாக இவ்வாதிக்கம் உள்ள



வர்கள், இருபது வயதுக்கும், இருபத்தொரு வயதுக்கு மிடையில் வாழ்வில் மறக்கமுடியாத ஒரு சோக நிகழ்ச்சி நிச்சயம் நிகழ்ந்திருக்கும். ஆணையின் பெண்ணாலும், பெண் ணையின் ஆணாலும் இது ஏற்பட்டு இருக்கும்.

20ம் வயது தொடங்கியதும் இவர்கள் மிக அவ தானமாகத் தமது வாழ்வைக் கழிக்கவேண்டும். இல்லா விட்டால் ஏமாற்றத்துக்குள்ளாகித் துன்புறவேண்டியது தான். இவர்கள் மனம் ஒரு இடத்தில் நிலைத்திருப்பதில்லை. குரங்கு கொப்புக்குக்கொப்பு தாவுவதுபோல தாவிய சீராக அமையும். ஒருசாரார் கூறுகிறார்கள் என்று ஒன்றை ஏற்றுக் கொண்டவர், இன்னொரு சாரார் எதிர்க்கும்போது உடனே தனது இலட்சியத்தை மாற்றிவிடுவார்கள். சிறு வயதிலேயே இவர்களை உண்மை உள்ளவர்களாகப் பயிற்றுவிக்கவேண் டும். பயிற்சியில்தான் இவர்கள் வாழ்க்கை தங்கி உள்ளது. பிறருக்கு குறுக்கு வழியான யோசனை சொல்லிக்கொடுப்ப தில் சமர்த்தர்கள். தன்னைக்கண்டு யாரும் பயப்படுவதை அறிந்தால் தான் ஏதோ பெரிய புள்ளி என்பதுபோல் சதா மிரட்டியவண்ணம் இருப்பர். தன்னைக்கண்டு பயப்படாத வர்களிடம் மிகவும் நயமாகப் பழகுவார்கள்.

இவர்களுக்கு மன ஓட்டம்தான் வேகமே ஒழிய கைகால் ஓட்டம் மிகக் குறைவு. இவர்களுக்கு சோம்பல் ஓரளவு உண்டு. குதர்க்கம் பேசுவதில் ஒரு இன்பம் இவர் களுக்கு உண்டு. இவர்கள் தன்னம்பிக்கையை ஏற்படுத்திப் பழகவேண்டும். தற்கொலைக்கான எண்ணங்களுக்கு இடம் கொடுத்தல் ஆகாது.

இனி இரண்டு கலந்த அமைப்புகளை நோக்கு வோம்.

இலங்கை இஸ்லாமிய சமூகக் கல்விக்கு வித்திட்ட வரும், கொழும்பு ஷாஹிரா கல்லூரி ஸ்தாபகரிலொருவரு மான அறிஞர் ஜனாப் சித்திலெவ்வை.

தோற்றம்; *11 - 6 - 1938.*

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| மாத எண் | 8 | சனி | வேதனை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| விதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விளைவு | 8 | சனி | வேதனை | |

இவ் அமைப்பை நோக்கும்போது, விளைவு எட்டாக அமைந்து காணப்படுகிறது. திகதி எண்ணும், விதி எண்ணும் இரண்டாகக் காணப்படுகிறது. சனியும் சந்திரனும் ஒருமித்து இருப்பார்களேயானால், சந்தர்ப்ப சூழ்நிலையும் வலிமை ஊட்டும் பெற்றோரும், நண்பர்களும் அமைந்து விட்டால் நிச்சயமாக மகோன்னத நிலையை அடைவார்கள். ஆனால் திடீர் விபத்துக்கள் ஏற்படும். கவனமாக இருக்கவேண்டும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் ஏற்பட்டுப் புகழ்பெறுவர்.

இனி இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்.

கிராமபோன், மின்சாரம், பல்ப் ஆகியவற்றைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன்.

தோற்றம் : 11 - 2 - 1847.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| மாத எண் | 4 | இராகு | பகை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | வாழ்க்கை |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 7 | கேது | சோதனை | |

இங்கு இவ்வமைப்பில் இரண்டு திகதி எண்ணாகவும், விதி எண் ஆறாகவும், விளைவு ஏழாகவும் அமைந்துள்ளது. எனவே இங்கு உலகு வியக்கும் அளவில் தமது கற்பனைத் திறனை வெளிப்படுத்தி, சமூகத்தில் மங்காத, மறையாத இடத்தைப் பிடித்துக்கொள்வார்கள். இதே அமைப்புத்தான் பாரத தேசியத்தையும், தமிழையும் ஒருங்கே வளர்த்த புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் அமைப்பும். இவரது தோற்றம்: 11-2-1882. எனவே இந்த அமைப்பையும் நோக்குவோம்.



| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 7 | கேது | சோதனை | |

இவ்வமைப்பில் விளைவு ஏழாக அமைவதால், குடும்ப வாழ்க்கை இன்பகரமாக அமையமாட்டாது. வாழ்க்கை சோதனை நிறைந்ததாகக் காணப்படும். எழுத்துத் திறமை ஏற்படும். விதி ஆறாக உள்ள காரணத்தால் ஆய கலைகள் 64ல் எதை எடுத்தாலும் அதிஸ்டமாக அமையும். வாழ்வில் எதிர்பாராத அதிஸ்டங்கள் ஏற்பட்டிருக்கும். இயற்கையை இரசிப்பதும் அழகிய பொருட்களில் தம்மை மறந்து, கற்பனை உலகில் திளைத்து இன்பம் காண்பதும் இவர்களின் முக்கிய பண்பாக அமைந்திருக்கும். கலை ஆர்வம் மிக்க இவர்கள், எவரையும் கவரும் தோற்றம் படைத்தவர்கள். அழங்காரமான ஆபரணங்களை வினோதமாக அணிந்து மகிழ்வர். ஆராய்ச்சி இவர்களிடம் நிறைவாகக் காணப்படும். பொருளாதார வசதிகள் குறைவாக இருந்த போதும் ஊண், உடை, உறையுள் இவற்றிற்குக் குறை ஏற்பட்டிருக்காது. கற்பனையிலும், கவிதைகளிலும் இன்பம் காண்பார்களே அல்லாது நெஜமாகக் குடும்ப வாழ்க்கை இன்பமாக அமையாது. சமூகத்தின் நலனுக்காகவும் சீர்திருத்தத்திற்காகவுமே இவர்களது வாழ்நாள் கழியும். ஏதோ ஒருவகையில் சமூக உயர்ச்சிக்கு வித்திட்டுச் செல்வார்கள்.

இனி நாம், பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த அண்ணல் மகாத்மா காந்தியின் அமைப்புபற்றி நோக்கு வோம்.

தோற்றம் : 2 - 10 - 1869.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | மென்மை | வாழ்க்கை |
| மாத எண் | 3 | குரு | போதனை | |
| வருட எண் | 8 | சனி | வேதனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இங்கு இவ்வமைப்பில் திகதி எண் இரண்டாகவும், விதி எண் ஒன்பதாகவும் - விளைவு நான்காகவும் காணப்படு கிறது. விளைவு பகையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இவரது வாழ்வில் பகைவர்கள் அதிகமாகக் காணப்பட்டிருப் பார்கள். போராட்டமாக வாழ்க்கை அமைந்திருக்கும். விதி எண் 27 ஆக அமைவதால் புரட்சிகரமான செயல்களில் இறங்கித் தங்களது இலட்சியத்தை எந்த வழியில் அடைய முடியுமோ அந்த வழியில் அடைவர். உயிரைக்கூடத் துச்ச மாக எண்ணிப் போராட்டத்தில் குதிப்பர். காந்திமகான் சிறுவயதில் கோழையாகத்தான் இருந்தார். வளரவளரத்தான் அவரது திறமை வெளிப்பட்டது. இரண்டாம் எண் ஆதிக்கர் எழிய வாழ்க்கையைத்தான் விரும்புவார்கள். ஆனல் இவரது புரட்சிகரமான போராட்டத்திற்குக் காரணம், விதி எண் ணை 27 = 2 + 7 = 9 என்றுதான் கூறவேண்டும். இவ் ஒன்பதிற்கு மற்றைய எண்கள் எல்லாவற்றையும் அடக்கி ஆழும் தன்மை உண்டு. ஒன்று தொடங்கி ஒன்பது வரை உள்ள எண்கள்தான் கணிதத்தை நிர்ணயிக்கின்றன. அதே போல அவ் ஒண்பது எண்களே மனித வாழ்க்கையையும் வரையறுக்கின்றன. இவ் ஒண்பது எண்களைக்கொண்டே ஏனைய எண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எண்களிலும் இந்த ஒன்பது எண்ணுக்கு மற்றைய எட்டு எண்களையும் தம்முள் அடக்கி ஆளும் வல்லமை உண்டு. தமது புத்திசா தூரியத்தாலோ, சூத்திரமான மூளையாலோ, கம்பீரமான தோற்றத்தாலோ, பேச்சு வன்மையாலோ, செயற்பாட்டாலோ கவர்ந்து ஆளும் தன்மை படைத்தவர் களாகக் காணப்படுவர். ஆதாவது, ஒன்பதுடன் ஒன்பதைக் கூட்டினுல் ஒன்பதே வரும். ஒன்பதை ஒன்பதால் பெருக்கி ஞல் ஒன்பதே வரும். ஒன்பதுடன் எந்த எண்ணைக் கூட்டி ஞலும் அதே எண் திரும்பிவரும். இன்னும்மொரு அதிசயம் யாதெனில், ஒன்பதை எந்த எண்ணுல் பெருக்கினுலும் ஒன்பதுதான் திரும்பிவரும். இதை நாம் நோக்குவோம்.

| | |
|---|---|
| $9+9=18=1+8=9$ | $9\times 1=9$ |
| $9\times 9=81=8+1=9$ | $9\times 2=1+8=9$ |
| $9+1=1+0=1$ | $9\times 3=2+7=9$ |
| $9+2=1+1=2$ | $9\times 4=3+6=9$ |
| $9+3=1+2=3$ | $9\times 5=4+5=9$ |
| $9+4=1+3=4$ | $9\times 6=5+4=9$ |
| $9+5=1+4=5$ | $9\times 7=6+3=9$ |
| $9+6=1+5=6$ | $9\times 8=7+2=9$ |
| $9+7=1+6=7$ | |
| $9+8=1+7=8$ | |

மேலே காட்டப்பட்ட இந்தச் சக்தி இந்த ஒன்ப துக்கு மட்டும்தான் உண்டு. வேறு எந்த எண்ணுக்கும் இவ்வாருன வலிமை கிடையாது. எனவே இங்கு மகாத்மா காந்தியின் புரட்சிகரமான இச்செயற்பாட்டுக்கு ஒன்பது தான் மூலகாரணம் என்ருல் மிகையாகாது. நாலு விளை வாகக் காணப்படுவதால் பகையை அவரது வாழ்நாளில் நிறைவாக அனுபவித்தும் இருப்பார் என்பதில் சந்தேக மில்லை.

இனி 40 வருடங்கள் சிங்களப் படங்களில் நடித்து இலங்கையில் கவிக்குயில் எனப் புகழ்பெற்ற ருக்மணிதேவி யின் அமைப்புப்பற்றி நோக்குவோம்.

தோற்றம் : 20 - 1 - 1924.

| எண் | | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | மென்மை | வாழ்க்கை |
| மாத எண் | 3 | குரு | போதனை | |
| வருட எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இங்கு இவ்வமைப்பில் திகதி எண் இரண்டாகவும், விதி எண் ஒன்ருகவும், விளைவு ஆருகவும் அமைந்த காரணத்தால் அதாவது ஆறு விளைவாக வந்து இருப்பதுதான் இங்கு முக்கியம். ஆறுதான் எண்களிலேயே அதிஸ்டம் மிக்கது. கலைகளினுல் வாழ்வில் புகழ் ஈட்டுவர். இங்கும் ருக்மணிதேவி கலை உலகில்தான் தனது பேரையும், புகழையும் நிலைநாட்டி உள்ளார். விதி எண் ஒன்ருக அமைந்ததால் மேன்மையான ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. எனவே இரண்டைப் பிறப்பு எண்ணுகக்கொள்வது முக்கியமல்ல. அந்த அமைப்பின் விதி எண், விளைவெண்தான் முக்கியமாக அமையும்.

இனி, இரண்டு பெயர்களை ஆழும்போது எவ்வாறு அமையும் என்பதை நோக்குவோம்.

## 11

இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள், இறை நம்பிக்கை படைத்தவர்கள். இரண்டு ஒன்றுகளைக்கொண்டு $1+1=2$ டாக மாறும் அமைப்பை இது காட்டி நிற்கின்றது. சூரிய உதவிகொண்ட சந்திர அமைப்பாக இது காணப்படுகிறது. இவர்கள் சந்தேகத்தைத் தவிர்த்து நம்பிக்கையை வளர்த்துப் பழகவேண்டும். வாழ்வில் இலாபம் அடையும் அதேவேளையில் நண்பர்களாலும், உறவினர்களாலும் எதிர் பாராத ஏமாற்றத்தையும் எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம்.



## 20

இவ்வெண் இரண்டையும், பூச்சியத்தையும் கொண்டு காணப்படுகிறது. போராட்டத்தைக் குறிக்கும். நல்ல நோக்கத்துக்காகப் போராடின் வெற்றியையும், தீய நோக்கம் உடையவர்களாயின் தீமையையும் விளைவிக்கும். இவ்வெண்ணும் போராட்டத்துக்கு வழிவகுக்கும் ஒரு எண்ணுகும். விடுதலைக்காக இவ்வெண் ஆதிக்கர் போராடுவார்கள். சிலவேளைகளில் மற்றவர்க்கு இன்னல் இழைக்கும் காரியங்களிலும் ஈடுபட்டு அல்லல் உறுவர்.

## 29

இந்த எண் இரண்டையும், ஒன்பதையும் இணைத்துக் காணப்படுவதால், சந்திரனதும், செவ்வாயினதும் ஆதிக்கத்தைக் குறிக்கும். ஆரம்பப்படி தோல்வியாயினும் விடா முயற்சியால் வெற்றியீட்டுவர். பிடிவாத குணம் இவர்களிடம் காணப்படும். அடிபணிய மனம் இடம்கொடாது. உறவினர்களின் பகையை வீணுகச் சம்பாதிப்பார். நேற்று போற்றியவர் இன்று தூற்றும் நிலைக்கு உள்ளாவார். இல்லற வாழ்க்கை பகடைப் பணயமாக அமையும்.

## 38

இவ்வெண் மூன்றுக்கான குருவையும், எட்டிற்கான சனியையும் ஒன்றிணைத்து சந்திர ஸ்தானத்தை அடைவதால், ஆரம்பத்தில் நேர்மையாக இருப்பதால் பேரும், புகழும், பொருளும் வந்துசேரும். ஆரம்பம் நன்ருக அமைந்து முன்னேறிய இவர்கள் திடீர் என வாழ்க்கையில் எல்லாம் இழந்து வறுமை நிலையை அடைந்து வேதனை அடைவர்.

## 47

இவ்வெண் இராகுவையும், கேதுவையும் இணைத்த ஒரு அமைப்பாகக் காணப்படுகிறது. இவர்கள் வாயாடிக

ளாக இருப்பார்கள். சமூகத்தில் ஆதரவு நிலவியபோதும் பகையையும் வளர்த்துக்கொள்வார்கள். இவர்கள் மிக வேகமாக வாழ்க்கையில் முன்னேறுவார்கள். தன் முன்னேற்றத்திலேயே கண்ணும் கருத்தாக இருந்து சாதனையை நிலை நாட்டுவர்.

## 56

இவ்வெண் புதனையும், சுக்கிரனையும் தன்னில் கொண்டதாகக் காணப்படுவதால், ஜனவசியம் உண்டாகும். கவர்ச்சிகரமான தோற்றம் அமையும். வியாபாரம் வெற்றியைக் கொடுக்கும். புத்திக்கூர்மையும், கலைகளில் நாட்டமும், கலைத்துறையில் உயர்ச்சியும் உண்டாக்கும். சமூகத்தில் பெரியவராகப் போற்றி மதிக்கப்படும் அதேவேளையில் உள்மனதில் ஏதாவது ஒரு குறை இருந்து உள்ளத்தை அழுத்தியவண்ணமே இருக்கும். மாயம்போல திடீர் என செல்வமும் சிறப்பும் அளியநேரிடும்.

## 65

இவ்வெண் சுக்கிரனையும், புதனையும் இணைத்த ஒரு அமைப்பாகத் துலங்குகிறது. செல்வாக்கு உள்ளவர்களின் ஒத்தாசையும், ஆதரவும், உதவியும் கிட்டும். சந்தோஷகரமான திருமணம் நடக்கும். ஆனால் பிற்பகுதியில் மன விரக்தியும், மனப்பயமும் உண்டாகி நிம்மதியைக் கெடுக்கும். சில ஆபத்துக்களும், வெட்டுக் காயங்களும் ஏற்பட்டு அல்லல் உறுவர்.

## 74

இவ்வெண் கேதுவையும், இராகுவையும் தன்னில் கொண்ட அமைப்பாகக் காணப்படுகின்றது. ஏழுக்குரிய கேது ஆத்மீகத் துறைக்கே இட்டுச்செல்லும். சமூகத்தாருடன் பகைமையை இந்நாலு வழங்கும். ஆத்மீக வாழ்வுக்கு நன்மை தரினும், அடிமனதில் ஏதோ ஒன்று இருந்து உறுத்தியவண்ணம் இருக்கும். அமைதி இழந்து அலைமோதும் நிலை காணப்படும்.



## 83

இங்கு சனியும், குருவும் இணைந்து காணப்படுவதால், வாழ்வில் ஒரு கட்டத்தில் உயர்ச்சியைக் கொடுத்து திடீர் என ஒரு வீழ்ச்சியையும் உண்டாக்கும். குரு இணைந்து வருவதால் சில தீமைகளில் இருந்து காத்து, வழி நடத்தினும் இவ்வெண்ணும் மன விரக்தியையே தரும். வீண் சண்டைகளில் முன்நின்று வீண் சிரமம் அடையநேரிடும்.

## 92

இவ்வெண் செவ்வாயையும், சந்திரனையும் தன்னில் இணைத்து காணப்படுகிறது. அதாவது செவ்வாய்க்கும் சந்திரனுக்கும் எப்போதும் போராட்டமே நிகழும். கீரியும் பாம்பும்போல இருவரும் இருப்பதால் இப்பெயரை உடையவர் தன்னில் போராட்டம் மிக்கவராகக் காணப்படுவார். ஒரு கூட்டுக்குள் கீரியையும் பாம்பையும் அடைத்து வைத்ததுபோன்ற நிலை காணப்படும்.

## 101

இங்கு சூரியனையும், பூச்யத்தையும், மீண்டும் சூரியனையும் கொண்டு காணப்படுவதால், வாழ்வில் ஆரம்பத்தில் மேன்மை அடைந்து, பின்பு வீழ்ச்சி உற்று மீண்டும் மேன்மை அடைவர். அரசாங்க உதவி என்றும் கிட்டும். அரச பதவியை வகிப்பர்.

இரண்டாம் எண் ஆதிக்கருக்கு உண்டாகும் உடல் நோய், இவர்களுக்கான உணவு, மூலிகைகள் என்னவென நோக்குவோம்.

இவர்களுக்கு ஜீரணக் கருவிகள், மூத்திரக் காய்கள் சம்பந்தமான நோய்களே விரைவில் ஏற்படும். ஜீரணக் கோளாறுகள், நீரிழிவு முதலியவைகளே இவர்களது வியாதிகள். பெரும்பாலும் இந்நோய் இவர்களைப் பற்றுகிறது.

இவர்கள் சோம்பல் உடையவர்களாகவும், அதிகநேரம் தூக்கத்தில் கழிப்பவர்களாகவும் காணப்படுவர், கண்ணில் நீர் வடிவதும், கண் சம்பந்தமான நோய்களும் ஏற்படும்.

மற்ற உணவுகளைவிட பதார்த்தங்களையே இவர்கள் அதிகமாக விரும்புவார்கள். மிகவும் கண்டிப்பாக இல்லாவிடின் கோப்பி, தேயிலை, சாராய வகைகளை மிதமிஞ்சி அருந்த நேரும். இவர்கள் மதுவுக்கடிமையானல், உழைப்பெல்லாம் மதுவுக்கே என்றாகிவிடும். இவர்கள் பூசணி, பறங்கி, வெள்ளரி, முதலிய காய்களையும், முட்டைகோஸ், முளைக்கீரை மற்ற எல்லாக் கீரைகளையும் வழக்கமாகச் சேர்த்துவருதல் நலம். வாழை, மாதுளை, மாம்பழம், தோடை முதலிய பழங்கள் அருந்துதல் நன்மை பயக்கும். நீரும் சதையும் கொண்ட பழங்கள் நன்மை தரும். இவர்களின் நோயைக் குணப்படுத்தும் மூலிகை வல்லாரை. இதை உணவுடன் சேர்த்துவர உடல் உஸ்ணத்தை நீக்கி, நீரிழிவு வராமல் தடுத்து, ஆயுளைப் பலப்படுத்தும். இப்பச்சிலைக் காம்பில் தோன்றும் வெள்ளையான பாகம் சக்கரையை சிறுநீரில் இருந்து பிரிக்கும் வலிமை உடையதென ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். முருங்கைக் கீரையும், தாமரைக் கிழங்கும் இவர்களுக்கு நன்மை தரும். தவிடு உள்ள அரிசியையே பாவிக்கவேண்டும். தவிடு நீக்கிய அரிசியைத் தவிர்த்தல் நலன்தரும்.

இனி, இரண்டாம் எண் ஆதிக்கரின் அதிர்ஸ்ட காலம், முக்கிய நாட்கள், துரதிர்ஸ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் போன்றவற்றைக் கவனிப்போம்.

2, 11, 20, 29 திகதி எண்ணாகவோ அல்லது விதி, விளைவு எண்ணாகவோ வரின் அவ்வாதிக்கர் மிதமிஞ்சின கற்பனை சக்தியும் சிறிது பயந்த சுபாவமும் உள்ளவர்களாகக் காணப்படுவார்கள். ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். இவர்களுடன் இணைந்து காணப்படும் ஏனைய எண்களைப் பொறுத்து இவர்களது சுபாவம் அமைந்திருக்கும். இவர்களுக்குப் பெற்றோர் சிறுவயதிலேயே நல்ல நம்பிக்கையை



ஊட்டவேண்டும். இவர்கள் பேராசையை நீக்கி வாழப் பழக வேண்டும். சிறுவயதில் களவெடுப்பதைப் பழகிவிட்டால் இவர்கள் இப்பழக்கத்துக்கு அடிமையாகிவிடுவார்கள்.

29ம் திகதி பிறப்பெண்ணாகவும் அல்லது கூட்டு எண் அல்லது விளைவு 29ஆக அமைந்துவிட்டால் வீண் விதண்டாவாதங்கள் புரிவர். சாந்தியையும், சமாதானத்தையும் விரும்பமாட்டார்கள். இவர்கள் மற்றவர்களைச் சிரமப்படுத்தவே பிறந்தவர்கள். சதா வீண் சண்டைகள் போட்ட வண்ணமே இருப்பார்கள். ஏன் சண்டை போடுகிறோம் என்று நினைக்காமலே சண்டை போடுவார்கள். நண்பர்கள் தன்னை ஏமாற்றுவதாகக் கூறி தான் நண்பர்களை ஏமாற்ற எத்தனிப்பர். பிறருக்கு உதவிசெய்ய இவர்கள் இலகுவில் ஒப்புவதில்லை. சரியான சுயநலவாதிகள். யாரையாவது காக்காய் பிடித்து பேரும் புகழும் தேடி மகிழ்வர், ஆனல் கோழை உள்ளம் படைத்தவர்கள். உள்ளூர சரியான பயந்தாங்கொள்ளிகள். வெளியில் பயமற்றவர்கள்போல நடிப்பார்கள், எதிரி மிஞ்சினல் உடன் பயந்துவிடுவார்கள். யாரும் இவரைக்கண்டு பயந்தால், அவர்களை மேலும் மேலும் வற்புறுத்துவர். சிறு பிரச்சனைகளையும் பெரிதாக்குவர். சிறுவயதில் தாய்தந்தையர் சரியான முறையில் குழந்தையை வழக்கத் தவறினல், வளர்ந்து அப்பிள்ளை நாட்டுக்குத் தீங்கினையே செய்யும். நல்ல நண்பர்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். தீய சகவாசங்களைத் தவிர்க்கவேண்டும்.

அதிஸ்ட திகதிகள் :-

7, 16, 25 திகதிகளிலும் கூட்டு எண்ணாகவோ, விதி எண்ணாகவோ இவை வந்தால் அன்று அதிர்ஸ்டமாக அமையும். நல்காரியங்களை அன்று செய்வது சிறந்தது. இதைவிட 1, 10, 19, 28 திகதிகளும் சாதகமாக அமையும். இருப்பினும் தன்னையாளும் ஏனைய கிரகங்களுக்கேற்ற அதிர்ஷ்ட தினங்களைத் தெரிவது நன்மைபயக்கும். இரண்டைவிட வலிமையான கிரகம் அன்னாரை ஆளுமாயின் இரண்டாம் எண் ஆதிக்கம் குறையும். உதாரணமாக 20ம் திகதி பிறந்தவருக்கு ஒன்று விளைவு வந்தால் அவர் ஒன்றில் பெயரை

வைத்துக்கொண்டால் அவருக்கு இரண்டின் ஆதிக்கம் இருந்தபோதும் மிகக் குறைவாகவே காணப்படும். அதாவது ஒரு மெழுகுவர்த்தி எரிந்துகொண்டிருக்கும் இருட்டறையில், பெற்ரோள்மக்ஸ் ஒன்றைக் கொழுத்திவைத்தால் மெழுகுவர்த்தியின் ஒளி அங்கு பிரகாசிப்பதில்லை. இரண்டுக்குரிய கிரகம் சந்திரன். ஒன்றுக்குரிய கிரகம் சூரியன், சூரியனின் ஒளியில்தான் சந்திரன் இயங்கவேண்டும். எனவே இரண்டுக்குரிய சக்தி குறைந்து காணப்படலாம்.

இவர்களுக்கு துர்அதிர்ஷ்ட தினங்கள் 8, 9, 18, 26, 27. திகதி எண்ணுகவோ அன்றில் விதி எண்ணுகவோ, விளைவெண்ணுகவோ வரும் நாட்களில் நல்ல காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும். ஏதும் தீமைகள் இவ்வாறான நாட்களில்தான் ஏற்படும். இவ்வாறான நாட்களில் எடுக்கும் முயற்சிகள் தீமையாக முடியும்.

இரண்டாம் எண் ஆதிக்கருக்கான நிறம்:

இலேசான பச்சை வர்ணமே மிகமிக அதிர்ஷ்டமானது. இவர்கள் வாழும் இடங்களிலுள்ள் சுவர்களிலோ அல்லது மற்ற சூழ்நிலைப் பொருட்களிலோ இந்நிறம் இருந்தால் உற்சாகத்தையும் சாந்தியையும் கொடுக்கும். பச்சை கலந்த வர்ணங்களும், வெளிர் மஞ்சளும், வெள்ளையும், இவர்கட்கு நன்மை தரும். வெள்ளையைவிடப் பச்சையே அதிக வெற்றி தருமாகையால் பச்சை நிறத்தில் ஆடைகளை அணிவது நன்மை பயக்கும். கறுப்பு, சிவப்பு, ஆழ்ந்த நீலம் போன்றவை தீமை விளைவிக்கக்கூடியவை. பொன்னை விட வெள்ளி இவர்கட்கு நன்மை தரும். இரண்டையும் கலந்து உபயோகிக்கலாம்.

இரத்தினம் :-

இரத்தினங்களில் முத்து, (JADE) யேட் என்னும் பச்சை நிறக் கல்லும், அணிகலன்களாகக் கொள்ளின் நன்மை ஏற்படும். வயிறு சம்பந்தமான நோய்கள் நீங்கும். வைடூர்யமும் மிக அதிர்ஷ்டமானது.



இவ்வாதிக்கருக்கு உகந்த தொழில்:

கற்பனை சக்திமிக்க தொழில்கள் எல்லாம் இவர்களுக்கும் பொருந்தும். கூட்டெண் ஆறுக அமைந்துவிட்டால் நிச்சயமாகச் சிறந்த கவிஞுக விளங்குவர். பெயரும் அதற்கேற்ப அமையவேண்டும். இரண்டுடன் இணைந்து காணப்படும் ஏனைய எண்களுக்கேற்பவே தொழில் அமையும் அனேகமாக இரண்டாம் எண் ஆதிக்கம் கதை எழுதுதல், வாதாடுதல், விவசாயம், வியாபாரம் (இரண்டுடன் ஐந்து இணைந்தால் வியாபாரம் நல்ல முறையாக அமையும்) தையல்களை விதம் விதமாக தைப்பர், துணிகளை வெளுத்தல், வர்ணம் பூசுதல், பால் பண்ணைகள் வைத்திருத்தல், தானியங்கள், பழங்கள், பூக்கள், காய்கறி வகைகள் போன்றவற்றை உற்பத்தி செய்தல். இரண்டுடன் எட்டு இணைந்து காணப்படுபவர்கள் விளையாட்டுத் துறையில் உயர்ந்து காணப்படுவர்.

இரண்டாம் எண் ஆதிக்கர், மனைவியையோ அல்லது கணவனையோ அல்லது சிறந்த நண்பர்களையோ தெரிவு செய்வதாயின் இரண்டாம் எண் ஆதிக்கர்கள், ஏழாம் எண் ஆதிக்கரைத்தான் தெரிவு செய்தல்வேண்டும். ஒன்பதாம் எண்காரரைத் தெரிவு செய்தல் கூடாது. ஒன்றும் எண் ஆதிக்கராலும் நன்மை உண்டாகும். இவர்களுக்குக் காதல் வெற்றி தருவதில்லை. காரணம் ஒரு நிலையான மனம் இவர்களுக்து இருப்பதில்லை, இவர்கள் மனம் சதா அலைமோதுவதால், காதலால் கவலை அடைவர். குறிப்பாக 20 வயதுக்கும் 21 வயதுக்குமிடையில் காதலால் ஏமாற்றமடைந்து விரக்தியுறுவர். நிலையான மனம் இல்லாமையால் ''இக்கரைக்கு அக்கரை பச்சை'' என்றே சதா எண்ணி ஏமாறுவர். இவர்கள், ஏழு, அல்லது ஒன்று எண் ஆதிக்கரையே மணம்புரிவது சிறப்புடையதாகும்.

இவர்கள் சந்திர ஆதிக்கராதலால் வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி போன்ற அமைப்புகள்போல இவர்கள் வாழ்வும் சகட ஓட்டமுள்ள வாழ்வாக அமையும். அமைதி காண்பது என்பது இவர்கள் வாழ்வில் முயற்கொம்பாக அமையும். சிறு துயரத்தையும் பெரிதாக்கி

துன்பக் கடலில் மூழ்கித் தத்தளிப்பர். கடவுள் நம்பிக்கையை இவர்கள் வளர்ப்பது நன்மை தரும். நல்ல நம்பிக்கையை வளர்க்காவிட்டால் வாழ்வில் விரக்தி ஏற்படும்.

இரண்டாம் எண்காரரின் விவாகப் பொருத்தம் :

நேரடிப் பொருத்தம். உதாரணமாக, ஆண், பெண்ணுக்குரிய பிறப்பை எடுத்து நோக்கின்,

ஆணின் பிறப்பு :- 7 - 8 - 1958

பெண்ணின் பிறப்பு :- 2 - 10 - 1960

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | 2 | சந்திரன் |
| மாத எண் | 6 | சுக்கிரன் | 3 | குரு |
| வருட எண் | 3 | குரு | 9 | செவ்வாய் |
| விதி எண் | 2 | சந்திரன் | 1 | சூரியன் |
| விளைவு | 9 | செவ்வாய் | 6 | சுக்கிரன் |

இங்கு ஆண், பெண் இருவருடைய அமைப்பையும் நோக்கும்போது கேது ஏழுக்கும், சந்திரன் இரண்டுக்கும் நேரடிப் பொருத்தமுண்டு. விதி எண்ணை நோக்கின், ஆண் இரண்டும், பெண் ஒன்றும் அமைப்பாகக் கொண்டதால் இங்கும் நேரடிப் பொருத்தம். விளைவு ஒன்பது ஆணுக்கும், பெண்ணுக்கு ஆறும் இணைவதால் இங்கும் நேரடிப் பொருத்தம் காணப்படும். இவ்வாறு, மணமக்களுக்குப் பொருத்தம் அமையுமானுல் மனம் ஒத்த காதலர்களாக வாழ்வில் இன்பத்தை அனுபவிப்பர். இன்னும் ஒரு அமைப்பை நோக்குவோம்.

ஆண் பிறப்பு :- 2 - 6 - 1954.

பெண் பிறப்பு :- 1 - 5 - 1957

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 2 | சந்திரன் | 1 | சூரியன் |
| மாத எண் | 8 | சனி | 6 | சுக்கிரன் |
| வருட எண் | 3 | குரு | 5 | புதன் |
| விதி எண் | 9 | செவ்வாய் | 1 | சூரியன் |
| விளைவு | 4 | இராகு | 4 | இராகு |



இங்கு பொருத்தம் நேரடியாகவும், சாதகமாகவும் அமைந்து காணப்படுகிறது. இன்னும் ஒரு உதாரணத்தை நோக்குவோம்.

ஆண் தோற்றம் :- 6 - 5 - 1959.

பெண் தோற்றம் :- 2 - 10 - 1960.

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | 2 | சந்திரன் |
| மாத எண் | 2 | சந்திரன் | 3 | குரு |
| வருட எண் | 3 | குரு | 9 | செவ்வாய் |
| விதி எண் | 8 | சனி | 1 | சூரியன் |
| விளைவு | 1 | சூரியன் | 6 | சுக்கிரன் |

| ஆண் | பெண் |
|---|---|
| 6 | 2 |
| 2 | 3 |
| 3 | 9 |
| 8 | 1 |
| 1 | 6 |

இவ்வாறான பொருத்தம், ஆணுடைய தாய், தந்தையருக்கிடையிலும், பெண்ணுடைய தாய், தந்தையருக்கிடையிலும் பிரச்சினை ஏற்பட்டு, மனக்கசப்புகள் ஏற்படலாம். எனவே துணைவன், துணைவியரைத் தெரியும்போது, மேற்காட்டிய அம்சங்களைக் கவனத்தில் கொண்டு தெரிவது மிகமிக விரும்பத்தக்கது. எனவே இரண்டாம் ஆதிக்கம் உள்ளவர்கள் மேற்காட்டப்பட்ட விதிப்படி தமது துணைவனையோ, துணைவியையோ தேர்ந்துகொள்ளலாம். இனி மூன்றும் எண் ஆதிக்கரைப்பற்றி நோக்குவோம்.

## எண்: 3 கிரகம்: குரு தன்மை: போதனை

"குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்"

3, 12, 21, 30 ஆகிய எண்களைத் திகதி எண்ணுகவோ, அல்லது விதி அன்றில் விளைவு எண்ணுகவோ அமைந்து காணப்படின் இவ்வாதிக்கருக்கான பொதுவான குணும்சங்களை நோக்குவோம். இவ்வெண்ணை ஆளும் கிரகம் குரு. இதன் தன்மை போதனை. அதாவது, இவ்வெண் திகதியிலோ அல்லத விதி, விளைவிலோ அமையப் பெற்ருேர் கல்வியால் முன்னேறுவர். பதினெட்டாவது வயதில் கல்விக்கு முழுக்குப்போட எண்ணுவர். அப்போது மன உறுதியுடன் அவ்விக்கட்டான நிலையைக் கடந்தால் நிச்சயமாகச் சிறந்த கல்விமாஞகத் துலங்குவர். கணித மேதைகளாக வாய்ப்புண்டு. இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்களும் சிறப்பாக அமையின், உலகம் போற்றும் உத்தமராகத் துலங்குவர். கல்விக்குக் குருவை மிஞ்சி செயல்பட வேறு எந்தக் கிரகமும் இல்லை. பெயர் மூன்றில் அமைந்தாலும் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டாகும்.

அதேவேளையில் குடும்பப் பொறுப்பு இவர்கள் தலையில்தான் வந்து சேரும். முக்கியமாக 30ம் திகதியில் பிறந்தோர் தாய் தந்தையருடன் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தால், சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழக்க நேரிடும். இல்லாவிட்டால், தாய் தந்தையர் இருந்தும் பலன் இன்றிக் காணப்படும். அல்லது தகப்பன் உத்தியோகம் இழந்து, நோய்வாய்ப்பட்ட நிலையில் காணப்படுவார். கடவுள் பக்தியும் விசுவாசமுமிக்கவர்கள். ஆனல் வெளியில் காட்டிக்கொள்ளமாட்டார்கள். ஏனைய எண்களும் பெயர் எண்ணும் சரியாக அமைந்துவிட்டால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை என்ற கட்டுக்



கோர்ப்பைவிட்டு விலகமாட்டார்கள். பெயருக்கு மரியாதை செலுத்துவதில் சமத்தர்கள். பார்வைக்குக் கண்டிப்பான தோற்றமளிப்பினும், பழக இனிமையானவர்கள். இவ்வாதிக்கரில் அநேகர் இனிமையாகப் பாட வல்லவர்கள். இசைக்கருவிகளையும் இலகுவாக இயக்கும் ஆற்றல் படைத்தவர்கள். இவர்கள் அநேகமாக ஆசிரியர்த் தொழிலிலேயே ஈடுபடுவர். படிக்காதவர்கள் இயந்திரங்களுடன் தொடர்புடைய வேலையைச் செய்வர்.

கௌரவத்தைப் பெரிதாக மதிப்பவர்கள். எந்தக் கஷ்டம் வந்தபோதும் பிறரிடம் கையேந்த அஞ்சுவார்கள். இதனுல் இவர்கள் கர்மிகள்போலக் காணப்பட்டாலும் குணத்தில் தேவர்கள். பெரியோர் தமக்கிட்ட வேலையை மிக நேர்மையாகவும் திறமையாகவும் செய்துமுடிப்பார்கள். அதேபோல தனக்குக் கீழ்ப்பட்டவர்களும் தமக்கு விசுவாசமாக நடப்பதையே விரும்புவர். நேர்மைக் குறைவாக நடப்பவர்களிடம் இவர்கள் பரிவுகாட்டமாட்டார்கள்.

இவர்கள் வாழ்க்கை படிப்படியாக முன்னேறும். இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்களைப் பொறுத்து இவர்கள் வாழ்வும் பிரகாசிக்கும். சமூகத்தில் நல்ல நாணயமிக்க மனிதர்களாகப் புகழப்படுபவர்கள் இவ்வாதிக்கரே. நல்ல மனச்சாட்சி இவர்களிடம் சதா இயங்கிய வண்ணமிருக்கும். இரக்கசுபாவமிக்கவர்கள். பிறருக்கு உதவி தேவைப்படும்போது, தனக்கு நன்மை வராத போதும் முன் நின்று உதவிபுரிவர். பலனை எதிர்பார்க்கமாட்டார்கள். இவர்களுக்கு வயது ஏறஏற பெரிய மனிதர் உதவிகள் கிட்டும். வெளிநாட்டுப் பிரயாணங்கள், தொடர்புகள் ஏற்பட்டு வாழ்க்கை உயரும். இனி, இத்திகதியில் பிறந்த ஒரு சில பெரியோரின் அமைப்புகளை நோக்குவோம்.

தமிழ் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை ஆக்கியவரும் பன்மொழி வல்லுனருமான, சுவாமி ஞானப்பிரகாசர்:

தோற்றம்: 30 - 8 - 1875.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| மாத எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| வருட எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விதி எண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவு | 7 | கேது | சோதனை | |

எத்தனையோ மொழிகளைப் பயிலும் ஆற்றல் படைத்த சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுக்கு விளைவு 7 ஆக அமைந்த காரணத்தால் குடும்ப வாழ்க்கை இல்லை. ஆனால் நாடு போற்றும் ஒரு நல்ல மகானைக் காணப்படு கிறார். இவ்வாறான அமைப்புள்ளவர்களுக்குப் பாரிய பொறுப்புகள் வந்துசேரும். காதல் தோல்வியிலேயே முடி யும். 23 வயதிற்கு முன்பாகத் திருமணம் செய்தவர்கள் வாழ்க்கையில் தாரம் இழக்கவேண்டிய நிலை ஏற்படும். இறப் பால் தாரமிழக்கலாம் அல்லது ஜீவனும்சம்கோரி பிரிந்து இருக்கலாம் அல்லது ஒன்றாக இல்லாது அந்நிய இடத்தில் வாழலாம். இவ்வாறான அமைப்புடையவர்கள் ஆத்மீகத் துறையில் ஈடுபட்டால் உலகில் ஓர் அழியாத இடத்தை வகிப்பர். இல்லறம் இவர்களுக்கு இனிக்காது. ஆரம்பம் இனித்தாலும் முடிவு கசப்பாகவே அமையும். 'ஏன் என்னை இறைவன் இவ்வாறு சோதிக்கிறான்' என்று சபித்துக் கொட்டுவார்கள்.

இனி ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்த தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன்:

தோற்றம்: 3 - 1 - 1760.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| மாத எண் | 4 | இராகு | பகை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 9 | செவ்வாய் | சாதனை | |



இங்கு திகதி எண் மூன்று குருவையும், விதி எண் ஆறு சுக்கிரனையும், விளைவு ஒன்பது செவ்வாயையும் குறித்து நிற்கின்றது. விதி எண் ஆறாக உள்ளதால் சுகபோக வாழ்வு அமையும். இருப்பினும் ஒன்பது ஒரு போராட்ட மான எண். நினைத்ததைச் சாதிக்கும் ஒரு எண். இது பற்றி முன்பு 2ம் எண் ஆதிக்கத்தில் ஒன்பது விளைவு வரும் பகுதியில் விரிவாக விளக்கியுள்ளேன், கவனிக்கவும். எவரையும் ஈர்க்கும் சக்தி ஒன்பது விளைவு வருபவருக்கு உண்டு. காந்திக்கும் ஒன்பதுதான் விதி எண் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் ஒன்பதுதான் விளைவு. ஆனால் இரு வரின் அமைப்பும் வித்தியாசமானது. இவ்வமைப்பு உடையவர்கள் வீரபுருஷர்களாகவும் எளிதில் மற்றவரை கவரும் காந்த சக்தி படைத்தவர்களாகவும் துலங்குவர். தோற்றத்தில் உயரமாகவும் நல்ல உடற்கட்டு உள்ளவர் களாகவும் காணப்படுவர். எப்போதும் நகைச்சுவையாகப் பேசுவார்கள். ஆனால் மிகவும் கண்டிப்பானவர்கள். சிறி தும் அடிபணியமாட்டார்கள்.

இனி அகில உலகப் புகழ்பெற்ற நாதஸ்வர இன் குழல்வேந்தன், V. A. பாலகிருஷ்ணன்:

தோற்றம்: 21 - 6 - 1945

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | போதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | |
| விதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| விளைவு | 8 | சனி | வேதனை | |

இவ்வமைப்பை நோக்கும்போது திகதி எண் மூன்று. இதன் கிரகம் குரு. விதி எண் ஒன்று - சூரியன். விளைவு எட்டு - சனியையும் குறிக்கும். குருவுடன் சனி இணைந்தால், பெயரும் பொருத்தமாக அமைந்துவிட்டால் உலகப் பிர சித்தம் உண்டாகும். என்னதான் எப்படி இருந்தாலும் எட்டு விளைவு வருபவர்களை திருப்திப்படுத்துவது மிகவும்

கடினம். பத்தை எதிர்பார்த்து நூறு கிடைத்தாலும் திருப்தியடையமாட்டார்கள். அவர்களை எந்த விடயத்திலும் திருப்திப்படுத்துவது சிரமமாக அமையும்.

இனி மூன்று எண்ணைப் பெயரில்கொள்ளும்போது ஏற்படும் பலாபலன்களை நோக்குவோம்.

## 3

புத்திக்கூர்மையும் வழிகாட்டும் தன்மையையும் உழைப்பையும் குறிக்கிறது. கல்வியில் முன்னேற்றம் உண்டாகினும் பொறுப்புகள் வந்துசேரும். படிப்படியாக முன்னேற்றமும் உண்டாகும்.

## 12

கேட்பவர் பிரமிக்கும்படியான பேச்சு இருக்கும். பிறருக்காக பல கஷ்டங்களையும் சந்தோஷமாக ஏற்பர். பிறர்தான் இவரைவைத்து பேரும் புகழும் அடைவர். சிறிது பிடிவாதக்குணம் காணப்படும். பொறுப்புகள் காலடி தேடி வரும்.

## 21

தன் சந்தோஷத்திலும் இலாபத்திலும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். சுயநலம்தான் அதிகமாகக் காணப்படும். நான் என்ற மமதை உண்டாகும். இதை இல்லாமல் தவிர்த்துக்கொள்வது நன்மை தரும். விதண்டா வாதங்கள் தீமையை விளைவிக்கலாம். சாந்தமாக இருப்பது நன்மை தரும். மற்றவர்களை அடக்கி ஆள முற்பட்டால் தீமையாகமுடியும். பிரயாசைக்கேற்ப வெற்றி கிட்டும். நேர்மையைக் கடைப்பிடித்தல் மிக அவசியம்.

## 30

சிந்தனைச்திமிக்க இவர்களிடம் நுண்ணிய அறிவும் தீர்க்கமான யோசனையும் இருக்கும். தீர்க்கதரிசனம் உரைக்கும் வன்மை உண்டாகும். இஷ்டம்போல் காரியங்களைச் செய்வார்கள். தோல்வியைக் கண்டு பயப்படுவர்கள் அல்லர். இலாபமில்லாவிடினும் தமது திருப்திக்காகவே கஷ்டமான காரியங்களையும் சாதிப்பர். மிகச் சக்திமான்களாகத் திகழ்வர். மனதைச் சுலபமாக அறிந்து வெற்றி கொள்ளலாம். பெரியார் ஆதரவு இவர்களைத் தேடி ஓடி வரும்.

## 39

தீவிர உழைப்பாளிகளான இவர்கள் மேன்மையான நிலையை அடைந்தபோதிலும், இவர்கள் அடைய வேண்டிய புகழை மற்றவர்கள் கொண்டுபோய்விடுவார்கள். பிறருக்காகவே இவர்கள் செயல் எல்லாம் அமையும். சுலபமாகச் சரும வியாதி பற்றிக்கொள்ளும். பிடிவாதக் குணம் காணப்படும். இங்கு குருவும் செவ்வாயும் இணைந்து காணப்படுவதால் முற்கோபியாக இருந்தபோதும் பின் இரக்கம் காணப்படும்.

## 48

இவ்வெண் இராகுவையும் சனியையும் இணைத்துக் காணப்படுவதால் வாதிடும் திறமைசாலிகளாகக் காணப்படுவர். சனி, திடீர் என உயர்த்தும். திடீர் என வீழ்த்தும். திடீர் விபத்துக்களுக்கு உள்ளாகலாம். பொதுநலத்துக்காக அநேக காரியங்களைச் சாதிப்பர்.

## 57

இவ்வெண் புதனையும் கேதுவையும தன்னுள் கொண்டதாகக் காணப்படுகிறது. ஜன வசியத்தை உண்டாக்கும். பொதுஜன ஆதரவு கிடைக்கும். அதேவேளை திடீர் திடீரென வாழ்க்கையில் சோதனைகள் தோன்றி மறையும். குடும்ப வாழ்க்கை சோதனையாக அமையும். ஆரம்ப வெற்றியும் பின் தோல்வியைத் தோற்றுவிக்கும்

## 66

இவ்வெண் சுக்கிரனைத் தனது கிரகமாகக்கொண்டு காணப்படுவதால் கவர்ச்சிகரமான தோற்றம் அமையும். தோற்றம் மற்றவரைக் கவரும்வண்ணம் அமையும். காதலில் வெற்றியும் பெரியோர் உதவியும் எதிர்பாராத வகையில் கிடைக்கும். பிரமிக்கத்தக்க பிரசங்கியாக இருப்பார். சுகபோக வாழ்க்கை அமையும்.

## 75

இவ்வெண் கேதுவையும் புதனையும் இணைத்துக் காணப்படுவதால் போராட்டமிக்கதாய் காணப்படும். கேது ஆத்மீகத்துறையை வரவேற்கும். புதனோ உலக இன்பமென வாதிடும். இந்நிலையில் வாழ்க்கை போராட்டமாக அமையும். எழுத்துவன்மை உண்டாகும். திடீர்ப் பெயரும் புகழும் ஏற்படும்.

## 84

இவ்வெண் சனியையும் இராகுவையும் தன்னுள் கொண்டு காணப்படுவதால் திடீர் முன்னேற்றங்களும் திடீர் ஆபத்துக்களும் வாழ்வில் தோன்றி மறையும். பிறருக்கு முன்நின்று துன்பம் அனுபவிக்கும் நிலை ஏற்படும். எதையும் நேரடியாகப் பேசுவதால் வீண் விரோதிகளைச் சம்பாதித்து இன்னலுற ஏதுவாகும். பிடிவாதமும் முற்கோபமும் தோன்றும்.

## 93

இவ்வெண் செவ்வாயையும் குருவையும் தன்னுள் அடக்கிக் காணப்படுவதால் பிடிவாதகுணம் காணப்படும். பொறுப்புகள் வந்துசேரும். காலம் தாழ்ந்த திருமணம் ஏற்படும். விடாமுயற்சி தோன்றும். புகழ்பெற்ற கலைஞராகத் திகழ்வார். பெயரும் புகழும் விடாமுயற்சியால் வந்துசேரும். கலைத்துறையில் கௌரவம் மிகும்.



## 102

இவ்வெண் சூரியனையும் பூச்சியத்தையும் சந்திரனையும்கொண்டு காணப்படுவதால் ஆரம்பத்தில் மேன்மையையும் நடுப்பகுதியில் தோல்வியையும் சோர்வையும் முடிவில் வீண் மனக்குழப்பங்களையும் நிம்மதியற்ற நிலையையும் கொடுக்கும்.

**இனி உடல், நோய், உணவு வகைகளைப்பற்றி நோக்குவோம்.**

மூன்றும் எண் ஆதிக்கர்கள் நடை, உடை, பாவனையில் அடக்கமும் கம்பீரமும் சாந்தமும் உறுதியும் காணப்படும். (யானை போன்று)

இவர்களுக்கு உடலோடு சக்தி கலந்து காணப்படும். கண்களில் பட்பட்டென ஒளி வீசும். வாக்கு கம்பீரமாகவும் கேட்பவர் மனதை வசப்படுத்துவதாகவும் இருக்கும். குரலும் ''கணீர்'' என ஓசை நிறைந்ததாக விளங்கும். இவர்களில் அநேகர் பிரசங்க சக்திமிக்கவர்களாகத் துலங்குவர். இதற்குக் காரணம் இவர்களின் காந்தசக்திமிக்க கண்களும் கேட்பவர் மனதில் பதியும் குரலும் கம்பீரமான வசனங்களும்தான். இவர்களுக்கு அநேகமாக தோல் சம்பந்தமான நோய்தான் உண்டாகும். 35 வயதுக்குமேல் எக்ஸிமா என்கிற தோல் நோய் உண்டாகலாம். இல்லாவிட்டால் அஸ்மா என்கிற மூச்சுத் திணறவைக்கும் வியாதி ஏற்படும். சொறி, சிரங்கு போன்ற வியாதிகள் ஏற்பட்டால் இலகுவில் சுகமடைவதில்லை. இந்நோயை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்துவது மிகவும் நன்மை பயக்கும்.

**உணவு, மூலிகை:** இவர்களது சரீரத்துக்கு தானியங்களில் கோதுமையும், பழங்களில் தக்காளி, எலுமிச்சை, தோடம் பழம், மாதுளம்பழம், அன்னுசியும் நன்மை பயப்பனவாகும். 3ம் எண் காரருக்கான மூலிகைப்பொருள் நெல்லிக் கனியாகும். அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள

வேண்டும். உயிர்ச்சத்து ஜே உணவில் நன்ருகச் சேர்த்துக் கொள்ளல்வேண்டும். இவர்களுக்கு மலச்சிக்கல், தடிமல், பீனிசம் போன்ற வியாதிகளும் ஏற்படுவதால் காய்கறி, இலை வகைகளையும் நன்கு உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். பழவகைகளை அடிக்கடி அருந்தவேண்டும்.

இனி இவர்களுக்கான அதிர்ஷ்ட காலம், முக்கிய நாட்கள், தூரதிஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் என்பவற்றை நோக்குவோம்.

3, 12, 21, 30 - திகதி எண்ணுகவோ அல்லது விதி, விளைவு எண்ணுகவோ இடம்பெறின், இவர்கள் இவ்விதிகளுக்கு ஏற்ப இயங்குதல்வேண்டும்.

குரு ஆதிக்கமுள்ளவர்கள் சிறந்த நேர்மையும் சிறந்த சிந்தனைசக்தியுமிக்கவர்கள். கணக்குத்துறையில் திறமைசாலிகளாகத் திகழ்வர். தெய்வபக்தியும் சரீர பலமும் உடையவர்கள். காவியங்கள், ஓவியங்கள் இவர்களுக்கு நன்ருக வரும். அவற்றில் தமது ஊக்கத்தைச் செலுத்த வேண்டும். 27 அல்லது 30 வயதுவரை குடும்ப நலனுக்காகவே உழைப்பர். பின்பு பெரிய மனிதர் உதவிகள் கிட்டும். பெரும் புகழும் பொருளும் நல்வாழ்வும் வெளிநாட்டுப் பிரயாணங்களும் கௌரவமான வாழ்வும் அமையும். 30ம் திகதியில் பிறந்தோர்க்கு அல்லது விதி அல்லது விளைவெண்ணை முப்பதாகக் கொண்டவர்களுக்கு இதன் சக்தி அதிகமாகக் காணப்படும். 30ம் எண் ஆதிக்கர்கள் சிறுவயதிலேயே பெற்ருேரை இழந்துவிடுவார்கள். அப்படி இழந்தாலும் அவர்கள் கௌரவமாகவும் புகழோடும் வாழ்வார்கள்.

21ம் இலக்கத்தை திகதி எண்ணுகவோ அன்றில் விதி அல்லது விளைவெண்ணுகவோ கொண்டவர்கள் தீவிர சுயநலவாதிகள். தமது பெயருக்கும் புகழுக்கும் தந்திரமாகச் செயற்படுவர். தமது காரியம் முடிந்தபின் தமக்கு உதவிய உத்தமர்களையும் ஊதாசீனம்செய்துவிடுவார்கள். தெரியாத விடயங்களையும் தெரிந்ததுபோன்று நடித்து



மற்றவரைக் காக்காபிடிப்பார்கள். வெளிவேடமும் போடுவதிலும் சமார்த்தியசாலிகள். இவர்கள் நேர்மையாக நடக்கப் பழகவேண்டும். நான், நான் என்று எண்ணுது மற்றவரது திறமைகளுக்கும் முதலிடம் கொடுக்கப் பழகவேண்டும. முயற்சியால் முன்னேறுவார்கள். இவர்களுடன் இணையும் எண்களைப்பொர்றுத்து எதிர்கால வாழ்வு அமையும்.

21ம் எண் ஆதிக்கர்கள் தமக்குப் புகழ் கிடைக்கும் காரியம் எதுவாயினும் முன் நின்று உழைப்பர். அது எக்காரியமாயினும் தமக்குப் பெயரும் புகழும் இலாபமும் வருமாயின் முன் நிற்பர்.

30ம் எண் ஆதிக்கக்காரர்கள் தம்மிஷ்டப்படியே வாழ்வார்கள். தீவிரவாதிகளாகத் திகழ்வார்கள். தீர்க்க சிந்தனையும் நுட்பமான மூளையும் உடையவர்கள். கம்பீரமாக வாழ்வதையே விரும்புவர். தமது சுய மூளையிலேயே இயங்குவர். மற்றவர்களின் சூழ்ச்சிகளை இலகுவில் புரிந்து கொள்ளும் மூளை உடையவர்கள். துப்பறியும் ஆற்றல் நேர்த்தியாக இருக்கும். மிகுந்த துணிச்சலும் நெஞ்சழுத்தமும் உடைய இவர்கள், தோல்வியைக் கண்டு கலங்க மாட்டார்கள். கலைகளில் சுலபமாகத் தேர்ச்சியடையக் கூடிய இவர்கள், தனிமையை ஓரளவு விரும்புவார்கள். மற்றவர்களைப்பற்றி ஆவலாதி பேசுவது இவர்களுக்குப் பிடிக்காது. ஆவலாதி பேசுபவர்களைக் கண்டாலே இவர்களுக்குப் பிடிக்காது. இருக்கிற சக்தியை எல்லாம் இப்பிறவியிலேயே உபயோகித்துப் பார்த்துவிடுவார்கள்.

அதிர்ஷ்ட தினங்கள் :

3, 9, 12, 18, 21, 27, 30 திகதி எண்ணுகவோ அல்லது விதி, விளைவெண்ணுகவோ வரப்பெறின், அத்தினங்களில் நல்ல காரியங்களில் ஈடுபடலாம். தன்னுடன் இணைந்து காணப்படும் ஏனைய எண்களைப்பொறுத்தும் அதிஷ்ட தினங்கள் அமையலாம். கூட்டெண் அல்லது விதி, விளைவெண் 6 ஆக வருபவர்களைத் தவிர மற்றவர்களுக்கு 6, 15, 24 திகதி எண்ணுகவோ அன்றில் விதி, விளைவு

எண்ணுகவோ வரப்பெறும் நாட்கள் துரதிஷ்டமாக அமையும். இவ்வாறுன நாட்களில் நல்ல காரியங்களைச் செய்யாது தவிர்ப்பது நன்மை உண்டாகும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :**

ஓறேஞ் ரோஸ், முதலிய எல்லாச் செந்நிறங்களும் நன்மை பயக்கும். ஆனல் ஏனைய எண்கள் பொருந்தும் நிறங்கள் அமையலாம். ஆறு இணைந்துவருமாயின், பச்சை நன்மை பயக்கும். எட்டு இணைந்துவரின் நீலம் நன்மை தரும். ஒன்பது இணைந்துவரின் சிவப்பும் நன்மை பயக்கும்.

**விலக்கவேண்டிய நிறங்கள் :**

கருநீலம், கறுப்பு, ஆழ்ந்த பச்சை.

**இரத்தினம் :**

மிக்க நன்மைகளைத் தந்து மன அமைதியையும் நற்குண விருத்தியையும் தரவல்லது. ''எமிதிஸ்ட்'' எனப்படும் கத்தரிப்பூ நிறங்கொண்ட இக்கல் செவ்வந்தி என்று அழைக்கப்படும்.

விவாகப் பொருத்தம், நண்பர்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை நோக்குவோம்,

மூன்றும் எண் ஆதிக்கர்கள், 3, 9 எண் ஆதிக்கரையே பெரிதும் விரும்புவர், இவர்களுடன் இணையும் ஏனைய எண்கள் பொறுத்து இவர்கள் பொருத்தம் அமையும்.

இனி துணைவனையோ, துணைவியையோ எவ்வாறு தெரிந்து கொள்வதென்பதை நோக்குவோம். நண்பர்களையும் இம்முறையின்கீழ் அமைத்துக்கொள்வது சிறப்புடையதாகும்.

ஆண், பெண் இருவருடைய பிறப்பையும் எடுத்துப் பொருத்தத்தை நோக்குவோம்.

ஆண் தோற்றம் : 6 - 5 - 1951.
பெண் தோற்றம் : 30 - 5 - 1954.



| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | 3 | குரு |
| மாத எண் | 2 | சந்திரன் | 8 | சனி |
| வருட எண் | 4 | இராகு | 4 | இராகு |
| விதி எண் | 9 | செவ்வாய் | 9 | செவ்வாய் |
| விளைவு | 3 | குரு | 6 | சுக்கிரன் |

இங்கு பொருத்தம் தலைகீழாக அமைவதால் சம்பந்தியர்களுக்கிடையிம் பிரச்சனைகள் தோன்றும். அதாவது, ஆணுக்கும், பெண்ணுக்கும் பொருத்தம் இருந்தபோதும், இவருடைய உறவினர்களோ அல்லது தாய் தந்தையரோ எதிர்ப்பு தெரிவித்து அதனல் பிரச்சனைகள் எழும். அதாவது,

| ஆண் | பெண் |
|---|---|
| 6 | 3 |
| 2 | 8 |
| 4 | 4 |
| 9 | 9 |
| 3 | 6 |

இங்கு ஆண்ணுடைய திகதி எண் ஆருகவும், பெண்ணின் விளைவு 6 ஆகவும் காணப்படுகிறது. ஆணின் விளைவு 3 ஆகவும் பெண்ணின் திகதி எண் 3 ஆகவும் உள்ள காரணத்தால் தலைகீழ்ப் பொருத்தம் காணப்படுவவை அவதானிக்கலாம், விதியில் நேரடிப் பொருத்தமுண்டு என்பதையும் நோக்கவேண்டும்.

ஆண் தோற்றம் : 30 - 5 - 1951
பெண் தோற்றம் : 21 - 6 - 1959.

இனி இவர்களுக்கான பொருத்தங்களை நோக்குவோம்.

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | 3 | குரு |
| மாத எண் | 8 | சனி | 9 | செவ்வாய் |
| வருட எண் | 4 | இராகு | 9 | செவ்வாய் |
| விதி எண் | 9 | செவ்வாய் | 6 | சுக்கிரன் |
| விளைவு | 6 | சுக்கிரன் | 9 | செவ்வாய் |

இப்பொருத்தம் நேரடியானது. எதிர்ப்புகள் இருப்பதுபோலத் தோன்றினாலும், வெற்றிகரமான மனப் பொருத்தமும் திருமணமும் அமையும். பிரச்சனைகள் எழாத வாழ்வு உலகில் இல்லை. இவ்வாறு பொருத்தம் அமையப் பெற்றவர்கள், ஒருவரை ஒருவர் பிரியமாட்டார்கள். மன மொத்த காதலர்களாக விளங்குவர். தண்ணீரை அடித்து தண்ணீர் விலகாததுபோல இருவரும் அன்பு நிறைந்த தம் பதிகளாக விளங்குவார்கள். இவ்வாறு பொருந்தம் அமைவது விரும்பத்தக்கது.

இவ்வாறே ஏனைய எண்களுக்கேற்ப துணைவனையோ, அல்லது துணைவியையோ தெரிவது நன்மை பயக்கும், ஒன் பது விளைவு வருபவர்கள், ஐந்து விளைவு வருபவர்களைத் தெரியலாம் ஆனால் இரண்டு, அல்லது ஏழு வருபவர்கள் தெரிவு செய்தால், தாரம் இழந்து இன்னல் உற நேரிடும், எனவே மேற்கண்ட வகையில் துணைவனையோ, துணைவி யையோ தெரிவது நன்மை பயக்கும்.

இனி நான்காம் எண்ககரரைப் பற்றி நோக்கு வோம்.



# எண் 4 கிரகம்: இராகு தன்மை: பகை

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

4, 13, 22, 31 ஆகிய எண்கள் திகதி எண்ணுகவோ அன்றில் விதி அல்லது விளைவெண்ணுகவோ அடையுமிடத்து இவ்வெண்ணின் ஆதிக்கம் தோன்றும். இதன் பொதுவான குணநலன்களை நோக்குவோம். இவர்கள் மனதில் உள்ளதை அப்படியே அப்பட்டமாக வெளியிடும் சுபாவம் உள்ளவர்கள். மிக அதிகமாகப் பேசுவார்கள். 'உளறுவாயர்' எனப் பட்டம் பெறுபவர்களும் இவர்களே. ஒரு விடயம் சரியென மனம் ஒப்பியபின்பும் வேண்டுமென்றே, குறுக்குக் கேள்விகளைக் கேட்டு வாதாடுவார்கள். வாதாட்டத்தாலும், எழுத்துமூலமும் நாம் வாழும் சமூகத்தைச் சீர்திருத்த முனை வர். வாக்கில் வன்மைதான் இருக்குமே இன்றி இனிமை இராது. துடுக்காகவே அபிப்பிராயங்களை வெளியிடுவர். இவர்கள் ஏகக் கவனமாக நாவடக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். யாருடன் நாம், என்ன? ஏன்? பேசுகிறோம் என்பதையும், சந்தர்ப்பம், சூழ்நிலை, இடம், காலம், நேரம் இவைகளை உணர்ந்து, இனிமையாகப் பேசப் பழக வேண்டும். இவர்கள் கீழ்க்காணும் இக்குறளை என்றும் மனதில் அச்சுறுத்தவேண்டும்.

''யாகாவராயினும் நாகாக்க - காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு''

என்ற குறளை மறவாது ஒழுகவேண்டும். சொற்களைச் சிதறி விட்டால் மீண்டும் அள்ளமுடியாது என்பதை உணர்ந்து பேசவேண்டும். இல்லாவிட்டால் வாயாலேயே தமது வாழ் வில் மண் அள்ளிப் போட்டவர்கள் ஆவார்கள். இவர்கள் முகத்துக்கு முகம் பேசும் பழக்கத்தால் எதிர்காலத்தில் நமக்குக் கிடைக்கும் நன்மைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்

கிறுர்கள். இவர்கள் உண்மை என்று நினைப்பவைகளைப் பகிரங்கமாகவே தெரிவிப்பர். கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள்? இதனுல் என்ன விளைவுகள் ஏற்படும்? என்பது பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. இவ்வாறு இவர்கள் ஆரம்பத்தில் இருந்தபோதும் அனுபவங்கள் மூலமாகத் திருந்திவிடுகிறுர்கள். யார் எதைப் பேசினுலும் அதற்கு எதிரான கருத்தையே வெளியிட்டு அது சரியென வாதாடுவார்கள். எதையும் ஆமோதிக்காது எதிர்த்தே அபிப்பிராயம் சொல்லுவார்கள். பிறர் கூறுகிற எந்தவிதமான முடிவையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தீர விசாரித்து, விவாதித்து, ஆராய்ந்து வரும் முடிவையே நம்புவார்கள். எவ்விடயம்பற்றியும் ஒரு பிரத்தியேகமான அபிப்பிராயம் வைத்திருப்பார்கள். இவர்கள் மற்றவரை மதியாது எடுத்தெறிந்து பேசும் சுபாவம் படைத்தவர்களாக இருப்பதால், மற்றவர்களுக்கு எவ்வளவு நன்மைகளோ, உதவிகளோ செய்தபோதும் வீணுகப் பகைவர்களாகிக் கூடாத பெயரைத் தான் சம்பாதிப்பார்கள். இவர்களுக்கு அதிக நண்பர்கள் இருந்தபோதும் இடையில் பகைவராகப் பிரிந்துவிட, ஒரு சிலரே உண்மை நண்பர்களாகத் துலங்குவர். மிகுந்த புத்தி சக்தியுடையவர்களாதலால் இளமையிலேயே வாழ்க்கையைத் தீவிரமாக ஆராய முற்படுவர். கதைகள், சாத்திரங்கள், வேதாந்தம், மதம் சம்பந்தமான நூல்களெல்லாம் இவர்கள் மனதை வெகுவாகக் கவரும். இவர்களுடைய மிக முக்கியமான குணம் எல்லா விஷயங்களையும் தான் அறிந்திருக்கவேண்டும் என்பதுதான். எப்பாடுபட்டாவது விஷயங்களைச் சேகரித்துக்கொண்டிருப்பர்.

இவர்களுக்குப் பேரும் புகழும் பெறவேண்டும் என்ற ஆசை கிடையாது. மிகத் திருப்தியாகவே வாழ விரும்புவார்கள். சாப்பாடு, சிற்றுண்டி இவைகளில் தீவிரமான மனநாட்டம் இருக்கும். நோயொன்றும் இல்லாதபோதிலும் ஏதாவது பலவிருத்தி ஆயுள்விருத்திக்கு மருந்து சாப்பிடலாமா என்று கேட்பார்கள். மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்களாகக் காணப்படுவர். விசாலமான இதயம் படைத்த இவர்கள் நண்பர்களிடத்து பெரும் தன்மையாக



நடந்துகொள்வர். சம்பாதிக்கும் ஒவ்வொரு பணமும் மிக சிரமப்பட்டே சம்பாதித்து, மிகக் குதுகலமாகச் செலவிடுவார்கள்.

சிறுவயதில் ஓடிவிளையாடக்கூடிய விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம் இருக்கும். வயது ஏறஏற வேதாந்த விடயங்களிலோ அல்லது சமூக சேவைகளிலோ தீவிர ஈடுபாடு உண்டாகும். இனி, இவ்வெண்ணுடன் இணம்பு ஏனைய எண்கள்பற்றியும் சில உதாரணங்கள் ஊடாக நோக்குவோம்.

பாரசீக மகாகவி முஹம்மது இக்பால்.

தோற்றம்: *22 - 2 - 1873*

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 4 | இராகு | பகை | |
| மாத எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| விதி எண் | 7 | கேது | சோதனை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இவருக்கு, திகதி என்னும் விளைவும் 4ஆக அமைந்துள்ளது. விதி எண் 7ஆக அமைந்துள்ளது. இவருக்குக் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையாது. சமூக நலன்களில் தீவிர அக்கறை காட்டுவர். சமூகத்தில் கௌரவமான இடத்தை வகிப்பர். இனி இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்.

அனைத்துலகத் தமிழ் பேசும் 7 கோடி மக்களின் பொது வாழ்வின் வழிகாட்டி உள்ளத்தைக் கவர்ந்த இலங்கை தமிழ் பேசும் மக்களின் கூட்டணித் தேசியத் தலைவர் சா. ஜே. வே. செல்வநாயகம்.

தோற்றம்: *31 - 3 - 1898*

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 4 | இராகு | பகை | |
| மாத எண் | 7 | கேது | சோதனை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | வாழ்கை |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 2 | சந்திரன் | மென்மை | |

இவ்வமைப்பை நோக்கும்போது, போராட்டமாக உடைய ஒரு அமைப்பைக் காட்டுகிறது. திகதி எண் இராகு பகை. விதி எண் ஆறு ரசனை. விளைவு இரண்டு போராட்டம். வாழ்வில் வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி ஆகியவற்றைக் குறித்து நிற்கிறது. சமூக முன்னேடியாக இவ்வமைப்பு உள்ளவர்கள் துலங்குவார்.

இவ்வாறு நாலுடன் இணைந்துவரும் எண்கள் பொறுத்து அவர் அவர் வாழ்க்கை அமையும்.

இனி நான்கு பெயரில் வரும்போது எவ்வாறு பலனை ஏற்படுத்தும் என்பதை தனித்தனி எண்கள் ஊடாக நோக்குவோம்.

## 4

இவ்வாறு தனி நாலு பெயரில் இடம்பெறின் எல்லாம் தெரிந்திருந்தும் பயந்தவராக வாழநேரிடும். வீண் பகைகள் வாழ்வில் வந்துசேரும். நோயும், எதிர்ப்புகளும் வாழ்வில் இருந்தவண்ணம் இருக்கும்.

## 13

இவ்வெண்ணைப்பற்றிச் சரியாக அறிந்தவர்கள் இவ்வெண்ணைக்கண்டு மிக அஞ்சுவார்கள். இந்த எண் திடீர் ஆபத்தையும், திடீர் மரணத்தையும் குறிக்கும். பிரபல்ய ஹோட்டல்களில் இவ்வெண்ணில் றூம் இருக்கமாட்டாது. எவ்வாறு எண் இடப்பட்ட றூம்களில்தான் கொலை, கொள்ளைபோன்ற அசம்பாவிதங்கள் நடந்து பல இன்னல்களை ஏற்படுத்துவதால் இவ்வெண் கொண்ட றூம்கள் ஹோட்டல்களில் காணப்படுவதில்லை.

## 22

இவ்வெண் இரண்டு இரட்டை எண்களைக் கொண்டு அமைந்துள்ளது. சந்திரன்தான் இரண்டுக்குரிய கிரகமாக



உள்ளதால் பேராசை உண்டாகிறது. ரேஸ் போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டுச் சொத்துக்களை இழப்பர். மது, மங்கை என்று சுற்றுவர். வீண் வம்புகளில் மாட்டி தத்தளிப்பர். வீண் சிரமங்கள் வாழ்வில் ஏற்பட்டு அபகீர்த்தி ஏற்பட்டுத் தவிப்பர். சில ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாறி சஞ்சலமடைவர். வாழ்க்கையை ஒழுங்குபடுத்தமுடியாமல் கஷ்டத்துக்குள்ளாவர்.

## 31

இவ்வெண் குருவையும், சூரியனையும் குறித்து நின்றபோதும், நான்காக மாறி இராகு ஆதிக்கத்தையே குறிக்கும். வெற்றிகளும் பதவி உயர்வுகளும் வாழ்வில் வந்து குவிந்தபோதும் திடீர் என அவை எங்கோ சென்று மறைந்துவிடும். இலட்சியவாதிகளாக வாதிட்டு, வாதிட்டு வாழ்வர். மனோவசியம், சோதிடம், வேதாந்தம் போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு காணப்படும். இவர்களுக்கு வாழ்வில் ஏற்படும் வெற்றிகள் மகிழ்ச்சி தருவதில்லை.

## 40

இவ்வெண் இராகுவையும், பூச்சியத்தையும் குறித்து நிற்கிறது. எதிர்பாராத நண்பர்கள் வந்து சேருவார்கள். அதிகார உத்தியோகத்தையும் இவ்வெண் அளிக்க வல்லது. புகழும் பட்டங்களும் வந்துசேரும். சொத்துக்களும் வந்துசேரும். துணிந்து எக்காரியத்தையும் சாதிப்பார்கள். வாழ்க்கை முடிவு பூச்சியம்போல பிரயோசன மற்றதாகிவிடும். சமூகம் தங்கள் சேவையை உணரவில்லை என உளம் வருந்துவர்.

## 49

இவ்வெண் இராகுவையும், செவ்வாயையும் கொண்டு காணப்படுகிறது. ஆரம்பம் போராட்டமாக அமைந்தபோதும் முடிவு வெற்றியாக அமையும். பிடிவாதமும், வாதாட்டமும் இவ்வெண் ஆதிக்கரிடம் பின்னிப்

பிணைந்து காணப்படும். திடீர் என அதிஷ்டம் தேடிவரும். அதேபோன்று ஆபத்துக்களும் தேடிவர மறப்பதில்லை. பிறப்பின் எண்கள் நன்றாக இருந்தால் அதிர்ஷ்டங்கள் அழியாது நிலைத்து நிற்கும். பிறரின் பகைக்குக் குறைவிருக்காது.

## 58

இவ்வெண் புதனையும், சனியையும் தன்னில் கொண்டு காணப்படுவதால், ஜனவசியம் உண்டாகும். வீண் பகைகளும், போராட்டங்களும் வாழ்வில் இடம்பெறும். தோழர்கள் ஆரம்பத்தில் அதிகமாக இருந்தபோதும், முடிவில் நண்பரெல்லாம் பிரிந்துசென்றுவிடுவார்கள். பிறப்பு எண்கள் பலமாக அமையின் நன்மை உண்டாகும். இல்லாவிட்டால் வீண் சிரமங்களுக்கு உள்ளாகித் தவிப்பர். திகதி எண் அல்லது விதி, விளைவு 5 அல்லது 8 அல்லது 6 ஆக அமையின் வரும் மோசடிகளில் இருந்து காக்கப்படுவர்.

## 67

இவ்வெண் சுக்கிரனையும், கேதுவையும் தன்னில் அடக்கி உள்ளது. இவர்கள் சிறந்த ரசிகராகவும், கலைஞராகவும், எழுத்தாளராகவும் துலங்குவர். அதிர்ஷ்ட காதல் ஏற்பட்டுத் தோல்வியில் முடியும். ஆறு அல்லது ஏழு எண் இவர்கள் ஆதிக்க எண்ணாகத் துலங்கின் வெற்றியைத் தரும். ஆனால் அவை சம்பூரணமான வெற்றி எனக் கூறமுடியாது. கலைஞருக்குக் கலையால் பேரும் புகழும் எற்படும். வசீகரம் உண்டாகும். பெரியோர் நட்பும் ஆதரவும் கிடைக்கும்.

## 76

இவ்வெண் கேதுவையும், சுக்கிரனையும் தன்னில் அடக்கி உள்ளது. ஆரம்பப்படி சோதனையாக அமைந்தபோதும் எதிர்பாராத அதிர்ஷ்டம்மூலம் முடிவு வெற்றியைத் தரும். பிற்பகுதி ஆடம்பரமாக அமையும். கலை, ரசனை இவைகளில் திறமை உண்டாகும். பொருள் பண்டங்கள் வாழ்வில் பிற்பகுதியில் வந்துசேரும்.



## 85

இவ்வெண் சனியும், புதனும் இணைந்துவரும் ஒரு அமைப்பாக உள்ளது. எதிர்பாராத எதிர்ப்புகளும், தோழமைகளும் வாழ்வில் ஏற்படும். மதம், இயற்கை போன்றவை சம்பந்தமாகப் புதுக் கருத்துக்களை வெளியிடுவர். பிறர் கஷ்டங்களை அன்புடன் நீக்குவர். எல்லோராலும் புகழப்படும் பதவியை அடைவர். வீண் பகைகளையும் வளப்பர்.

## 94

இவ்வெண் செவ்வாயையும், இராகுவையும் இணைத்துக் காணப்படுகிறது. நினைத்ததைப் போராடியாவது சாதிப்பர். பிடிவாதமாக இருந்து நினைத்ததை முடிப்பர். பொதுவான சமூக சீர்திருத்தங்களைச் செய்வர். புரட்சிகரமான போராட்டங்களில் இறங்குவர். இதனால் பேரும் புகழும் அடைவர்.

## 103

இவ்வெண் சூரியனையும், பூச்சியத்தையும், குருவையும் இணைத்துக் காணப்படுவதால், இவ்வெண் ஆதிக்கர், மேன்மையான நிலையை அடைந்து, பின்பு இழந்து, பின்பு நல்ல நிலையை அடைவர். போட்டியும் பகையும் இடைக்காலத்தில் ஏற்படும். முடிவு மங்களகரமாக அமையும்.

இனி இவ்வெண் ஆதிக்கரின் ஆதிர்ஷ்ட காலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் ஆகியவற்றை நோக்குவோம்.

இராகு ஆதிக்கம் உடையவர்கள் மிகுதியான கண்டிப்பு உடையவர்களாக இருப்பார்கள். நல்ல துணிச்சலும், பலமும் இருக்கும். எதுவந்தபோதும் அஞ்சாமல் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டுவிடுவார்கள். உணவுகளிலும் போகங்களிலும் அளவாக இருக்கப் பழகவேண்டும். இனிமையாகவும் கவர்ச்சிகரமாகவும் பேசப் பழகவேண்டும். 13ம்

எண் ஆதிக்கம் உள்ளவருக்கு வாழ்வில் திடுக்கிடும் சம்ப வங்கள் நிகழும். அபாயங்கள் நிகழும். அபாயங்களை எதிர் நோக்கவேண்டிவரும். பெயரும் நன்கு அமையாவிடில் திடீர் கொலை. விபத்துக்களில் உயிர் திறப்பர். சிறு வயதிலேயே குடும்பத்தில் இவர்களைப் பாதிக்கக்கூடிய மாறுதல்கள் ஏற் படும். அனேகமாகப் பெண்களால் அனேக ஆபத்துக்கள் நேரிடலாம். 22ம் எண் ஆதிக்கம் உடையவர்கள் மனதை நன்மையைவிடத் தீமையையே மிகுதியாகக் கவரும். விதி இவர்கள் வாழ்வைத் தீயவழிகளில் செலுத்தப் பல் சந்தர்ப் பங்களைக் கொடுக்கும். மிகமிஞ்சிய நிர்வாக சக்தியும், சாமத் தியமும் உண்டாகும், இவர்களுக்குப் பணம் சம்பாதிப்பது எழிதாக இருக்கும். போட்டிகள் வேறுபல தீயகாரியங்கள் புரிவதாலும் பணம் பொருள் வந்துசேரும். இவ்விடயங் களில் ஜாக்கிரதையாா இவர்கள் இருப்பது நலம்.

இவர்களுக்கு இயந்திரப் பொருத்தங்கள் உண்டு. அச்சியந்திரசாலை, புத்தக வெளியீடு, மோட்டார், தட்டச்சு போன்றவற்றுல் இலாபமும் முன்னேற்றமும் உண்டாகும். கடல்கடந்த பிரயாணங்கள் ஏற்படும்.

31ம் எண் ஆதிக்கர், மனோசக்தியும், நுட்ப அறி வும் உடையவராகவுமிருப்பர். புதிதாகப் பழகுபவர்கள்கூட இவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதைக் கண்டு பிடித்துவிடுவர். இலாப நட்டங்களையும் பொருட்படுத்தாது தன் இச்சைப்படியே நடப்பர். எப்படிப்பட்ட எதிரியையும் கூடிய சீக்கிரம் மடக்கிவிடுவர். ஏகாந்த வாசத்திலும், வேதாந்த ஆராய்ச்சிகளிலும் மனம் ஈடுபடும். வெகுஜன உபகாரியுமாவார்.

**அதிர்ஷ்ட காலம் :-**

1, 10, 19, 28 திகதி எண் அல்லது விதி, விளைவு எண்ணுகை வரும் நாட்கள் அதிர்ஷ்டம் பயப்பனவாகும். இத்தினங்களில் நல்ல காரியங்களில் ஈடுபடுதல் சிறப்பாகும். 1, 10, 19, 28, 4, 13, 22, 31, 37, 40, 55 போன்ற வயதுகளில் நல்ல காரியங்கள் நிகழலாம்.



**துரதிர்ஷ்ட தினங்கள் :**

8, 17, 26 திகதி எண், அல்லது விதி அல்லது விளைவெண்ணுகை வரப்பெறின், அத்தினம் துர்அதிர்ஷ்டத் தையே ஏற்படுத்தும்.

**வர்ணம் :**

வெளிர் நீலம் அல்லது நீலக்கோடுகள் போட்ட துணிகளே இவர்கள் மனதைக்கவரும். மிகமிக அதிர்ஷ்ட நிறம் மஞ்சலாகும். தவிர்க்கவேண்டிய நிறம் கறுப்பு.

**இரத்தினம் :**

வெளிரான நீலநிறக் கல்லே நன்மை தரும். பரி சுத்தியையும், காரிய சித்தியையும் தரும் கோமேதகமும் மிக்க அதிர்ஷ்டகரமானதே.

இவர்களுக்கு உகந்த தொழில் எதிலும் ரோசம், தன்மான உணர்வுமிகுந்த இவர்கள் செய்யும் எத்தகைய வேலைகளையும் இழக்கத் துணிவர். தனது அடிமை வேலை களுக்குத் தலைமுழுக்குப் போட்டுவிட்டு மனதிற்குப் பிடித்த சுதந்திரமான தனித் தொழில்களைச் செய்துவாழப் பிரியப் படுவர். குறுகிய காலத்தில் வேண்டிய அளவு பொருளைத் தேடிக்கொண்ட பிரபல ஒப்பந்தக்காரர்களும், பெரிய வியா பாரிகளும், திறமைமிகு புரோக்கர்களும், கார், லொறி, இரும்பு சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்களும், கலை இலக் கிய நடிப்புத்துறைகளில் வெற்றிகண்டோரும், சிறந்த டாக் டர்களும், சோதிட நிபுணர்களும் இவ்வெண்ணைச் சேர்ந்த அதிர்ஷ்டசாலிகளாகும். இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்கள் சகிதம் இவர்கள் தொழில் அமையலாம். அர சாங்க உத்தியோகம் வகிக்கும் வாய்ப்பு உண்டு.

இவர்களின் விவாகப் பொருத்தம்பற்றி நோக்கு வோம். முதலாம் எண் ஆதிக்கரிடமே இவர்களுக்குக் கவர்ச்சி ஏற்படும். காந்தமும் இரும்புமாக நாலும் ஒன்றும் காணப் படும். எனினும் இவ்வெண்ணுடன் இணையும் எண்கள் சகி தம் பொருத்தம் அமைவது அவசியம். உதாரணமூலம் நோக்கு வோம்.

ஆண்ணின் தோற்றம் : 1 - 4 - 1954

பெண்ணின் தோற்றம் : 4 - 5 - 1959

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 1 | சூரியன் | 4 | இராகு |
| மாத எண் | 5 | புதன் | 9 | செவ்வாய் |
| வருட எண் | 2 | சந்திரன் | 1 | சூரியன் |
| விதி எண் | 6 | சுக்கிரன் | 6 | சுக்கிரன் |
| விளைவு | 5 | புதன் | 2 | சந்திரன் |

இங்கு இவ்விருவருக்கும் நேரடிப் பொருத்தமுண்டு. ஒன்றுக்கு நாலில் கவர்ச்சி. விதி எண்ணில் இருவருக்கும் 6 அமைவதால் இருவரும் மனம் ஒத்த காதலர்களாக விளங்குவர். 5 எல்லா எண்களுடனும் இணைந்துபோகும். எனவே இங்கு பொருத்தம் பிரமாதமாக உள்ளது. இவ்வாறு அமையும் தம்பதிகளின் பெயர்களும் நன்றாக அமையில் இல்லறம் சிறப்பாக அமையுமென்பதில் ஐயமில்லை.

இன்னுமொரு பொருத்தத்தை நோக்குவோம்.

ஆண் தோற்றம் : 4 - 5 - 1948

பெண் தோற்றம் : 7 - 8 - 1951

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 4 | இராகு | 7 | கேது |
| மாத எண் | 9 | செவ்வாய் | 6 | சுக்கிரன் |
| வருட எண் | 8 | சனி | 5 | புதன் |
| விதி எண் | 4 | இராகு | 4 | இராகு |
| விளைவு | 7 | கேது | 4 | இராகு |



| ஆண் | பெண் |
|---|---|
| 4 | 7 |
| 9 | 6 |
| 8 | 5 |
| 4 | 4 |
| 7 | 4 |

இப்பொருத்தம் தலைகீழாகப் பொருந்திய காரணத்தால், ஆண் பெண் இருபாலாரினதும் உறவினர்களுக்கு இடையில் பகைமை ஏற்பட்டுப் பிரச்சனைகள் உருவாகும். ஆண் பெண் இருவருக்கும் பொருத்தம் உண்டு. ஆனால் இரு சாராரின் உறவினர்களுக்கிடையில் பிரச்சனைகள் தோன்றிக் கவலையை ஏற்படுத்தும்.

எனவே துணைவனையோ, துணைவியையோ, நண்பர்களையோ தெரியும்போது இவ்வாறு கணித்து அறிந்துகொள்ளுங்கள். இனி ஐந்தாம் எண்ணைப்பற்றி நோக்குவோம்.

## எண்: 5 கிரகம்: புதன் தன்மை: நேர்மை

"இதுமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பன்னொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி"

5, 14, 23 ஆகிய எண்களைத் திகதி எண்ணாகவோ அல்லது விதி, விளைவு எண்ணாகக் கொண்டவர்களுக்கு இவ்வெண்ணின் குணம்சங்கள் காணப்படுவது சகஜமே. பார்வைக்கு கவர்ச்சியாக, அழகாகத் தோற்றமளிக்கும் இவர்கள் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் ஆற்றல் படைத்தவர்கள். எவருடனும் கோபிக்கமாட்டார்கள். மற்றவர்கள் கோபித்தாலும் வலியச்சென்று கதைப்பார்கள். எவருக்கும் என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத்தயங்கமாட்டார்கள். இவர்

களைக்கொண்டு எதையும் செய்விக்கலாம். எல்லோரையும் கவர்ந்து இழுக்கும் சக்தி படைத்த இவர்களே பிரபல விற்பனையாளர்களாகத் துலங்குகிறுர்கள். அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் ஆடைகளை அணிவார்கள். ஆடம்பர வாழ்க்கையையே அனுபவிக்கத் துடிப்பவர்கள். மிக இளம் வயதிலேயே காதலில் இறங்கிக் கல்யாணம் செய்தபோதும் இவர்கள் ஒருவருடன் திருப்தி அடைவதில்லை. காரணம் இவ்வெண் ஆதிக்கர்களுக்கே மற்றய எண் ஆதிக்கரைவிடப் பாலியல் உணர்ச்சிகள் அதிகம். இவர்கள் மனம் ஒரு நிலையில் இருக்காது. தான் காதலிப்பவரைவிட 'அழகானவரைக் கண்டால் இவர்கள் மனம் அவர்கள்மீது லயித்துவிடும். சமூகம் சுற்றுடல்பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை. உலக இன்பம் தாம் அனுபவிக்கவே எனக்கூறி அனுபவிப்பர். அது ஒழுக்கத்துக்கு இழுக்கென்றெல்லாம் சிந்திக்கமாட்டார்கள்.

மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் சுபாவம் படைத்தவர்கள். இன்று பிடிப்பது நாளை இவர்களுக்கு வெறுப்பைத் தரும். ஒரேமாதிரியான வாழ்க்கையை விரும்பமாட்டார்கள். மாறுபட்ட அமைப்பே இவர்களுக்குத் திருப்தி தருவதாக அமையும். ஒன்பதாம் எண்காரரைக் கண்டால் சுற்றித் திரிந்து அவர்களைத் திசைதிருப்பிக் காதல் வார்த்தைகளைக் கூறி அதிகமாக நேசித்தபோதும் அவர்களைத் தம் இஷ்டப்படி ஆட்டிப்படைக்க முற்படுவர். அதேவேளை அவர்கள்மீது அன்பாகவும் இருப்பர். ஒன்பதாம் எண்காரரர் இவர்களிடம் கவனமாக இருக்கவேண்டும். எதையும் மிகச் சுலபமாகச் சாதித்துவிடலாம் எனக் கருதுபவர்கள். பாலியல் உணர்ச்சிகளைப் பெரிதாக மதிப்பார்களே அல்லாது சமூக கலாச்சாரங்களை மறந்துவிடுவார்கள். வாசனைத் திரவியங்கள், அழகிய ஆபரணங்கள், அலங்காரமான ஆபரணங்களில் லயித்துக் காணப்படுவார்கள். எங்கு இன்பமுண்டோ அங்கு இவர்களைக் காணலாம். கஷ்டப்படுவது இவர்களுக்குப் பிடிப்பதில்லை.

இவர்களைச் சிறுவயதிலேயே இலட்சிய புருஷர்களாக வளர்க்காவிட்டால் சமூகத்துக்கு விரோதமான வாழ்க்கை வாழவும் தயங்கமாட்டார்கள். மற்றவர்களைச் சிரிக்கவும்



வைப்பார்கள். தாமும் சதா சிரித்தவண்ணம் இருப்பார்கள். துன்பதுயரங்களைப் பெரிதாக மதிப்பதில்லை. அதுவும் இவர்களுக்கு விளையாட்டாகத்தான் இருக்கும். ஜனவசியம் இருக்கும் இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்கள் பொறுத்து இவர்கள் வாழ்க்கை அமையும்.

இவர்கள் கோவில்களுக்குச் சென்றாலும் அதிகமாகக் கேலிக்கைகளை இரசிப்பதற்கே செல்லுகிறுர்கள். பெண்ணைக் கண்டால் சும்மா இருக்கமாட்டார்கள். ஏதாவது நக்கல் வார்த்தைகள் கூறித் தமாஸ் பண்ணுவார்கள். சிறிதும் பயப்படமாட்டார்கள். பெண்கள் ஏசுனாலும் அதுவும் இவர்களுக்கு ஒரு விளையாட்டுப்போல அமையும்.

இனி, இவ்வெண்ணுடன் இணைந்துவரும் ஏனைய எண்கள்பற்றி நோக்குவோம்.

அரசியல் வாழ்விலும் ஆன்மீகத்துறையிலும் அயராது பணிபுரிந்த மாமேதை சே. பொ. அருணாசலம்

தோற்றம் :- 14 – 9 – 18

| | எண் | கிரக நிலை | தன்மை |
|---|---|---|---|
| திகதி எண் | 5 | புதன் | தோழமை |
| மாத எண் | 5 | புதன் | தோழமை |
| வருட எண் | 4 | இராகு | பகை |
| விதி எண் | 4 | இராகு | பகை |
| விளைவு | 9 | செவ்வாய் | சாதனை |

} வா[illegible]

இவ்வமைப்பை நோக்கும்போது திகதி எண் ஐந்தாக அமைந்தபோதும் விதி எண் நான்காகவும், விளைவு ஒன்பதாகவும் அமைந்து காணப்படுவதால் விளைவு எண் சக்திமிக்க எண்ணுகை அதாவது எந்த எண்ணையும் அடக்கி ஆளும் நிர்வாகத் திறமை படைத்ததாதலால் அனைவரையும் வழிநடத்தும் சூச்சுமம் இவர்களுக்குத்தான் புரியும். தாம் நினைத்ததைக் கட்டாயம் அயராது உழைத்துச் சாதிப்

பர். விதி நாலாக உள்ளதால் பகைமைகளும் வாழ்வில் தோன்றும். அனைவரையும் கவரும் சக்தி, திகதி எண்ணை 14ஆல் உண்டாகும். இறைபக்தி ஒன்பதாம் எண்காரருக்கு இயற்கையாக அமைந்த ஒன்று. எதை மறந்தாலும் இறைவனை வழிபட மறக்கமாட்டார்கள்.

இனி, இன்னுமொரு அமைப்பை நோக்குவோம். ஆசிய ஜோதியும், சமாதானத் தூதருமான பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு.

தோற்றம் : 14 - 11 - 1889

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| மாத எண் | 7 | கேது | சோதனை | |
| வருட எண் | 5 | இராகு | பகை | |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இவ்வமைப்பை நோக்கும்போது, திகதி எண் ஜனவசீயத்தையும், விதி எண் சுகபோக வாழ்க்கையையும், விளைவு நான்கு சமூக முன்னேற்றவாதியாவதையும் குறிக்கும். இவ்வமைப்பு காணப்படின் பெயரும், வாழ்க்கை நடாத்தும் ஊரும் பொருந்திவிடின் இவர்கள் நாட்டின் தலைவராகப் போற்றப்படுவர். ஆனால் இவர்கள் தம்மில் உள்ள திறமையை வெளிக்காட்டாது. காதல், சுகபோக வாழ்வில் இறங்கிவிட்டால் இவ்வாறான பலனுக்கு அருகதை அற்றவராகிவிடுவார். வாகனப் பொருத்தங்கள். எதிர்பாராத அதிஷ்டங்கள். தன் அந்தஸ்தைவிட உயர்விட திருமணம் போன்றவை கைகூடும். பார்வைக்கு அழகாகவும், மற்றவர்களைப் பேச்சாலும், தோற்றத்தாலும் கவரும் சக்தி படைத்தவர்கள். இவர்கள் இடும் ஆணையைச் செய்ய மற்றவர்கள் காத்து நிற்பார்கள். கண்களில் காந்தசக்தி தவழும். அனைவரையும் சிரிப்பூட்டும் வண்ணம் தமாசாகப் பேசுவார்கள். இவர்கள் அணியும் ஆடைகளும் மற்றவரைக் கவரும்வகையில் அமைந்திருக்கும்.



ஐந்தெண் ஆதிக்கம் உடையவர்களுக்குத்தான் பாலியல் உணர்ச்சிகள் அதிகம். எனவே இவர்கள் தம்மை ஓரளவு கட்டுப்படுத்திப் பழகவேண்டும். கண்டபடி மனதை அலைய விடக்கூடாது. பெண்களும்சரி, ஆண்களும்சரி மிக அவதானமாக மற்றவர்களுடன் பழகவேண்டும். பாலியல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகித் தம்மை இழக்கக்கூடாது. ஐந்தெண்ணின் ஆதிக்கமுள்ளவர்கள், சிறுவயதிலேயே பிரச்சனைக்குள்ளாவார்கள். எனவே தாய், தந்தையர் இவர்களைச் சிறுவயதிலிருந்தே நல்வழிப்படுத்தவேண்டும். நல்ல நண்பர்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். மிக இலகுவில் உணர்ச்சி வசப்படும் இயல்புடைய இவர்களைக் கட்டுப்பாடுடன் பாதுகாக்கவேண்டும்.

இனி, உடல்நோய், உணவுவகைபற்றி நோக்குவோம். இவர்களுடன் இணையும் ஏனைய எண்கள்பொறுத்து, இவர்களது உருவ அமைப்பு அமைந்தபோதும் எப்படியாயினும் அழகு இவர்களிடம் காணப்படும். மற்றவர்களை அழகால் கவர்ந்துவிடுவார்கள். அனைவருடனும் முன்பின் அறிமுகமின்றிக் கூச்சமின்றிப் பழகுவார்கள். சதா யோசனை புரியும் சுபாவம் உள்ளவர்கள். மனம் அலைந்துகொண்டு சாந்தியை இழக்கும். தூக்கம் கெடும். நரம்பு பலஹீனம், பாரிசவாயு, திடீரெனக் கால்கள் சோர்வடைதல், மூளை பலஜீனம், சித்தப்பிரமை, காக்கைவலிப்பு முதலான நரம்புகள் சம்பந்தப்பட்ட கோளாறுகள் ஏற்படுவதுண்டு. சிறுவயதில் வைசூரி என்னும் நோய் காண்பதும் உண்டு.

எந்நோய் வந்தாலும் சமாளிக்கும் சக்தி உண்டாகச் சரியான முறையில் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். நல்ல தூக்கம், சாந்தமான நிலை இவைகளை இழக்காமல் காப்பாற்றுவது நலன்தரும். எண்ணெய் ஸ்னனம் சரிவரச் செய்துவரின் நன்மை உண்டாகும்.

வால்நட், பிஸ்தா முதலான புஷ்டியளிக்கக்கூடிய பருப்புகள், சாலாமிஸ்ரி, சமேத்துசலி முதலிய தாதுப்புஷ்டி நரம்புகளுக்குப் பலம் அளிக்கும் பொருள்கள். பசுவின் பால்,

நெய், முதலியவைகளும் அருந்த நலம்தரும். அத்திப்பழம், ஓட்ஸ் தானியமும் கிடைக்கும்வரை சேர்த்துக்கொள்ளலாம். எல்லாக் கனிவகைகளும் நன்மைதரும்.

இனி, அதிர்ஷ்ட நாட்கள், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் ஆகியவற்றை நோக்குவோம்.

5ஐத் திகதி எண்ணுகவோ அல்லது விதி, விளைவு எண்ணுக அடைபவர்கள், சிறுவயதிலேயே இலட்சியம் உடையவர்களாகக் காணப்படுவர். பிறரை மதித்தலும் பிறருக்குப் போதிப்பவராகவும் இருப்பார். தெய்வீகமான வாழ்க்கை அமையும்.

14ம் எண்ணைத் திகதி எண்ணுகவோ அல்லது விதி, விளைவு எண்ணுகவோ அமைந்தால், பிரயாணத்தில் சலியாத ஊக்கமும், ஓரளவு பிடிவாதமும் இருக்கும். பொருட்களைச் சேர்க்கும் அதிர்ஷ்டம் உண்டு. ஆகையால் எல்லாவிதமான பொருத்த வியாபாரங்களும் பலிதமாகும். பணப்புழக்கம் அதிகமிருக்கும். எப்பொழுதும் இவர்களைச்சுற்றி ஜனக்கூட்டம் இருக்கும். பிறரை நம்புவதால் பெருத்த நட்டங்கள் ஏற்படடுவிடும். மழை, இடி, நெருப்பு, வெள்ளம் இவைகளைக்கண்டு விலகவேண்டியது அவசியம். உயிருள்ளவரை பிறர் உதவியுண்டு. குன்றாத அதிர்ஷ்டம் அடிக்கும்.

23ம் எண்ணைத் திகதி எண்ணுகவோ அல்லது விதி எண் அல்லது விளைவாகக்கொண்டால் இவ்வாதிக்கரால் சாதிக்கமுடியாதது உலகில் ஒன்றுமே இல்லை. மிதமிஞ்சின ராஜவசியமும், ஜனவசியமும் இருக்கும். இவர்களைவிட மேல்நிலையில் இருப்பவர்களும் இவர்களைப் புகழ்வர். மேலான பண்பாடுகளும், நல்ல நடத்தையும் அமையப்பெறின் இவர்கள் சரித்திரம்போற்றும் பெரியராக ஆகிவிடுவார்.

**அதிர்ஷ்ட காலம் :**

5, 9, 14, 18, 23, 27 திகதிகளே மிக்க அதிர்ஷ்டமானவை. எனினும் இத்துடன் இணையும் ஏனைய எண்கள் பொறுத்தும் அதிர்ஷ்ட தினங்கள் அமையலாம்.



**நிறம் :**

சாம்பல் வர்ணமே மிக்க அதிர்ஷ்டமானது. பச்சை, கறுப்பு போன்ற ஆழ்ந்த நிறங்களை ஒருநாளும் அணியலாகாது.

**இரத்தினம் :**

வெளிரான நீலநிறக் கல்லே நன்மைதரும். பரிசுத்தியையும் தரும். கோமேதகமும் மிக்க அதிர்ஷ்டகரமானதே.

**ஐந்தாம் எண் ஆதிக்கருக்கான தொழில் :**

இவர்கள் செய்யும் புது முயற்சிகளெல்லாம் வெற்றியடையும். எது செய்தாலும் பொதுஜன ஆதரவு ஏற்படும். வியாபாரமே சிறந்தது. இவர்கள் பிறரிடம் வேலைக்கு இருந்தால் இவர்களின் அதிர்ஷ்டத்தை முதலாளி அனுபவிப்பர். எழுத்தாளர்கள், வியாபாரிகள், தரகர்கள், ஏஜெண்டுகளாகத் தொழிலை ஆரம்பிக்கலாம். நண்பர்களால்தான் உதவியும் முன்னேற்றமும் கிட்டுகின்றது. இவர்களுக்குப் பெரிய மனிதர்களின் ஆதரவு என்றும் உண்டு. அரசியல் நாகம் மிகுந்தவர்கள். அரசியல் துறையிலும், இதர முக்கிய பொறுப்புக்களிலும் தலைமைப்பதவி தேடிவரலாம். மற்றைய எண்களும் சாதகமாக அமையின், எந்தப் போட்டிகளிலும். தேர்தல்களிலும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படுவர். எந்தக் காரியத்திலும் அதிக சிரமமின்றிப் பகையின்றி வெற்றி தேடிவரும். இவர்களில் ஏமாற்றம் அடைபவர்களும் சோதனைக்குள்ளாபவர்கள். ஏழு, இரண்டு ஆகிய எண்களை விதி எண்ணுகவோ அல்லது விளைவெண்ணுகவோ அல்லது திகதி எண்ணுகவோ கொண்டவர்கள், வாழ்க்கையில் சோதனைக்குள்ளாவார்கள்.

இனி, ஐந்தெண் ஆதிக்கம் உள்ளவர்களின் விவாகப் பொருத்தம், நண்பர்கள் தெரிவு ஆகியவற்றைப்பற்றி நோக்குவோம்.

5ம் எண் ஆதிக்கர்கள், 5, 9 எண் ஆதிக்கரிடம் மனதைப் பறிகொடுப்பர். 1, 3, 6, 9 ஆதிக்கர்கள் இவர்கள்மீது மிகுந்த அன்பு காட்டுவார்கள். 5, 14, 23 திகதிகளில் பிறந்தவர்களுக்குப் புத்திரபாக்கியம் குறைவாக இருக்கும்.

கூட் எண்ணோ விளைவோ 5 ஆனால் இந்நிலை காணப்படும். உதாரணம் மூலம் நோக்குவோம்.

ஆண் தோற்றம் : 30 – 5 – 1951
பெண் தோற்றம் : 14 – 1 – 1957

| | எண் | | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|---|
| திகதி எண் | 3 | குரு | 5 | புதன் | வாழ்க்கை |
| மாத எண் | 8 | சனி | 6 | சுக்கிரன் | |
| வருட எண் | 1 | சூரியன் | 9 | செவ்வாய் | |
| விதி எண் | 6 | சுக்கிரன் | 1 | சூரியன் | |
| விளைவு | 9 | செவ்வாய் | 3 | குரு | |

இங்கு இருவருக்கும் நேரடிப்பொருத்தமுண்டு. இருவரும் ஆழமான அன்புகொண்டவர்களாகக் காணப்படுவர். 14ம் திகதி பிறந்தவர்தான் தனது மனதை அலைமோத விடாது பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வீண் பிரிவினைகள் ஏற்படலாம். ஆனால் நல்ல பொருத்தமுண்டு. இன்னுமொரு அமைப்பைப்பற்றி நோக்குவோம்.

ஆண் தோற்றம் : 24 - 5 - 1950
பெண் தோற்றம் : 5 - 6 - 1954

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | 5 | புதன் |
| மாத எண் | 2 | சந்திரன் | 2 | சந்திரன் |
| வருட எண் | 3 | குரு | 2 | சந்திரன் |
| விதி எண் | 8 | சனி | 8 | சனி |
| விளைவு | 1 | சூரியன் | 8 | சனி |

இங்கு தாய், தந்தையருக்கிடையில் சிறிது பிரச்சனை வந்தாலும் ஐந்து எந்த எண்ணுடனும் பொருந்தும் ஆதிக்கம் உள்ளதால் இவ்வாறான பொருத்தமும் நல்லதே.



ஐந்தெண் ஆதிக்கர்களுக்கு அனேகமாகக் காதல் திருமணம்தான் கைகூடும். தமது மனதுக்கு இசைந்த மனைவியை அல்லது கணவனை அடைவர். இளம் வயதிலேயே திருமணம் செய்துவிடுவர். இவர்கள் சதா இன்பமாகவே காணப்படுவார்கள். துன்பத்தை உதாசீனம் செய்துவிட்டு இன்பமாகவே இருப்பார்கள். சதா சிரித்து மகிழ்ந்தவண்ணம் இருப்பார்கள்.

எனவே மேற்காட்டிய முறையில் ஏனைய எண்களுக்குப் பொருந்தும்வகையில் துணைவனையோ, துணைவியையோ அல்லது நண்பர்களையோ தெரிவுசெய்யலாம்.

இனி ஆறும் எண் ஆதிக்கரைப்பற்றி நோக்குவோம்.

## எண்: 6 கிரகம்: சுக்கிரன் தன்மை: ரசனை

"சுக்ர மூர்த்தி சுபமிக ஈவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே"

6, 15, 24 ஆகிய எண்களைத் திகதி எண்ணாகவோ அன்றில் விதி அல்லது விளைவு எண்ணாகக் கொண்டவர்களுக்கும், பெயரில் இவ்வெண்ணைக் கொண்டவர்களுக்கும் இவ்வெண் ஆதிக்கம் இருக்கும். இவ்வெண்ணுக்குரிய கிரகம் சுக்கிரன். ஆகவே இவ்வெண் ஆதிக்கரின் பொதுவான குணம்சங்களை நோக்குவோம்.

பார்வைக்கு ஏதோ ஓர் அழகும், கவர்ச்சியும் இவர்களிடம் தோன்றும். அழகானதும், விலை உயர்ந்ததுமான ஆடைகளை அணிவர். வாசனைத் திரவியங்களை நன்கு உபயோகிப்பர். இவர்கள் கண்கள் காந்தசக்திமிக்கது. மற்றவர்களைக் கண்பார்வையால் ஈர்த்திழுப்பர். பேச்சும் மற்றவரைக் கவரும் வகையில் நடிப்புடன் கலந்து காணப்படும். 24ல் பிறப்

பவர்களது அழகு ஒரு தனியழகு. சொல்லிவைத்துச் செதுக்கிய சிற்பம்போன்று அழகாகக் காணப்படுவார்கள். சுக்கிர ஆதிக்கரை இலகுவில் இனம் கண்டுவிடலாம். இவர்களை எல்லோரும் ஒருமுறையாவது திரும்பிப்பாராது விடமாட்டார்கள். அதிகபேர் கூடிநிற்கும் கூட்டத்திலும் இவர்கள் தான் முதலில் மற்றவர்களைக் கவர்வார்கள். ரசிப்பதில் இவ்வெண் ஆதிக்கர்கள்தான் வல்லவர்கள், கவிதை, சங்கீதம், நடனம், சித்திரம் முதலிய இன்பகரமான விடயங்களில் ஈடுபாடு அதிகமுண்டு. இவற்றில் ஈடுபட வசதியற்றவர்கள், சினிமாப்படம் பார்ப்பதில் தமது முழுப்பலனையும் செலுத்தி சிறந்த சினிமா ரசிகர்களாக விளங்குகிறார்கள். ரேடியோவே கதி என இருப்பார்கள். பாட்டுக் கேட்காமல் இவர்களுக்கு நித்திரையே வராது. உலகம் மாயை என்று சொன்னால் இவர்களுக்கு வியப்பாக இருக்கும். இத்தனை சுகங்கள் நிறைந்த இடத்தையே இப்படிக் கூறுகிறார்கள் என்று நினைப்பார்கள். ஆனால், இவர்கள் நாஸ்திகரல்ல என்பதைக் கவனிக்கவும். அசுர குருவின் அதிக்கம்படைந்த இவர்கள் மந்திர தந்திரங்களிலும், தவம் புரிவதிலும், காரியசித்திக்காக இறைவனை வழிபடுவதிலும் தீவிரமுடையவர்களாக இருப்பர். இவர்கள் தியாகம் புரிந்தாலும் நிச்சயமாக அது பெருத்த லாபத்தையடையச்செய்யும். செயல் எனக் கூறிவிடலாம். யோசித்து முடிவுக்கு வராமல் எக்காரியத்திலும் இறங்கமாட்டார்கள். தோல்வியால் சோர்வடையமாட்டார்கள். அசுரத் தன்மையுடன் மேலும் மேலும் முயற்சிசெய்து வெற்றிபெறுவர். உலக வாழ்க்கை நித்தியம். அதில் தான் நல்ல பதவியடைய வேண்டியது மிகவும் முக்கியம் என்று நினைப்பதுபோலத் தோன்றும் இவர்களது வாழ்க்கை வசீகரமான தோற்றமும் விடாமுயற்சியும் தன் காரியத்தியேயே கண்ணுயிருக்கும் தன்மையும் உடைய இவர்கள் செல்வமும் செல்வாக்கும் பொருந்தியவர்களாக வாழ்வதில் வியப்பொன்றுமில்லை. துளிகூடச் சந்தேகமில்லாமல் இவர்களை அதிர்ஷ்டசாலிகள் எனக் கூறலாம்.

காலத்துக்குக்காலம் எதிர்பாராத அதிர்ஷ்டங்கள் கிட்டும். எரிபொருளில் இயங்கும் வாகனம் அமையும். மில், அல்லது அச்சுச்சாலை போன்றவற்றிற்கு உரிமையாளராக விளங்குவர்.



காவியம், ஓவியம், சங்கீதம், நடனம் முதலியவைகளில் மனதைப் பறிகொடுக்கக்கூடிய இவர்களே இன்றுவரை பண்டைக்கால நாகரீகச் சின்னங்களையும், கலைகளையும் பாதுகாத்து நமக்கு அளிப்பவர்கள். உல்லாசமான வாழ்க்கையையே விரும்புவர். வீட்டைச் சதா அலங்கரித்தவண்ணம் இருப்பர். சுற்றுப்புறங்களை மலர் தோட்டங்களால் நிரப்புவர். இவ்வாதிக்கம் உள்ள ஆண்களும் நகைகளை அணிவார்கள். தாங்கள் விரும்புகிறவர்களிடம் அன்பு, இரக்கம், தயை உடையவர்களாக இருப்பர். நண்பர்களில்லாதவர்களிடத்து மிக அவதானமாக நடந்துகொள்வர். எப்போதும், இன்பமாகவும் தமாசாகவும் இருப்பார்கள். மிகத் தாராளமான மனப்பான்மையுடையராகவே தோன்றுவர். ஆனால் தனக்கு சந்தோஷமூட்டியவர்களுக்கும், உதவியவர்களுக்கும்கூட ஏதாவது கொடுக்க மனம்வராது. தாராளமாக ஏனையோரை உபசரிப்பர். இவ்வெண்களில் பிரசித்தமான கலைஞர்கள் பிறந்துள்ளனர். இவர்களுக்குப் பொதுஜன ஆதரவு இருக்கும். இதற்கு இவர்களது வசீகரத்தோற்றமே காரணம். இவர்களுக்கு ஊன், உடை, உறையுள் இவற்றுக்குக் குறைவிராது. யாராவது உதவி செய்துகொண்டேயிருப்பார்கள். இவர்கள் புத்திரபாக்கியம் அதிகமாக உடையவர்கள், இவர்களுக்கு அதிர்ஷ்ட திருமணம் நடக்கும். தமது அந்தஸ்தை மிஞ்சிய மனைவியையோ அல்லது கணவனையோ அடைவர். தன்னை விட மேலான அந்தஸ்தில் உள்ளவர்களால் காதலிக்கப்படுகிறார்கள். இவ்வெண்ணுடன் இணையும் எண்கள் பொறுத்து இவர்களது வாழ்க்கை அமையும்.

இனி, இவ்வாதிக்கம் இணைந்த பெரியார்களை நோக்குவோம். பிராஞ்சு நாட்டில் பிறந்து, மேல்நாட்டைக் கதிகலக்கிய நெப்போலியன் போனபாட்.

**தோற்றம்: 15 - 8 - 1769.**

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 2 | சந்திரன் | மென்மை | வாழ்க்கை |
| விதி எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| விளைவு | 5 | புதன் | தோழமை | |

இவ்வமைப்பை நோக்கும்போதும் பிறந்த திகதி எண் 6ஆக அமைந்துள்ளது. இதன் கிரகம் சுக்கிரன். விதி எண் சூரியனையும், விளைவு எண் 5ஆக உள்ளதால் அதன் கிரகம் புதன், அதன் தன்மை தோழமை ஆகியவற்றைக் கொண்டு காணப்படுவதால் இவ்வாறான அமைப்புள்ளவர்கள் எக்காரியத்தை மேற்கொள்ளினும் வெற்றியும் அதிர்ஷ்டமும் உண்டாகும். ஆனால் பெயரும், வாழும் ஊரும் நன்றாக அமையவேண்டும்.

இனி, இன்னுமொரு அமைப்புப்பற்றி நோக்குவோம். அன்புக்கும், ஆத்மவளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்து அழியாப்புகழை நிலைநாட்டிய உத்தமர் சேர் பொன் இராமநாதன்.

தோற்றம்: 15 - 4 - 1851.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | வாழ்க்கை |
| மாத எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | |
| விதி எண் | 7 | கேது | சோதனை | |
| விளைவு | 8 | சனி | வேதனை | |

இங்கு இவ்வமைப்பை நோக்கும்போது, விதி எண் 7ஆக அமைவதால் கேது சோதனையாக உள்ளது. குடும்ப வாழ்க்கையில் இவ்வாறான அமைப்புள்ளவர்களுக்கு அவ்வளவு நாட்டம் இராது. வயது ஏறஏற, சமூகசேவை, ஆத்மீகத்துறை ஆகியவற்றிலேயே ஈடுபடுவர். 7இவரது விதியில் இடம் பெற்றகாரணத்தால், பிறப்பெண் 6 ஆக இருந்த போதும் அவரது வாழ்க்கை ஆன்மீகத்துறையிலே ஈடுபட்டுள்ளதை அவதானிக்கலாம்.

இனி, இன்னுமொரு அமைப்பை நோக்குவோம். 'பென்சிலின்' மருந்தைக் கண்டுபிடித்தவரும், நோபிள் பரிசு பெற்ற விஞ்ஞானியுமான சேர் அலெக்ஸாண்டர்பிளெமிங்.

தோற்றம்;- 6 - 8 - 1881



| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | வாழ்க்கை |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விதி எண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இவ்வெண் அமைப்பு 6 திகதி எண்ணாகவும், விதி எண் 5ஆகவும், விளைவு 4ஆகவும் காணப்படுவதால் ஆராய்ச்சி செய்யும் வல்லமையும், வாதாட்டமும், திறமையும் உண்டாகும். ஜனவசியம் உண்டாகும். அழகும், மற்றவரைக் கவரும் தன்மையும் அமையும். எதையும் நேராகக் கதைக்கும் சுபாவம் காணப்படும் அப்படிக் கதைப்பதைக் குறைத்து அன்பாகக் கதைக்கப் பழகவேண்டும். அல்லாவிட்டால் வீணாக மற்றவர்களுடன் பகையை வளர்க்க நேரிடலாம். இவர்களுக்கு எரிபொருளில் இயங்கும் வாகனம் வந்து சேரும். துரிதமான அறிவு காணப்படும். ஆனாலும், 23ம்; 24ம் வயதில் காதல் திருமணம் நிகழலாம்.

இவ்வாறு, 6ம் எண்ணுடன் இணையும் ஏனைய எண்களைப் பொருத்தும், பெயர் எண் பொறுத்தும் வாழ்க்கை அமையும்.

இனி, பெயரிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கைகளைக் கூட்டிக் கண்ட தொகை. 6 என்று வந்தால் அந்த எண் 6ன் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகும். அப்படிப்பட்ட எண்களின் பிரத்தியேக குணங்களையும், பலனையும் நோக்குவோம்.

## 6

நிறைவானதும், குறைவற்றதுமான வாழ்க்கை அமையும். கவர்ச்சியும், அழகும் பெருகும் ஒரே நிதானமான வாழ்க்கையும் வெற்றிகரமான காதலும் அமையும். கலைகளில் நாட்டம் உண்டாகும். ஆராய்ச்சித் திறமை ஏற்படும்.

## 15

இவ்வெண் சூரியனையும், புதனையும் இணைத்துக் காணப்படுவதால் காரியசித்தியும், சதா லாபமடைதலும், எவ்வழியிலாயினும் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளு கிற தன்மையும் குறிக்கும். காமமும், குரோதமும், வஞ்ச கத்தன்மைகளும், மனதைக் கீழே இழுக்கநேரும். சுயநலம் நாளுக்குநாள் விருத்தியாகும். முகவசீகரமும், வாக்குச் சாதுர்யமும் எக்காரியத்தையும் சாதித்துக்கொள்ள உப யோகிக்கப்படும். இகலோக வாழ்வுக்கு மிகச் சிறந்த எண் ணாகும். சுகபோகங்களை நன்றாக அனுபவிப்பர். பேச்சாலும், வசீகரத்தன்மையாலும். பொருளீட்டுவர். செய்காரிய வெற்றியும் கிட்டும். இவர்களுக்கு உதவ எப்போதும் எல் லோரும் தயாராக இருப்பர். போகம்மிகுந்த வாழ்க்கை அமையும். பெயரும், பிறப்பு எண்களும் ஒத்துப்போனால் நல்ல வெற்றிகரமான வாழ்க்கை அமையும். பெயரில் ஆறு இருந்தபோதும், திகதி எண் அல்லது விதி அல்லது விளைவு 7ஆக இருப்பின், இப்பலன் மாறுபடும்.

## 24

இவ்வெண் சந்திரனையும், இராகுவையும் தன்னில் கொண்ட அமைப்பாகக் காணப்படுகிறது. ஆறு வரும் எண் களிலேயே மிக்க அதிர்ஷ்டகரமான எண் 24 ஆகும். இவ் வெண்ணை உடையவர்கள் அரசாங்கத்தால் மிகுந்த ஆதர வளிக்கப்படுவார்கள். மிகப்பெரிய பதவிகளை வெகு சுலப மாக அடைய இந்த எண் உதவிசெய்யும். அந்தஸ்துக்கு மீறிய வண்ணமே வாழ்க்கைத் துணைவர் அமைவர். இவ் வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள் பொலிஸ், ராணுவம் முதலிய அதிகாரத்தைக் குறித்த உடைகளை அணியும் தொழில்புரிவர். இவ்வாறான தொழில்களில் வெகு விரை வாக முன்னேறுவார்கள். மிகச் சாதாரண பதவியில் சேர்ப வர்களையும், உயர்பதவிக்கு விரைவாகத் தள்ளிச்செல்லும் ஆற்றல் இவ்வெண்ணுக்கு உண்டு.



## 33

இவ்வெண் இரண்டு 3 எண்களைக்கொண்டு காணப் படுகிறது. குரு ஆதிக்கத்தால் அமைந்த ஆறாக இது காணப் படுகிறது. மந்திர சாஸ்திரங்களில் குபேரனது எண்ணாகக் குறிக்கப்படுகிறது இவ்வெண். இது அருளும், பொருளும் ஒருங்கே வளர்வதைக் குறிக்கிறது. இந்த எண்ணைப் பெயர் உடையவர்கள்தான் அறிந்தோ, அறியாமலோ பராசக்தி யின் கடாச்சத்துக்குள்ளாவார்கள். இதனால் அருளோடு தனதனிய விருத்தியும் குறையாது. இவர்கள் சொத்தில் தானியத்துக்குக் குறைவின்றிக் குவிந்திருக்கும். மில்கள், அச்சுச்சாலைகள் இவர்கள் சொந்தத்தில் காணப்படும். வாக னப் பொருத்தங்கள் தேடிவரும்.

## 42

இந்த எண் பெயரால் குறிக்கப்படுவோர் ஏழை ஆனாலும் பெரிய உயர்பதவியை அடைவர். இராகுவையும், சந்திரனையும் தன்னில்கொண்ட அமைப்பாக இது காணப் படுவதால் இவ்வெண் உடையவர் ஓரளவு பேராசை உள் ளவராக இருப்பார் என்பதைக் காட்டுகிறது. சிக்கனத்தில் புத்தி சொல்லும். பொருள் சேர்ப்பதில் சமர்த்தர். சுக வாழ்க்கைக்காகப் பணத்தைச் செலவிட ரொம்பவும் தயங்கு வார். மனோபலம் மிகும். அருளும் விருத்தியாகும். நீரிழிவு நோய் இருப்பவர்கள் இப்பெயருக்குத் தனது பெயரை மாற்றி முதல்நாள் 108 தரம் எழுதி, ஒவ்வொருநாளும் 42 தடவைகள் எழுதிவர நோய் குணமாகும்.

## 51

இவ்வெண் புதனையும், சூரியனையும் தன்னுள் கொண்டு காணப்படுகிறது. ஆறு எண்ணின்கீழ்க் காணும் எண்களில் இதுவே மிகவும் சக்திவாய்ந்தது. திடீர் முன் னேற்றம் இதனால் குறிக்கப்படுகிறது. நேற்றுவரை சமான்ய ராக இருந்தவர் இன்று பிரபலத்துடன் பிரமுகராவார்.

எதிர்பாராதவகையில் மிகப்பெரிய பதவிகளை வசிக்கநேரும். சரீரமும், மனமும் சக்தியால் வியாபிக்கப்பட்டு அடக்க முடியாதபடி போகும். அதிகமான சுறுசுறுப்பு உண்டாகும். எடுத்த காரியத்தை மிகுந்த உற்சாகத்துடன், பிரயாசைப் பட்டுச் செய்துமுடிப்பர். இரவு நித்திரைகூட வராது. இவர் கள் எடுத்த காரியம் செய்துமுடிக்கும்வரை ஏராளமான பொருள் வரவைக் குறிப்பதால் மிக அதிர்ஷ்டகரமான எண். வாகனப் பொருத்தங்கள் உண்டு. தோட்டங்கள், இயந்திரச் சாலைகள் இவர்கள் பெயரில் அமையலாம்.

## 60

இவ்வெண், சுக்கிரனையும் பூச்சியத்தையும் கொண்டு அமைந்தபோதும் மிக இன்பகரமான எண்ணுகைக் கருதப்படு கிறது. மேன்மையான வாழ்க்கை அமையும். அதிர்ஷ்டமான திருமணம் நிகழும். வெற்றிகரமான வாழ்க்கை அமையும். மிக சந்தோஷகரமான குடும்ப வாழ்க்கை ஏற்படும்.

## 69

இவ்வெண் சுக்கிரனையும், செவ்வாயையும் கொண்டு காணப்படுவதால் இந்த எண்ணைப் பேராகக்கொண்டவர்கள் பெரிய சாதனையை நிலைநாட்டுவர். எடுக்கும் முயற்சியில் அமோக வெற்றி கிட்டும். நிகரற்ற பொருள் வரவும், மிகக் கம்பீரமான தோற்றமும் அமையும். உணர்ச்சிவசப்படுவ தால் பணத்தை அள்ளிவீசுவர். மனத்திருப்திக்காக ராஜ குணங்கள் உடம்போடு ஒட்டிவிடும். மிகமிக சௌகர்யமான வாழ்க்கை நடத்துவார்கள். பேச்சிலே இணையற்றவர்கள்.

## 78

கேதுவையும், சனியையும் கொண்டு காணப்படுப வர்கள். இவர்களுக்கு ஆரம்பத்தில் சில சோதனைகள் ஏற் பட்டபோதும் முடிவு வெற்றியாக அமையும். இவர்களிடம் சமயப்பற்றும், கவிதா சக்தியும் மிகுந்து காணப்படும். கேட் போர் மயங்கும்படியாகப் பேசுவார்கள். வாக்கிலே வாணி வீற்றிருப்பாள். சமூகசேவை போன்றவற்றில் நாட்டம் இருக் கும். மிகச் சுலபமாகப் பெரும் தொகைகள் இவர்களுக்குக் கிட்டும். எல்லோராலும் மதிக்கப்பட்டவர்களாக வாழ்வர். அழகும், கவர்ச்சியும், கம்பீரமும் ஒருங்கே அமையும், மிக ஜாக்கிரதையாக இல்லாவிடில் வீண் பொருள்இழப்பு ஏற்படும்.

## 87

சனியையும், கேதுவையும் கொண்டு இணைந்த எண் ணுகக் காணப்படுவதால் இயந்திரப் பொருத்தங்கள் உண் டாகும். பின்னிட்டகாலத்தில் கடவுள்பக்தி அதிகரித்து ஆத்மீகத் துறையில் ஈடுபடுவார்கள் தீய எண்ணங்களும் இவ்வாதிக்கருக்கு ஏற்படலாம். ஆனபடியால் கவனமாக இருப்பது அவசியம்.

## 96

செவ்வாயையும், சுக்கிரனையும் ஒருங்கிணைந்த எண் ணுக உள்ள காரணத்தால் எடுத்த காரியத்தில் வெற்றியும், கல்வியையும், கலைகளில் அமோக வெற்றியையும் உண்டு பண்ணும். ஸ்திரீ வஸ்யமும் உண்டு, மிக அதிர்ஷ்டகரமான எண்ணுகும்.

## 105

இவ்வெண் சூரியனையும், பூச்சியத்தையும், புதனை யும் ஒருங்கிணைந்து காணப்படுவதால் ஆரம்பத்தில் அமோக வெற்றியும், மேன்மையும் ஏற்பட்டு நடுப்பகுதியில் சிறிது சங்கடம் ஏற்பட்டு, முடிவில் மீண்டும் ஜனவசியமும், வெற்றி யும், நேர்த்தியான சுகபோக வாழ்க்கையும் அமையும். அதிர்ஷ்டமான திருமணம் நிகழும்.

எது எப்படியாக இருந்தபோதும், ஆறும் எண் ஆதிக்கர்கள், ஆறு வரும் எண்ணில்தான் தமது பெயரை வைத்து வெற்றிபெறவேண்டும். அதுவே இவர்களுக்கு வெற் றியைத் தரும் எண்ணுகும்.

இனி, ஆறும் எண் ஆதிக்கருக்கு உண்டாகும் உடல் நோய், உணவு, மூலிகைகளை நோக்குவோம்.

இவ்வாதிக்கரின் சரீரம் ஸ்திரீ அம்சமானதால் ஆண்களும் பெண்கள்போன்ற கவர்ச்சியை உடையவர்களாகக் காணப்படுவர். அழகுக்கு இவர்களே அளவுகோல். நீண்டு நன்கமைந்த கண்கள் காந்தசக்தி உடையனவாக இருக்கும், கேசம் அழகாகச் சுருண்டிருக்கும். வட்டவடிவமாகவோ அல்லது கோளமாகவோ முகம் காணப்படும். பற்கள் உறுதியாகவும், பிரகாசமாகவும் இருக்கும். கன்னம் சதைப்பிடித்து இருக்கும். சரீர அமைப்பு செதுக்கிய சிப்பம்போல காட்சி தரும். குளிர்ந்தபார்வை உண்டு. பார்வைக்கு ரம்மியமான இவர்கள் நடுத்தரமான உயரமுடையவர்கள். கம்பீரமாகத் தோற்றம் கொடுப்பார்கள். மற்றைய எண்கள் பொறுத்து வடிவ அமைப்புகள் சிறிது மாறுபடும். கழுத்து சதைப்பற்றி காணப்படும். உடல் ஸ்பரிசத்துக்கு மென்மையாக இருக்கும். வாயைத் திறந்தாலே சிரிப்பதுபோலத் தோன்றும். அங்கங்கள் எல்லாம் அளவிட்டுச் செதுக்கியதுபோலக் காணப்படும். காதலுக்கு ஏற்ற மனதைப்போல உடலும் உடையவர்கள். வயோதிபப் பருவத்திலும் அழகும், கவர்ச்சியும் குறையாது.

**நோய் :**

காற்றோட்டமான இடத்தில் வாசம் செய்யாவிடில் இவர்களுக்கு இருதய பலவீனமும் அதைப்பற்றின நோய்களும் உண்டாகும். பெரும்பாலானோர் இருதய நோய்களையும் அடைகின்றனர். இரத்தோட்டக் கோளாறுகளால் நேரும் வியாதிகளையும் அடைகின்றனர். மலச்சிக்கல்கள் ஏற்படவிடாது கவனித்துக்கொள்வது அவசியம். அஸ்மா போன்ற நோய்களும் இவ்வெண் ஆதிக்கருக்கு வரலாம். இவ்வெண்ணுடன் மூன்றும், ஒன்பதும் சேர்ந்தால் அஸ்மா அல்லது அக்ஸ்சிமா என்னும் நோய் வரலாம்.

**உணவு மூலிகை :**

இவர்கள் நோய்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க, அப்பிள், மாதுளை, அத்தி, திராட்சை, கிஸ்மிஸ், வால்நட், ஆப்பிரிகாட், பாதாம், ரோஜா இதழ்களும் நன்மைதரும். இருதய பலவீனம் இருப்பின் வைத்தியர் அனுமதி இன்றி பாதாம் சாப்பிடக்கூடாது. கனிகள் மிக நல்லது. நெல்லிக் கனியும் சேர்ப்பது சுகம்தரும்.



இனி, அதிர்ஷ்டகாலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் ஆகியவற்றை நோக்குவோம். 6, 15, 24 எண்களை திகதி எண், அல்லது விதி எண் அல்லது விளைவெண்ணாகக் கொண்டவர்கள்.

6ம் எண்காரர், கண்ணியமும் ஊக்கமும் உடையவர்களாக இருப்பர். அடக்கமான சுபாவமும், ஆழ்ந்த கருத்துகளும் இருக்கும். கலைகளில் சுலபமாகத் தேர்ச்சி ஏற்படும். பொருள் சேர்ப்பதில் மிகவும் ஆர்வமிருக்கும், பெண்தன்மை ஆண்களிடமும் ஓரளவு காணப்படும்.

15ம் எண் ஆதிக்கர்கள் வசீகரமான தோற்றமுடையவர்கள். எல்லோரையும் வெகு எளிதில் வசப்படுத்தக்கூடியவர்கள். ஆதாயம் வந்துகொண்டே இருக்கும். பிரமிக்கத்தக்க பேச்சுவன்மையும் கலையார்வமும் உண்டு. சாதாரணமாகப் பேசுவதே தேர்ந்த நடிகரோ பிரசங்கியோ பேசுவது போல இருக்கும். இயற்கையாகவே வாதமிடுவதும் நகைச்சுவையுடன் பேசுவதிலும் சமர்த்தராக இருப்பர். எவரைப் பார்த்த மாத்திரத்தில் புரிந்துகொள்ள்ளக்கூடய கூர்மையான வசீகரம்மிகுந்த விழிகள். படைத்தவர்களாக இருப்பர்.

24ம் எண் ஆதிக்கர்கள், அடக்கமான தன்மைகள் நிரம்பிய இவர்களே காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் சிறந்தவர்கள். சமயோசிதமாகப் பேசுவார்கள், அதிர்ஷ்டகரமான விவாகமும், பெரிய பதவியும் வாழ்க்கையில் தேடி வரும். இவர்களுக்குத் துணிச்சலும், தீவிரமும் உண்டு. சலியாத உழைப்பால் அதிர்ஷ்டத்தை முழுவதும் பிரயோசனப்படுத்திக்கொள்வார்கள். மேல் அதிகாரிகளால் பெரிதும் விரும்பப்படுவார்கள்.

அதிர்ஷ்ட காலம் :

முக்கியமான காரியங்களை 6, 15, 24 திகதிகளிலும், விதி, விளைவு எண் வரும் நாட்களிலும் செய்யலாம். 9, 18, 27 வரும் எண்களும் விரும்பத்தக்கவையே.

துரதிர்ஷ்ட தினங்கள் :

3, 12, 21, 30 திகதிகளும், விதி விளைவு எண்களுமாகும். ஆனல் ஆறும் எண் ஆதிக்கருடன் மூன்றும் எண்ணும் இணைந்துகாணப்படின், சாதகமாக அமையலாம்.

நிறம் :

ஆழ்ந்த பச்சை, ஆழ்ந்த நீலம், ஏனைய நீலங்களும், பச்சை, சிவப்பு கலந்த வர்ணங்களும் அதிர்ஷ்டமானவை. வெள்ளை, மஞ்சள், ரோஸ் ஒத்துக்கொள்ளாத நிறங்களாகும்.

இரத்தினம் :

மிகமிக அதிர்ஷ்டமானது மரகதம் (பச்சை). இருதய வலிமையும், சந்தோஷமும், அதிர்ஷ்டமும் பச்சை அணிவதால் ஏற்படும்.

ஆறும் எண் ஆதிக்கருக்கு உகந்த தொழில்பற்றி நோக்குவோம் :

ஆறும் எண்காரருக்குக் கலைத்தொழில் காந்தம் போலக் கவரும். எத்தகைய கலைத்தொழிலும் நிச்சயமாக வெற்றிதரும். புடவைக்கடை, ஆபரணங்கள், பிளாஸ்ரிக் கடை வியாபாரம்போன்ற தொழில்களைச் செய்து ஆதிர்ஷ்டமாக வாழமுடியும். வட்டிக்கடை, வங்கி ஆகியவற்றிலும் முன்னேறமுடியும். அரசாங்க பதவி வகிப்பவர்களும் படிப்படியாக உயர் பதவிகளை அடைவர். 6ம் ஆதிக்கம் உள்ளவர்கள் கலைத்துறையிலும், 24ம் எண் ஆதிக்கர்கள் உயர் உத்தியோகத்திலும் பிரகாசிப்பர்.

இனி, விவாகப் பொருத்தம்பற்றி நோக்குவோம். ஆறும் எண் ஆதிக்கர்கள் தம்மைப்போன்ற அழகான ஆறும் எண்காரரிடமே மனதைப் பறிகொடுப்பர். எட்டாம் எண்



ஆதிக்கர்கள் இவர்களிடம் அடங்கிநடப்பர். ஐந்தாம் எண் காரரும் வரவேற்கத்தக்கதே. எனினும் ஆறுடன் இணையும் ஏனைய எண்கள் பொருத்தும் கணவனையோ அல்லது மனைவியையோ அல்லது நண்பர்களையோ தெரிவுசெய்தல் வேண்டும்.

இனி, பொருத்தம்பற்றி நோக்குவோம்.

ஆண் தோற்றம்: 8-6-1954 பெண் தோற்றம்: 24-5-1957

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | 6 | சுக்கிரன் |
| மாத எண் | 5 | புதன் | 2 | சந்திரன் |
| வருட எண் | 9 | செவ்வாய் | 1 | சூரியன் |
| விதி எண் | 6 | சுக்கிரன் | 6 | சுக்கிரன் |
| விளைவு | 1 | சூரியன் | 6 | சுக்கிரன் |

இவ்வாறுக பொருத்தம் அமையின், சுகபோகமான வாழ்க்கையும், வாகன வசதிகளும், சந்தோஷமான இல் வாழ்க்கையும் அமையும். டெயரில் ஏழு வராமலும் இரண்டு இடம்பெறுமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். அதிஷ்டகரமான, இனிமையான, இன்பகரமான சுகபோக வாழ்க்கை அமையும். எல்லாமே சந்தோஷகரமாக அமையும். மனதுக்குகந்த கணவனும் மனதுக்கிசைந்த மனைவியுமாக விளங்குவர்.

இன்னுமொரு பொருத்தத்தை நோக்குவோம்,

ஆண் தோற்றம்: 15-6-1957 பெண் தோற்றம்: 2-6-1960

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | 2 | சந்திரன் |
| மாத எண் | 3 | குரு | 8 | சனி |
| வருட எண் | 1 | சூரியன் | 9 | செவ்வாய் |
| விதி எண் | 7 | கேது | 6 | சுக்கிரன் |
| விளைவு | 8 | சனி | 7 | கேது |

மேற்காட்டப்பட்ட பொருத்தத்தை நோக்கும் போது, ஆணுக்கு திகதி எண் 6 ஆகவும் பெண்ணுக்கு விதி

எண் 6 ஆகவும் உள்ள காரணத்தால் இங்கு இருவருக்கும் பொருத்தமுண்டு. ஆனால் ஆணுடையதும், பெண்ணுடையதுமான தாய் தந்தையருக்கிடையில் பெரிய பிரச்சனை உண்டாகும். ஆணுக்கு விதி எண் ஏழும், பெண்ணுக்கு விளைவு ஏழாகவும் உள்ளதால் பொருத்தமுண்டு. 7க்கும் 2க்கும், 7 க்கும் 7 க்கும் பொருத்தமுண்டு. 6 க்கும், 6 க்கும் 7 க்கும் பொருத்தமுண்டு என்பதைக் கவனிக்கவும். இவ்வாறான பொருத்தம் பார்க்கும்போது திகதி எண், விதி எண், விளைவு ஆகியவற்றிற்குச் சரியான பொருத்தங்கள் காணப்படுகின்றனவா என்று சரியாகக் கவனித்துத் தெரிவுசெய்தால் பயன் ஏற்படும். பெயர்களையும், எண்களுக்கேற்ப பொருத்தமாக அமைத்துக்கொள்வது பலன்தரும்.

இனி, ஏழாம் எண்பற்றி நோக்குவோம்.

## எண்: 7 கிரகம்: கேது தன்மை: சோதனை

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்கு இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி.

7, 16, 25 ஆகிய எண்களைத் திகதி எண்ணாகவோ அன்றில் விதி அல்லது விளைவெண்ணைக் கொண்டவர்களுக்கு இதன் பொதுவான குணங்கள் காணப்பட்டபோதும் இதனோடு இணையும் ஏனைய எண்கள் பொருத்தும் இவர்களது வாழ்க்கை அமைப்பு மாறுபடும். ஏழு எண்ணை விளைவெண்ணைக் கொண்டவர்கள் குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கற்றவர்கள். ஆத்மீகத் துறைகளுக்குத்தான் இவர்கள் தகுதி வாய்ந்தவர்கள். இளமையில் திருமணம் செய்யவேண்டுமென்ற ஆவலினால் தூண்டப்பட்டுத் திருமணத்தைச் செய்துவிட்டு பின்பு விரக்தி உற்று, விவாகரத்து செய்துகொள்வர். சிலர் பிரிந்திருப்பர்; சிலர் சிறுவயதிலேயே தாரம் இழந்து தவிப்பர், இவ்வாறு ஏழு விளைவு வரப்பெறுபவர்கள் 30வது



வயதின்பின்பே திருமணம் செய்வது விரும்பத்தக்கது. அதற்கு முன் வரும் சம்பந்தங்களை வேண்டாமென்று ஒதுக்குவது நன்மையே. படிப்புத்துறையில் தனது புலனைத் திருப்புவதால் அமோக வெற்றிகிட்டும்.

கறுப்பாக இருந்தால் கூடியவசீகரத் தோற்றம் உடையவர்கள். எப்போதும் சுத்தமாக ஆடைகளை அணிவர். நிமிர்ந்தே அலங்காரமாக நடப்பர். நடையில் ஒரு மிடுக்கு காணப்படும். அலங்காரப் பிரியரல்லவென்றாலும் நாசுக்காக உடை அணிவர். உயரமான தோற்றமும் உண்டு. அனைவருடனும் சரளமாகப் பழகுவர். வார்த்தைகளை மிகவும் நிதானித்தே உபயோகிப்பர். தன்னம்பிக்கை மிகுந்திருக்கும்போது வாயாடிபோல் அதிகம் பேசுவர். தன்னம்பிக்கை குறைந்தால் ஊமைகள்போல மௌனமாக இருப்பர். நடிப்புத் திறமை இவர்களிடம் காணப்படும். எழுத்துத்திறமை, கவிதை புனையும் ஆற்றலும் இவர்களிடம் காணப்படும். இவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் அபிப்பிராய பேதங்கள் எப்போதும் காணப்படுவதால், நண்பர்கள் இவர்களுக்கு அதிகமாகக் காணப்படுவதில்லை. இவர்களில் அதிகமானோர் முற்கோபிகளாகவும் காணப்படுகிறார்கள். அலங்காரமாகப் பேசிவிட்டு பின்புதான் யோசிப்பார்கள். மனித வாசத்தைவிட ஏகாந்தம் இவர்களுக்கு இனிமையை ஊட்டும். கஷ்டம் வந்தாலும், துன்பம் வந்தாலும் மனத்தைரியமாகத் தாங்கிக்கொள்வார்கள். பிறரிடம் கூறி ஆற்றிக்கொள்ளமாட்டார்கள். அடிக்கடி இவர்கள் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்பட்டு இவர்கள் நிம்மதியைச் சீர்குலைக்கும்போது, ஏதோ பறிகொடுத்தவர்களைப்போலக் காணப்படுவார்கள். ஏன் இறைவன் என்னை இப்படிச் சோதிக்கிறான் என்று துயர் அடைவார்கள். இவர்களுடன் இணையும் எண்கள் பொறுத்து இவர்கள் வாழ்வும் மாறுபடும். ஏழுடன் எட்டு, ஒன்பது இணைந்துவரின் சமூகத் தொண்டும் செய்வர். அரசியலிலும் இறங்குவர். ஏழு எண்ணுடன் எட்டு, ஆறு இணைந்துவரின் கலைகளிலும், கவிதைகளிலும், எழுத்துத்துறையிலும் ஆர்வம் மிகும், அரசியலிலும் தலைவர்களாக மதிக்கப்படுவர். எது எப்படி அமைந்தபோதும், நினைத்த மனதுக்கு இசைந்த

ஆணையோ, பெண்ணையோ மனந்து இன்பமாக வாழ இலாயக்கற்றவர்கள். சிலவேளைகளில் குழந்தைப் பாக்கியமும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

இவர்களிடம் கவர்ச்சி காணப்பட்டபோதும் பெரும்பாலும் துர்அதிர்ஷ்டசாலிகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் காதல் ஒருபோதும் வெற்றி அழிப்பதில்லை. தோல்வியிலேயே முடியும். அப்படியில்லை எனத் திருமணம் நடந்தாலும், குடும்ப வாழ்க்கையில் சிறிதுகாலம் சென்றதும் கலகமும் பிரிவுகளும் தோன்றும். நிம்மதி குலைந்து தவிப்பர். சங்கீத ஞானமும் இவர்களிடம் காணப்படும். சிறிதளவு தந்திரசாலிகள். நாசூக்காகக் காரியத்தைச் சாதிப்பர். இவர்கள் ஆத்மீகத்துறையில் இறங்கின் இவர்கள் புகழ் எட்டுத் திசை எங்கும் பரவும்.

சமூகத்தொண்டில் ஈடுபட்டாலும், இவர்கள் புகழ் அடைவார்கள். குடும்ப வாழ்வில் இவர்கள் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. நல்ல எண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள்கூட இவ்வெண்ணில் பெயரை வைத்திருந்தால் இந்நிலை தான் ஏற்படும். அதிலும் குறிப்பாக, யாருமே 34 பெயரை வைத்தல் கூடாது, சாதாரண வாழ்நாள் முழுவதும் பெரும் சோதனையாக அமைந்துவிடும்.

இனி, இவ்வாதிக்கம்கொண்ட உலகப் பெரியார்கள் ஒருசிலரை நோக்குவோம்.

கத்தோலிக்க திருச்சபைக்குப் புத்துயிரூட்டிய வத்திக்கான் பாப்பரசர் 23ம் அருளப்பர்,

தோற்றம் : 25 – 11 – 1881.

| | எண்கள் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | சோதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 7 | கேது | சோதனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு எண் | 5 | புதன் | தோழமை | |



இங்கு இவ்வமைப்பை நோக்கும்போது, கிறிஸ்து பிறந்ததும் 25ம் திகதி, இவர் பிறந்ததும் 25ம் திகதி, விதி எண் 9ஆகக் காணப்படுகிறது. விளைவு 5ஆக உள்ளது. 9பது எல்லாவற்றையும் அடக்கி ஆளும் வலிமைமிக்கது. 5து ஜன வசியம் மிக்கது. 25ஆகவுள்ள ஏழு ஆத்மீகத்துறை மூலம் தனது சாதனையையும், புகழையும் நிலைநாட்டி உள்ளதைக் குறிக்கிறது. இங்கு குடும்ப வாழ்க்கைக்கு இடமில்லை.

இன்னுமொரு அமைப்புப்பற்றி நோக்குவோம்.

சைவ உயர்பீடத் தலைவர் சிவாகம ஞானபானு அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள்.

தோற்றம் : 16 – 11 – 1886.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | சோதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 3 | குரு | போதனை | |
| விதி எண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இவ்வமைப்பும் திகதி எண் ஏழாகவும், விதி ஐந்தாகவும், விளைவு ஆறாகவும் உள்ள காரணத்தால் சமூகத்தொண்டும், ஜனவசியமும் உண்டாகும். இவர்கள் காட்டும் வழியைச் சுலபமாக ஏனையவர்கள் பின்பற்றுவார்கள். இவரது வாழ்க்கையும் ஆன்மீகத் துறையிலேயே லயித்துள்ளதை நோக்கலாம்.

இனி, இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்.

1949ம் ஆண்டு பாரிஸ் நகரத்தில் நடத்திய உலக சமாதான சம்மேளனத்தில் சமாதான அடையாளத்தைத் தேர்ந்து எடுத்தவரும், புறாவின் சித்திரத்தைப் பழைய காலத்து நூதன சித்திர சிற்பியுமாகிய ஸ்பானிய தேசத்தைச் சேர்ந்த பபலோ பிக்காசோ.

தோற்றம் ; 25 – 10 –1871

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | சோதனை | வாழ்க்கை |
| மாத எண் | 8 | சனி | வேதனை | |
| வருட எண் | 7 | கேது | சோதனை | |
| விதி எண் | 8 | சனி | சனி | |
| விளைவு | 3 | குரு | போதனை | |

இவ்வமைப்பை நோக்கும்போது திகதி எண் 7 ஆகவும், விதி எண் 8 ஆகவும், விளை 3 ஆகவும் காணப்படுவதால், 'பப்லோ பிக்காசோ'' ஒரு சமாதானத் **தூது**வராக செயல்பட காரணம் **விளைவு** 3 ஆக **அமைந்துள்ளது.** குரு சமாதான முன்னோடியாகவே காணப்படுவர்.

இனி, ஏழு எண்ணைப் பெயரில் கொள்ளும்போது ஏற்படும் விளைவுகள்பற்றித் தனித்தனி நோக்குவோம். ஏழு தவிர வேறு எந்த எண்ணில் பிறந்தவர்களும் ஏழு வரும்படி பெயர் வைக்கக்கூடாது. ஆத்மீகத் துறையில் ஈடுபடுபவர்கள் இவ்வெண்ணில் தமது பெயரை வைக்கலாம். குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்கள் இவ்வெண்ணைத் தமது பெயரில் வைக்கக்கூடாது.

## 7

இவ்வெண் பெயராக இடம்பெறின், உயர்ந்த இலட்சியமுடையவராகத் தோன்றியபோதும் பெரிய சோதனைக்குள்ளாவார்கள். இவர்கள் முயற்சிகள் எல்லாம் பெரிய போராட்டமாக அமையும். ஆத்மீகத் துறையிலேயே மனம் நிம்மதி அடையும்.

## 16

இவ்வெண் சூரியனையும், சுக்கிரனையும் தன்னுள் கொண்டு காணப்படுவதால், இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள் ஆரம்பத்தில் உயர்ந்து, திடீர் எனத் தலை கீழாக விழுவர். கூப்பிடும் பெயரும் இதில் இருப்பது ஆபத்



தானது. உடனடியாக மாற்றி அமைப்பது நலன்தரும். திடீர் இழப்புகள் ஏற்பட்டு வாழ்வில் துன்பமடைவர்.

## 25

இவ்வெண் சந்திரனையும், புதனையும் தன்னில் கொண்டு காணப்படுகிறது. வாழ்வில் சரியான சோதனைகள் ஏற்பட்டு, இறுதியில் ஜனவசியம் ஏற்பட்டு பிரபல்யம் அடைவர். வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டமும் போராட்டமாக அமையும். போராட்டமும் வேதனையும் மிகுந்து காணப்படும்.

## 34

இவ்வெண் குருவையும், இராகுவையும் கொண்டு காணப்படுவதால், வாழ்க்கையில் பெரிய சோதனைகள் ஏற்படும். காதல் தோல்வியில் முடியும். எடுக்கும் காரியங்களில் தடைகள் ஏற்படும். குடும்ப வாழ்க்கை இலகுவில் அமையமாட்டாது. சதா எதையோ நினைத்துக் கவலைப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் வெளியில் சந்தோஷமாக உள்ளவர்போல் தோன்றுவார்கள்.

## 43

இவ்வெண் இராகுவையும், குருவையும் இணைந்து காணப்படுவதால், வாதாடும் வன்மை உண்டாகும். புரட்சிகரமான வாழ்க்கை அமையும். இவர்கள் எல்லாவற்றையும் வெளி வெளியாகப் பேசுவதால் வீணாக விரோதிகளைச் சம்பாதிப்பர். உத்தியோகத்தை ராஜினாமா செய்வது இவர்களுக்குச் சகஜமாக இருக்கும். ஒரு தொழிலில் நிலைத்து இருக்கமாட்டார்கள். வேறு வேறு தொழில் தேடி அலைவர். நிம்மதி கிடைப்பது இவர்களுக்கு அரிதாகக் காணப்படும். நியாயம் பேசிப்பேசிக் காலம் கழிப்பர்.

## 52

இவ்வெண் புதனையும், சந்திரனையும் இணைந்து காணப்படுவதால், ஜனவசியம் உண்டாகியபோதும் முடிவுகள் நிறைவில்லாது போகும். மனம் ஒரே குழப்பமான நிலையில் காணப்படும். மனம் குரங்காகப் பாயும். பிரச்சினைகளுக்கு முடிவுகளைச் சுலபமாகக் கூறுவர். வசீகரம் மிகுதியாகக் காணப்படும். ஆன்மீகத் துறையில் ஈடுபடின் நன்மை அடைவர். மற்ற மனிதர்களின் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டுபண்ணுவார்கள். சொந்த வாழ்க்கைப் பிரச்சினை உள்ளதாக இருந்தபோதும் பிரசித்தி பெற்றவர்களாகக் காணப்படுவார்கள்.

## 61

இவ்வெண் சுக்கிரனும், சூரியனும் இணைந்த அமைப்பாக உள்ளது. ஓரளவு வாழ்க்கை இன்பமாக அமைந்த போதும், வாழ்க்கையில் இன்னல்கள் இணைந்து காணப்படும். வசீகரம் அதிகமாக இருக்கும். மேன்மையான ஸ்தானத்தைப் பல சோதனைகள் மத்தியில் அடைவர். பெரிய மனிதர் ஆதரவும், உதவியும் கிட்டும். அதிர்ஷ்ட திருமணம் அமைந்தபோதும் அமைதி குலைந்து அலைவர். வெளி உலகுக்காக அமைதியாக வாழ்வதுபோல நடிப்பார்கள். உள்மனதில் கவலை படிந்து காணப்படும்.

## 70

இவ்வெண் கேதுவையும், பூச்சியத்தையும் இணைத்து காணப்படுகிறது. இவ்வெண்ணால் குறிக்கப்படுவோர் தீவிரவாதியாவார். சுகமான வாழ்க்கை சூழ்நிலைகளால் தடைப்படும். காதல் விவகாரங்கள் தோல்வியிலேயே முடியும். அடிக்கடி தோல்விகளும், ஏமாற்றங்களும், சிரமங்களும் ஏற்படும். சிரமங்களின்பின்பு வெற்றி காணப்பட்டபோதும் வாழ்க்கையில் பயங்கர சம்பவங்கள் நிகழும். என்ன இருப்பினும் இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாவார்கள்.



## 79

இவ்வெண் கேதுவையும், செவ்வாயையும் தன்னுள் கொண்ட அமைப்பாகும். எனவே இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள், ஆரம்பத்தில் மிகச் சிக்கல்களில் மாட்டுப் பட்டபோதும் பிற்பகுதியில் கஷ்டங்களைக் கடந்து வெற்றி பெறுவர். ஆத்மீகத் துறையில் சாதனைகளை நிலைநாட்டுவார்கள்.

## 88

இவ்வெண் சனி ஆதிக்கம் வலுப்பெற்ற ஒரு அமைப்பு. இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள் சோதனைக்குள்ளானபோதும் திடீர் என வாழ்வில் கீர்த்தியுடன் விளங்குவார். ஆத்மீகத்துறையில் பிரபல்யமடைவார்.

## 97

இவ்வெண் செவ்வாயையும், கேதுவையும் ஒன்றிணைந்து காணப்படும் ஒரு அமைப்பாகக் காணப்படுகிறது. செய்ய முடியாது என்பது இவர்களிடம் கிடையாது. எவ்வளவு கடினமாகத் தோன்றினாலும் இன்னல்கள் ஊடாகச் செய்துமுடிப்பர். ஆத்மீகத் துறையில் ஈடுபாடு ஏற்படும். சதா போராட்டமான வாழ்வு அமையும். போராட்டங்களில் வெற்றியும் கிட்டும்.

## 106

இவ்வெண் சூரியனையும், பூச்சியத்தையும், சுக்கிரனையும் கொண்டு துலங்கும். இவ்வெண் மேன்மையான ஸ்தானத்தை அடைந்து, பின்பு திடீர் என கீழ் நிலை அடைந்து, பின்பு அதிர்ஷ்டம் அடைந்தபோதும் பல இன்னல்களை வாழ்வில் தோற்றுவிக்கும்.

என்ன எப்படி இருந்தபோதும் ஏழாம் எண்ணில் பெயர் அமைவது வரவேற்கத்தக்கதல்ல. எப்படியாவது

வாழ்க்கையில் சோதனைக்குள்ளாகித் தவித்து இன்னலுற நேரிடும். எனவே இவ்வெண் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் கூட இவ்வெண்ணில் பெயர் வைப்பது விரும்பத்தக்கதல்ல. ஏற்கனவே சோதனைக்குள்ளானவர்களை மீண்டும் மீண்டும் சோதனைக்குள்ளாக்குவதாக முடியும். எரியும் நெருப்பில் எண்ணெயை வார்த்ததுபோல ஆகிவிடும். எனவே இவ்வெண் ஆதிக்கர் இவ்வெண்ணுடன் இணைந்த ஏனைய எண்ணில் பெயர் வைப்பது நல்லது. இரண்டிலும் வைப்பது நல்லதல்ல. அதுவும் இன்னல்களை விளைவிக்கும். எனவே அவதானமாகப் பெயரை மாற்றவேண்டும்.

இனி இவ் ஆதிக்கருக்கான உடல் நோய், உணவு மூலிகைகள்பற்றி நோக்குவோம்.

உயரமானவர்களாகவே தோன்றும் இவர்கள் கவர்ச்சியும், கலையும் பொருந்திய முக அமைப்பைக்கொண்ட இவர்களது கண்களில் ஏதோ ஒரு பிரகாசம் பிரதிபலிக்கும். மிகச் சிறிய கண்ணாக இவர்கள் கண்கள் தோன்றும். மலச் சிக்கல் இவர்களது இயற்கையான நோய். இதனால் பிற் பகுதியில் ருமட்டிஸம் என்று கூறப்படும். பலவிதமான வாத சம்பந்தமான பிடிப்பு நோய்கள் ஏற்படலாம். சிலருக்கு வியர்வை உண்டாகாமல் அதனால் தோல் உயிரிழத்தலும், கட்டிகள் முதலிய உண்டாதலும் உண்டு. ஏதாவது கடினமான வேலையோ, சரீரப் பயிற்சிகளோ செய்தல் நன்மைதரும். உணவில் கட்டுமானவரை கீரைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். மற்றவைகளைவிட லெட்யூஸ், முட்டைகோஸ், முளைக்கீரை, அரைக்கீரை நன்மையானவை. பூசினி, பறங்கி, வெள்ளரிக்காயும் ஓரளவு வெங்காயமும் மிக நன்மைதரும். பழங்களில் ரசமுள்ள பழங்களும் நன்மை பயப்பனவே. முக்கியமானது திராட்சை, அன்னாசி, கிஸ்மிஸ் பழங்களும், வாழைப்பழமும் நன்மை தரவல்லன. இவ்வாதிக்கர்கள் தமக்கு ஒத்துப்போகக்கூடிய உணவுகளையே உண்டுவரவேண்டும். ஏனெனில் சிறிது மாற்றம் ஏற்பட்டாலும் அஜீரணக் கோளாறுகள் இவர்களுக்கு ஏற்பட்டுவிடும்.



இனி இவ்வெண் ஆதிக்கரின் அதிர்ஷ்டகாலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் ஆகியவற்றை நோக்குவோம்.

7, 16, 25 ஆகிய எண்களைத் திகதி எண்ணாகவோ அன்றி விதி அல்லது விளைவு எண்ணாகவோ கொண்டு காணப்படின் இவ்வாதிக்கத்துக்கு உட்பட்டவராவார். 7ம் எண்ணைக் கொண்டவர்கள் சாந்தமான சுபாவங்களும், அமைதியான மனப்பான்மையும் உடையவர்கள். சுலபமாகப் பிறருக்கு விட்டுக்கொடுத்து அடங்கி இருப்பார்கள். புத்தி சாதுர்யமும், ரசிகத்தன்மையும் விசேடமாக இருக்கும். தெய்வ வழிபாட்டிலும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஈடுபடுபவர்கள். சதா குடும்ப வாழ்க்கையில் சிக்கல்கள் இருந்துகொண்டே இருக்கும். குழந்தைபோன்ற சுபாவங்கள் இருக்கும். காதலிலும், கலையிலும் பிடிவாதம் இருந்தபோதும் காதலில் தோல்வியை எதிர்நோக்க நேரிடும்.

16ம் எண்ணைக் கொண்டவர்களுக்கு விசேடமான மனோசக்திகள் காணப்படும். இவர்களது அபூர்வ சாமர்த்தியங்களைப் பிரகாசிக்கச் செய்யலாம். இவ்வாதிக்கர் குழந்தைப் பருவத்திலேயே பிரசித்தமடைந்த அறிஞர்களும், கவிஞர்களும், நடிகர்களும் பிறந்துள்ளனர். இவர்களில் அனேகர் சமூகம் திடுக்கிடும் செயல்களைச் செய்கிறார்கள். சமூகம் தண்டிக்கக்கூடிய தவறான காரியங்களிலே சகஜமாக ஈடுபடுகின்றனர். முறை தவறின காதல் விவகாரங்களில் ஈடுபடாதிருந்தால் இவர்களது வாழ்க்கை மேன்மை அடையும்.

25ம் எண் திகதி எண்ணாகவோ அல்லது விளைவு எண்ணாகவோ வரின் துரிதமான மதப் பற்று உடையவராகக் காணப்படுவர். தான் அனுசரிக்கும் மதவழிபாடுதான் சரியானது என வாதிடுவார்கள். மதத்துக்காக உயிர்த்தியாகமும் செய்யத் தயங்கமாட்டார்கள். இவ்வெண் ஆதிக்கர்கள் வணங்கத்தக்க மனிதராகிறார்கள். இவர்களை அனேகர் பின்செல்வார்கள். இவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை ஒத்துவரமாட்டாது. இவர்கள் வணங்கப்படும் மனிதராக மதிக்கப்படுவார்கள்.

**அதிர்ஷ்ட காலம் :**

முக்கியமான காரியங்களை 2, 11, 20, 29 திகதிகளிலும், விதி எண், விளைவு இரண்டு வரும் திகதிகளிலும் செய்யலாம். சாதகமான நாட்கள் 1, 10, 19 திகதிகள். 25ந் திகதி எப்பொழுதும் நன்மை தரும். 19ந் திகதிகளில் தீமையும் நிகழும். 8, 17, 26ந் திகதிகளும் துரதிர்ஷ்டமானவை. விதி அல்லது விளைவு 7 அல்லது 8 வரும் தினங்களும் தீய பலன் அளிப்பவையே.

**நிறம் :**

வெள்ளையே இவர்கள் மனதை வெகுவாகக் கவருமெனினும் இலேசான மஞ்சள், வெளிர் பச்சை, வெளிர் நீலம் ஆகிய நிறங்களைத் தரிப்பதே நன்மைதரும். எல்லா ஆழ்ந்த நிறங்களும் இவர்களுக்குத் தீமையானவை. முக்கியமாகச் சிவப்பும், கறுப்பும் துரதிர்ஷ்டமானவை.

**இரத்தினம் :**

வைடூரியம் மிக அதிர்ஷ்டமானது.

ஏழு எண் ஆதிக்கருக்கான தொழில்பற்றிப் பார்ப்போம். சிறந்த எழுத்தாளராக வரலாம். கலைஞராகவும், சிறந்த நடிகராகவும், கவிஞர்களாகவும், ஓவியர்களாகவும், புகைப்படப் பிடிப்பாளர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும் வரலாம். பிடவை, பெற்றோல், டீசல், எண்ணெய், பால், வெண்ணெய், நெய், சோடா, கலர், சர்பத் போன்ற பான வகைகள், சிகரெட், சுருட்டு, பீடி, புகையிலை ஆகிய தொழில்களைச் செய்யலாம். ஹோட்டல்கள், அரிசி ஆலைகள், அரிசி வியாபாரம், எண்ணெய், பால்போன்ற திரவ சம்பந்தப்பட்ட தொழில்களைச் செய்யலாம். வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்களும் சிறந்தவை. இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்களைப் பொறுத்தும் தொழில் அமையலாம்.

இனி விவாகப் பொருத்தம்பற்றி ஆராய்வோம்.

7ம் எண் ஆதிக்கர்கள் அனேகமாக இல்வாழ்க்கையில் இன்னல்களையே அடைகிறார்கள். இவர்கள் ஆத்மீகத் துறையில் ஈடுபடின் பிரபல்யம் அடைவார்கள். குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதாயின், 7க்கு, ஏழாம் இலக்கக்காரரையோ அல்லது இரண்டாம் இலக்கக்காரரையோ தெரியலாம். எவ்வாறு நண்பர்களையோ அன்றில் துணைவனையோ, துணைவியையோ தெரிவதென்பதை நோக்குவோம்.

ஆண் தோற்றம்: 16-1-1957
பெண் தோற்றம்: 7-6-1959.

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | 7 | கேது |
| மாத எண் | 8 | சனி | 4 | இராகு |
| வருட எண் | 2 | சந்திரன் | 4 | இராகு |
| விதி எண் | 3 | குரு | 1 | சூரியன் |
| விளைவு | 2 | சந்திரன் | 7 | கேது |

இவ்வமைப்பை நோக்கும்போது, நேரடிப் பொருத்தம் காணப்படுகிறது, விளைவு 7க்கும் 2க்கும் பொருந்தும். திகதி எண் 7க்கும் 7க்கும் பொருந்தும். விதி எண் 3க்கும் 1க்கும் பொருந்தும். எனவே இவ்வாறான பொருத்தம் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டபோதும், இணைபிரியாது இணைந்தே வாழ்வார்கள். இன்னுமொரு பொருத்தத்தை நோக்குவோம்.

ஆண் தோற்றம்: 7-2-1951
பெண் தோற்றம்: 19-3-1956.

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | 7 | கேது |
| மாத எண் | 9 | செவ்வை | 4 | இராகு |
| வருட எண் | 5 | புதன் | 4 | இராகு |
| விதி எண் | 7 | கேது | 7 | கேது |
| விளைவு | 1 | சூரியன் | 7 | கேது |

| | |
|---|---|
| 7 | 1 |
| 9 | 4 |
| 5 | 4 |
| 7 | 7 |
| 1 | 7 |

இங்கு இவ்வமைப்பு (X) தரை வடிவத்தில் காணப் படுவதால் ஆணுடைய தாய் தந்தையருக்கும், பெண்ணு டைய தாய் தந்தையருக்குமிடையில் பிரச்சினைகள் ஏற்படும். எனவே பொருத்தம் பார்க்கும்போது, விளைவு 9பதும் ஏழும் வந்தால் கணவன், மனைவிக்கிடையில் பிரிவினை ஏற்படும். 7ம் எண் உள்ளவருக்கு, 7ம் எண் அல்லது 2ம் எண் உள்ள வர்கள்தான் பொருந்தும். இல்லாவிட்டால் குடும்பத்தில் ஒரே தகராறும், பிரிவும், இழப்பும் நேரிடலாம். எனவே மேற்காட்டிய உதாரணங்கள்மூலம் பொருத்தங்களைத் தெரிவு செய்வதை அறிந்துகொள்ளலாம்.

இனி எட்டாம் எண்பற்றி நோக்குவோம்.

## எண்: 8 கிரகம்: சனி தன்மை: வேதனை

"சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா"

8, 17, 26 ஆகிய எண்கள் திகதி எண்ணாகவோ அல்லது விதி அல்லது விளைவெண்ணாகவோ வரின், இவ் வெண்ணின் ஆதிக்கம் பிரதிபலிக்கும். முக்கியமாக இவ் வெண்ணுக்குரிய கிரகம் சனியாகும். இதை இப்படித்தான் என அறுதியிட்டுக் கூறமுடியாதபோதும் இதன் பொது வான குணங்களை நோக்குவோம். இவர்களை எந்த வழி யிலும் திருப்திப்படுத்துவது கடினம். பத்தை எதிர்பார்த்து



நூறு வந்தாலும் திருப்திப்படமாட்டார்கள். இவர்கள் யோசனை அதிகம் உடையவர்கள். கூர்மையான புத்தியும், வாதிடும் வன்மையும் படைத்தவர்கள். நாலு விடயம்பற்றி அறிந்திருப்பதால் நன்றாக வாதிடுவார்கள். அரசியலில் நன் றாகப் பளிச்சிடுவார்கள். சுகங்களையும் மனதால் அனுபவிக்க மாட்டார்கள். தன்நம்பிக்கை மிகக் குறைவு. பயத்தின் காரணமாகப் பெரிதாகவும், மற்றவரை மிரட்டும் வகை யிலும் பேசுவார்கள். வெளியில் பயம் இல்லாதவர்போலக் காட்டினாலும் உள் மனதில் பயந்த சுபாவம் காணப்படும். வெற்றி ஏற்பட்டபின்னர்தான் இவருக்குத் தைரியமுண் டாகும். பிறரையும் எளிதில் நம்பமாட்டார்கள். பிறருடன் பழகுவதில் மிக ஜாக்கிரதையாக இருப்பர். மனம் ஏகாந் தத்தையே விரும்பும். பகுத்தறிவு மிகுந்த இவர்கள் எதி லும் நிதானத்தையே கடைப்பிடிப்பார்கள். பணத்தைச் செலவழிப்பதில் கஞ்சத்தனம் வெளிப்படும். வாழ்க்கைக்கு உபயோகப்படக்கூடிய எல்லா சாஸ்திரங்களையும் நன்கு ஆராய விரும்புவர். எப்பொழுதும் தம்மை உலகிலேயே ஒரு தனி மனிதராகவே கருதியிருப்பார்கள். இது அவர்கள் பேச்சிலும் நடத்தையிலும் வெளிப்படும்.

இவர்களுக்கு முற்கோபம் அதிகம். நண்பர்கள் மிகக் குறைவாகவே காணப்படுவர். நண்பர்களுக்காகச் சண்டைகளில் ஈடுபட்டுச் சிறையும் செல்வார்கள். நண்பர் களால் இவர்களுக்கு நன்மை இருப்பதில்லை. மதுவுக்கோ அல்லது மங்கைக்கோ அடிமையானல் மீள்வது கடினம். சமூகம்பற்றி யோசியாது கீழ்த்தரமான செயல்களில் ஈடு படுவார்கள். இவர்களுக்கு அனேகமாகத் திடீர் மரணங் களே சம்பவிக்கும். இவ்வெண்ணுடன் இரண்டு சேர்ந்து வரின் தற்கொலை, விபத்து போன்றவற்றால், 17, 26, 35, 44, 53, 62 ஆகிய வயதுகளில் உயிர் திறப்பர். பெயர் நன்றாக அமையின் இத்தத்துகளில் இருந்து பாதுகாக்கப் படுவார்கள்.

இவ்வாதிக்கரில் மிக நல்லவர்களும் உண்டு — மிகக் கெட்டவர்களும் உண்டு. கொலை, கொள்ளை செய்பவர் களும், துவக்குச் சூட்டால் உயிர் துறப்பவர்களும் அனேகர்

இவ்வாதிக்கர்களே. இவர்களைக் கோடுகீறி அதில் நிற்பாட்டி வைக்கமுடியாது. தம் இஷ்டம்போலவே செயற்படுவர். இவர்கள் சிறுவயதில் மிக இன்னல்களுக்கு ஆளாவார்கள். நீருடன் அல்லது இயந்திரத்துடன் தொடர்பான வேலை யையே செய்வார்கள். இதனுல் பெரும் பணம் சம்பாதிப் பர். இவர் ஆறும் எண்காரரிடமே அடிமையாகிக் கிடப்பர். ஐந்தாம் எண்காரர் இவர்களது கோபத்தைப் பொருட் படுத்தாமல் இவர்களுடன் நட்புக் கொண்டாடுவார்கள். இனி எட்டு இணைந்த அமைப்பைக்கொண்ட உலகப் பெரி யார்கள் ஒருசிலரை நோக்குவோம்.

80 கோடி சீன மக்களின் குடியரசை நிர்மாணித்த தலைவர் மா. ஓ. சேதுங்.

தோற்றம் : 26 - 12 - 1893.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| வருட எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விதி எண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவு | 8 | சனி | வேதனை | |

இவ்வமைப்பில் திகதி எண்ணும் விளைவெண்ணும் எட்டாக உள்ளது. மா. ஓ. சேதுங் மாபெரும் அரசியல் வாதி. விதி எண் ஐந்தாக உள்ளதால் ஜனவசியம் அவரிடம் காணப்பட்டிருக்கிறது. இவ்வாறுன அமைப்பை உடைய வர்கள் நீர் மூலமாக, இயந்திரத்தின் மூலமாக வெளிநாடு கள் சென்று உழைப்பதுமூலம் முன்னேறியிருப்பார்கள். சிறுவயதில் மிகக் கஷ்டத்தை அனுபவித்தவர்கள் வயது ஏறஏற நன்நிலையை அடைவர். இவர்கள் மதுவுக்கோ, மங்கைக்கோ அடிமையாகாவண்ணம் நடக்கவேண்டும் பத்து வரவு வரின் இன்னும் ஐந்தைக் கடன்பட்டுப் பதினைந்தாக நண்பர்களுக்குச் செலவழித்துவிட்டு மறுநாள் ஒன்றும் இல் லாமல் திண்டாடுவார்கள். எப்படி இருந்தாலும் இல்லை என்று இருக்கமாட்டார்கள். ஏதோ ஒரு வழியில் பணம் இவர்களிடம் வந்துசேரும்.

இன்னுமொரு அமைப்பை நோக்குவோம். புரட் சியை ஏற்படுத்திய இலங்கையின் நான்காவது பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா.

தோற்றம் : 8 - 1 - 1899.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 8 | சனி | வேதனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு | 7 | கேது | சோதனை | |

இவ்வமைப்பை நோக்கும்போது, இவர் புரட்சியில் ஈடுபட விதி எண் ஒன்பதாக அமைந்துள்ளதே காரண மாகும். நினைத்ததை எப்படியாவது சாதித்தே முடிப்பார் கள். இதே அமைப்பைத்தான் எம். ஜீ. ஆரும் கொண் டுள்ளார். இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளானுர்கள். இருவருக்குமே இல்வாழ்க்கை திருப்தியாக அமையவில்லை. காரணம், இவர்களது விளைவு 7 ஆக உள்ளது. இவ்வாறுன அமைப்புள்ளவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை நன்றாக அமைவ தில்லை. தாரம் இழப்பர் - பிரிந்து வாழ்வர் - பிள்ளைகள் இல்லாது கவலை அடைவர். ஆனுல் அரசியல் சமூகங்களில் புரட்சியின்பின் புகழுடன் விளங்குவர். இவ்வாதிக்கருக்குக் குடும்ப வாழ்க்கை இனிக்காது. சிறிதுகாலம் சென்றதும் குடும்ப வாழ்வில் அக்கறை இராது. ஏன் திருமணம் செய் தோம் எனக் கவலை அடைவார்கள்.

சுயவிருப்பத்திற்கமையத் தன்னைத்தானே வருத்தி உயிர்த்தியாகம் செய்த உரும்பராய் பொ. சிவகுமாரன்.

தோற்றம் :- 26-8-1950.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 7 | கேது | சோதனை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | |
| விதி எண் | 4 | இராகு | பகை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

தென்கிழக்கு ஆசியாவில் வழக்குரைப்பதில் தனக்கென ஓர் இடத்தை வகித்து இலங்கைக்குப் புகழ் தேடித் தந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம்.

தோற்றம் :- 8-11-1902.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 1 | கேது | சோதனை | |
| வருட எண் | 2 | புதன் | தோழமை | |
| விதி எண் | 4 | இராகு | பகை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இவ்விரண்டு அமைப்பும் ஒரேமாதிரி இருப்பதை நோக்கலாம். ஆனல் இருவரதும் பெயர்கள் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இவ்வமைப்பு, விதியில் 4 கொண்டுள்ளது. விளைவு 6 கொண்டுள்ளது. இவ்வமைப்பை உடையவர்கள் சற்றும் தயங்காது தமது கருத்தை வெளியிடுவர். துரிதமானதும், கூர்மையானதுமான அறிவு காணப்படும். இவர்களுடன் நியாயம்பேசித் தப்பமுடியாது. பேச்சுவன்மை காணப்படும். கண்ணில் ஓர் காந்தசக்தி துலங்கும். எவருக்கும் பயப்படமாட்டார்கள். தாம் மறைந்தாலும் தமது நாமம் மறவாத அளவுக்கு வீரதீரச் செயல்களை நாடு, சமூகம் வியக்கும் வகையில் அழியா எழுத்துக்களால் பொறித்து விட்டு இவ்வுலகைவிட்டு உயிர் நீப்பர்.

துணிச்சலும் பயமற்ற தன்மையும் இவர்களிடம் நிறைந்து காணப்படும். யாருக்குமே அடிபணியவோ, மண்டியிடவோ விரும்பமாட்டார்கள். தம்மை விட்டுக்கொடுத்தும் பேசமாட்டார்கள், தமது நியாயத்தையே நிலைநாட்டுவர். உயிர் போயினும் அடிபணியமாட்டார்கள்.



மின்னல் மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் பிரங்க்ளின்.

தோற்றம் : 17 - 1 - 1905.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 5 | புதன் | தோழமை | |
| விதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | |
| விளைவு | 1 | சூரியன் | மேன்மை | |

இவ்வமைப்பில், விதி ஆறு, விளைவு ஒன்று. இது ஆராய்ச்சியையும் வெற்றியையும் குறித்துநிற்கிறது. இவ்வமைப்பு உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டமான திருமணம் அமையும். மேன்மையான வாழ்க்கை வாழ்வார்கள். இவ்வெண் ஆதிக்கத்தில் பிறப்பவரில் சிலர் அங்கக் குறைபாடு உள்ளவர்களாக உள்ளனர்.

இனி எட்டுவரும் பெயர்கள்பற்றித் தனித்தனியாக நோக்குவோம்.

## 8

எதிர்பாராத ஆபத்துக்கள், சங்கடங்கள் உண்டாகும். ஆத்மீக வாழ்க்கையில் பெரும் முன்னேற்றத்தை அடைவர். வெற்றி தாமதப்பட்டவண்ணமிருக்கும். பெரும் போராட்டத்துக்குப்பிறகு வெற்றி ஏற்படும்.

## 17

இவ்வெண் சூரியனையும், கேதுவையும் இணைத்துக் காணப்படுகிறது. பலவிதமான கஷ்டங்கள் உண்டாகும். அசு.

ரத்தன்மையுண்டாகும். பலவிதமான கஷ்டங்கள் உண்டாகி இன்னல்களை ஏற்படுத்தும். ஆனால் சலிக்காமல் போராடுவார்கள். தோல்வியை அலட்சியம்செய்து மீண்டும் மீண்டும் போரிட வல்லவர். முடிவில் எல்லா எதிர்ப்புகளையும் வென்று மிகுந்த சக்திமானாக வாழ்வர். சித்திகளைத் தர வல்லது. ஏராளமான ஐஸ்வரியங்களும், காலத்தினால் மங்காத புகழும் ஏற்படும். உலகப் பிரசித்தமான காரியங்களைச் செய்துவிடுவார்கள். தன் இலட்சியத்தை அடைய உயிரையும், உடலையும் சிறிதும் பொருட்படுத்தாமல் தாம் நினைத்த இலக்கையடைந்து வெற்றி ஈட்டுவர். உலகம் இவர்களை மறக்கமுடியாது.

## 26

இவ்வெண் சந்திரனையும், சுக்கிரனையும் கொண்டு காணப்படுகிறது. வயோதிபத்தில் வறுமையையும், வீண் முயற்சிகளையும் குறிக்கின்றது. நண்பர்களாலும், கூட்டாளிகளாலும் பெரும் நட்டங்கள் ஏற்படும். குழப்பத்தையும், தோல்வியையும் ஏற்படுத்தும். 6ம் எண் ஆதிக்கருக்கு நன்மை உண்டாகும். கொலை செய்யக்கூடிய விரோதிகள் உண்டாவர். இலட்சியவாதியாக வாழ்க்கையை ஆரம்பித்து பிற்பகுதியில் பணத்துக்கும் பதவிக்கும் சிரமப்பட நேரும்.

## 35

இவ்வெண் குருவையும், புதனையும் இணைத்துக் காணப்படுகிறது. கல்வியறிவும், ஜனவசியமும் உண்டாகும். கூட்டாளிகளாலும், நண்பர்களாலும் பெருத்த நட்டங்கள் உண்டாகும். பிரமுகராகிப் பொருளை இழப்பர். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படும். தீயவழிகளில் பணம் சம்பாதிப்பர். செலவு கட்டுக்கடங்கியிராது. சதா ஏதும் நோய் உடலில் உண்டாகியவண்ணமிருக்கும்.

## 44

இது இராகுவைத் தன்னுள்கொண்ட அமைப்பு. வாக்குவன்மை ஏற்படும். பகைவர்களை வாயாலேயே சம்பாதிப்பர். ஆபத்தும், சிறைவாசமுமுண்டு. மனம் தீயவழிகளில் செல்லும்.



## 53

ஆரம்பத்திலேயே வெற்றி தோல்விகளை அனுபவிப்பார்கள். வயது ஆகஆகத்தான் நிதானம் ஏற்படும். பிரபலமான வ ழ்க்கை ஏற்படும். சிக்கல்களில் அகப்படுவர். தோல்வியை வெற்றியாக்கிக்கொள்வர். நன்மையான காரியங்களைச் செய்து புகழடைவர்; ஜனவசியம் அறிவு இவர்களுக்கு உண்டாகும். புதனும் குருவும் இணைவதால் ஓரளவுக்கு ஆபத்து இல்லாமல் காக்கவல்லது.

## 62

மிகுந்த புகழையும், பெரும் வெற்றிகளையும், சுக வாழ்க்கையையும் தரும். சுக்கிரனும், சந்திரனும் சேர்ந்த அமைப்பாக உள்ள காரணத்தால் ஆரம்பம் வெற்றியாகவும், முடிவு தோல்வியாகவும் அமையும். பிறரை ஏமாற்றக்கூடிய வசீகரம் உண்டாகும். விரோதிகளைக்கூட மயக்கிவிடுவார்கள்.

## 71

இவ்வெண் கேதுவையும், சூரியனையும் இணைத்த அமைப்பாக உள்ளது. கவர்ச்சியான தோற்றம் உண்டாகும். குடும்ப வாழ்க்கையில் பிளவுகளும் பிரச்சினைகளும் உண்டாகும். முடிவு மேன்மையாக அமையும்.

## 80

இவ்வெண் சனியையும், பூச்சியத்தையும் கொண்டு காணப்படுகிறது. இது மிகச் சூச்சுமமான சக்திகளை உடையது. திடீர் என வாழ்க்கையில் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் நீக்கவும்கூடும். இது ஆபத்தான பெயராக இருந்தபோதும் புகழும், பொருளும், வாகனப் பொருத்தங்களும் உண்டாகி மேலான வாழ்க்கை வாழ்வர்.

## 89

இவ்வெண் சனியையும், செவ்வாயையும் கொண்ட அமைப்பாக உள்ளது. வாழ்வில் வெற்றியும், ஆபத்துக்களும்

இணைந்து காணப்படும். புரட்சிகரமான செயல்களைச் செய்து வெற்றியும், புகழும் அடைவர். அனைவரையும் அடக்கி ஆளும் திறமை உண்டாகும்.

## 98

செவ்வாயும், சனியும் இவ்வெண்ணை ஆட்கொள்வதால் சூச்சுமமான அறிவும், திடீர் கோபமும், பிடிவாத குணமும் உண்டாகும். நிர்வாகத் திறமை ஏற்படும். சில நோய்கள் உடலில் கலந்து கவலைதரும்.

## 107

பிரசித்தியையும், வெற்றியையும் ஆரம்பத்தில் தரும். நடுப்பகுதியில் வீழ்ச்சியும், முடிவில் சோதனையையும் தரும். இவ்வெண் சூரியன், பூச்சியம், கேது என்பவற்றை இணைத்த ஒரு அமைப்பாக உள்ளது.

இனி இவ்வாதிக்கரின் உடல்நோய், உணவு மூலிகை ஆகியவற்றை நோக்குவோம்.

இவர்களது தோற்றம் இவர்களுடன் இணைந்த எண் பொறுத்து அமையும். எட்டில் பிறந்து, ஐந்தை விதியாகக் கொண்டு, எட்டை விளைவாகக் கொண்டவர்களை நோக்கும் போது முரடர்கள்போலத் தோற்றமளிப்பது தெரியும், நெஞ்சை நிமிர்த்தி வீரநடை நடப்பர். விசுக்கியே நடப்பர். கம்பீரமான தோற்றம். மற்றவர்கள் இவர்களைக் கண்ட மாத்திரத்தில் பயப்படுவர். எட்டும், ஒன்றும் வந்து விளைவு ஒன்பதாக அமைபவர்கள் இவ்வாறு தோற்றமளிப்பர். அழகும், கவர்ச்சியும் காணப்படும். விளையாட்டுத் துறையில் பிரகாசிப்பர். சும்மா இரார்கள். பலம்வாய்ந்த பிரயாசையுள்ள நல்ல தொழிலாளராக விளங்குவர். எட்டும், ஆறும் வரின் அழகும், கவர்ச்சியும் இணைந்து மற்றவரை விரைவாக வசீயப்படுத்தி காரியங்களைச் சாதிப்பர். எட்டு ஆதிக்கம் உள்ளவர்கள் உயரத்தில் குறைந்தவர்கள் அல்ல. சுருண்ட கேசமே இவர்களுக்கு அனேகமாகக் காணப்படும். அழகிய பற்கள் அமைந்தபோதும் பலங்குறைந்தவை. கூடிய விரைவில் கெட்டுவிடும்.



இவர்களுக்கு நெஞ்சடைப்பு, திடீர் விபத்து, ஆபத்துகளில் உயிர் நீத்தல்; நீர், நெருப்பால் உயிர் நீத்தல் என்பன நிகழும். சிலருக்கு முள்ளம்பன்றிபோன்ற குத்திட்ட கேசமே காணப்படும். முரடுபோல நோற்றமளிப்பர். அனேகமாகக் குறைபாடு உள்ளவர்கள் இவ்வாதிக்கமுள்ளவர்கள். அதாவது கால் ஊனம், வாய் பேசமுடியாமை, கண்பார்வை அற்று காணப்படுதல் போன்ற குறைபாடு காணப்படும். அல்லது காலம்தாழ்த்திக் கதைப்பர். உரியவயதில் கதைக்கமாட்டார்கள். இவர்களுக்கு அனேகமாகப் பித்ததேகம் காணப்படும்.

நோய் :

இவர்களுக்குப் பித்தம் அனேகமாகக் காணப்படும். குடல் மிகப் பலவீனமானது. சிறுவயதிலேயே அநேகருக்கு வயிற்றுவலி ஏற்படுவதுண்டு. இவர்களுக்கு இரத்தம் சம்பந்தமான நோய்கள் உண்டாகும். இவர்கள் உணவில் மிகக் கவனமாக இருக்கவேண்டும். உணவை அளவுக்கதிகமாகக் கண்டபடி புசித்தல் தடைசெய்யப்படவேண்டும். வாதம், வாயு போன்றவை இவர்களை இலகுவில் பற்றிக்கொள்ளும். பால், பழம் இவர்களுக்குச் சுகம்தரும். கீரைவகைகளை நன்முக உணவில் சேர்க்கவேண்டும். முள்ளங்கி, கருணைக்கிழங்கு, கரட் போன்றவற்றை உண்டுவரின் நன்மை உண்டாகும். எலுமிச்சம்பழம், தோடம்பழம் இவை நன்மை பயப்பன. அடிக்கடி பாவிக்கலாம். உப்பு, சீனிஇவற்றை அளவாகப் பாவிக்கவேண்டும்.

இவர்களின் அதிர்ஷ்டகாலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் ஆகியவற்றை நோக்குவோம்.

8, 17, 26 ஆகிய எண்களைத் திகதிஎண் அல்லது விதி அல்லது விளைவில் கொண்டுள்ளவர்கள், இவ்வாதிக்கத்துக்குட்பட்டவர்கள். ஏனைய எண்கள் பொருத்தும் இவற்றைக் கையாளலாம்.

8ம் எண் ஆதிக்கர்கள், அமைதியான வாழ்க்கையை விரும்புவர். பல காரியங்களைச் சமாளிக்க முயற்சி செய்வார்

கள். மதம், தெய்வவழிபாடு, வேதாந்தம் இவர்களது மனதைப் பிடித்திழுக்கும். உடலோ சுகத்தை விரும்பும். மனமோ தியாகத்தையும், துறவையும் நினைவுறுத்தும். ஏதாவது பரோபகாரமான காரியத்திலோ, தன் சுகத்தைத் தியாகம் புரிவதிலோ ஈடுபடாவிடில் மன அமைதி ஏற்படாது. மனச்சாட்சி அதிகம் வளர்ந்திருப்பதால் நேர்மையான வாழ்க்கை உண்டு. இவர்கள் பெருத்த உழைப்பாளிகள். பல அரிய காரியங்களைச் சாதிக்க வல்லவர்கள். சமூக நன்மைக்காகப் பாடுபடுவார்கள்.

17ம் எண் ஆதிக்கர்கள் பிறவியில் சீமானாக இராவிடினும் எப்படியாவது அந்நிலையை அடைய முயற்சி செய்வார்கள். சரீர சுகங்களை இவர்களது மனம் இடைவிடாமல் நாடும். சதா எப்போதும் பெரும்தொகையான பணம் சம்பாதிப்பதிலேயே இவர்கள் மனம் ஈடுபடும். சுகத்தில் மனம் ஈடுபட்டிருப்பதால் நியாயமான வகையில் பணம் சம்பாதிக்கமுடியாவிடினும், துணிந்து மோசடியான வகைகளில் பணத்தைச் சேர்த்துக் குவிப்பர். பொதுமக்கள் பணத்தைத் தன்னுடையதாக்கிக்கொள்வர். தம்மைப் பிரபுக்களாகக் காட்டிக்கொள்ளச் செலவுசெய்வார்கள். எல்லாம் தெரிந்தது போலப் பேசுவார்கள். கோபம் இவர்களுக்கு மிக விரைவாக வரும். அடக்கிப் பழகுவது நன்று. அடிபிடி சண்டையில் இறங்கத் தயங்கமாட்டார்கள். இதனால் பொலிஸ் விவகாரங்களில் ஈடுபடுவார்கள்.

26ம் எண்ணைத் தமது அமைப்பில் ஆதிக்கமாகக் கொண்டவர்கள், சிறுவயதிலேயே இவர்கள் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள். தாய் தந்தையரைப் பிரிய நேரிடலாம். ஏதாவது குறைபாடு ஏற்படலாம். அதாவது, கால் அல்லது கை முடமாக இருத்தல் அல்லது அங்கக் குறைபாடு, மூளை சரியாக வேலைசெய்யாது இருத்தல், வயது ஏழு அல்லது எட்டுவரை பேசமுடியாது இருந்து பின்பு பேசப்பழகுதல் போன்ற குறைபாடுகள் காணப்படும். முன்னேறும் ஆற்றல் படைத்த இவர்கள் கடினமான வேலைகள் செய்து முன்னேறுவார்கள். கடும் முயற்சியில் ஈடுபடுவார்கள்.



அதிர்ஷ்ட காலம் :

6, 15, 24, 1, 10, 19, 28 ஆகிய எண்கள் வரும் திகதிகள், விதி எண், விளைவெண்ணாக வரும்போது அன்றையதினம் அதிர்ஷ்டமாக அமையும். 4, 13, 22, 31 வரும் நாட்களும் சாதகமானவையே. 9, 18, 27 வரும் நாட்களும் விரும்பத்தக்கவைகளே. இவைகள் நன்மை தருபவைகளே.

துரதிர்ஷ்ட தினங்கள் :

8, 17, 26 திகதிகள் வரும் தினங்கள் வீண் விவகாரங்களில் ஈடுபடுத்தித் தீமைகளை விளைவிக்கும். திடீர் விபத்துக்கள் ஏற்பட ஏதுவாகும். இவ்வாறான தினங்களில் பிரயாணங்களை மேற்கொள்வது தீமையே விளையும். இத்தினங்களில் நல்ல காரியங்களைச் செய்யாது தவிர்ப்பது நன்மைதரும்.

நிறம் :

மஞ்சள் நிறமே இவர்களுக்கு நன்மையாக அமையும். ஆழ்ந்த பச்சையும், நீலமும் நன்மை தருவனவாக அமையும். கறுப்பு, மண்ணிறம் மற்ற மங்கலான ஆழ்ந்த நிறங்கள், சிவப்பு இவைகள் சிறிதும் பொருந்தாது

இரத்தினம் :

குற்றமற்ற நீலக்கல் அணிந்தால் நல்ல அதிர்ஷ்டமுண்டாகும். ஆறு நூல்கள் உடைய நீலக்கற்கள் இவர்கட்கு மிகவும் பொருத்தமானவை.

எட்டாம் எண் ஆதிக்கரின் தொழில்கள் :

இவர்கள் அனேகமாக நீருடனும், இயந்திரத்துடனும் தொடர்புடைய தொழில்கள் புரிவர். வாகனங்கள் தொடர்பான தொழில், நீர் இறைத்துச் செய்யும் வயல் போன்ற தொழில், போட்மூலம் கடலில் மீன்களைப் பிடித்து வியாபாரம் செய்தல், என்ஜினியரிங், மெக்கானிஸம், ரேடியோ, மில் போன்றவை, பஸ்கள் வாங்கி ஓடுதல், அச்சுச்சாலை, தோட்டங்கள், கலை, இலக்கியம், சங்கீதங்களும் இவர்களுக்கு உகந்தவை. இவர்களுடன் இணையும் எண்கள் பொறுத்தும் இவைகள் அமையும். கொலை, கொள்ளைகளிலும் சில ஆதிக்கர்கள் ஈடுபடுகிறார்கள்.

நல்லவர்களும், அரசர்களும், ஆண்டிகளும், கொடியவர்களும், கொலைகாரர்களும், கொடைவள்ளல்களும், முற்றும் துறந்த முனிவர்களும், அரசியல்வாதிகளும் போன்ற எல்லா வர்க்கங்களையும் இவ்வெண் ஆதிக்கரில் காணலாம்.

இனி இவ்வெண் ஆதிக்கர்கள், நண்பர்களையும், கணவன், மனைவியையும் எவ்வாறு தெரிவுசெய்வது என்பது பற்றி நோக்குவோம்.

அனேகமாக எட்டு ஆதிக்கர்கள் அறு, ஒன்று, நாலு, எட்டு எண்காரரை நண்பர்களாகவோ, மனைவி, கணவனாகவோ அடையலாம். இவ்வெண்ணுடன் இணையும் ஏனைய எண்கள் பொறுத்துத் தெரிவு இடம்பெறும்.

ஆண் தோற்றம் : 26 - 5 - 1950
பெண் தோற்றம் : 24 - 8 - 1957

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | 6 | சுக்கிரன் |
| மாத எண் | 4 | இராகு | 5 | புதன் |
| வருட எண் | 5 | புதன் | 1 | சூரியன் |
| விதி எண் | 1 | சூரியன் | 9 | செவ்வாய் |
| விளைவு | 9 | செவ்வாய் | 3 | குரு |

இங்கு நேரடிப் பொருத்தம் காணப்படுவதால் மனமொத்த தம்பதிகளாக வாழ்வார்கள். திகதி எண் ஆணுக்கு 8ஆகவும் பெண்ணுக்கு 6ஆகவும் இருப்பதால் இங்கு பொருத்தம் உள்ளது. ஆணின் விளைவு 9ஆகவும் உள்ளதால் நேரடிப் பொருத்தமுண்டு.

இனி இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்

ஆண் தோற்றம் : 7 - 5 - 1954
பெண் தோற்றம் : 8 - 5 - 1958



| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | 8 | சனி |
| மாத எண் | 3 | குரு | 4 | இராகு |
| வருட எண் | 8 | சனி | 4 | இராகு |
| விதி எண் | 4 | இராகு | 9 | செவ்வாய் |
| விளைவு | 4 | இராகு | 7 | கேது |

| | | |
|---|---|---|
| திகதி எண் | 7 | 8 |
| மாத எண் | 3 | 4 |
| வருட எண் | 8 | 4 |
| விதி எண் | 4 | 9 |
| விளைவு | 4 | 7 |

இங்கு பொருத்தம் தரை (X) வடிவமாக உள்ள காரணத்தால், ஆணுடைய தாய்தந்தையருக்கிடையிலும், பெண்ணுடைய தாய்தந்தையருக்கிடையிலும் பிரச்சினைகள் மூண்டு குடும்ப இன்பத்துக்கு இடையூறாக அமையலாம். எனவே இவ்வாறான பொருத்தங்கள் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் நல்ல பொருத்தம் இருந்தபோதும் தாய்தந்தையரால் பிரச்சினைகள் உருவாகலாம். ஏழாம் எண் ஆதிக்கர் இன்னுமொரு ஏழு எண் ஆதிக்கம் உள்ளவரையே துணைவராகக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் குடும்பப்பிரிவு ஏற்படும். ஏழு விளைவு வருபவர்கள் ஒன்பது விளைவு வருபவர்களை முடித்தால் பிரிந்தே இருப்பார்கள். சிலவேளையில் உயிர் இழப்பும் நேரிடலாம். ஒன்பது விளைவு உள்ளவர் இறக்க, 7ஐ விளைவாகக்கொண்டவர் தாரம் இழந்து, பெண்ணாயின் விதவையாகவும், ஆணாக இருப்பின் தபுதாரனாகவும் இருக்கநேரிடும். எனவே துணைவன் அல்லது துணைவியைத் தெரியும்போதும் கவனமாக விளைவைக் கவனித்துத் தெரிவு செய்தல் நன்மை உண்டாகும்.

இனி ஒன்பதாம் எண்பற்றி நோக்குவோம்.

# எண்: 9 கிரகம்: செவ்வாய் தன்மை: சாதனை

"சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு"

எண்கள் மொத்தமாக ஒன்று தொடங்கி ஒன்பது வரைதான் உள்ளன. இத்துடன் பூச்சியமும் இணைந்தே முடிவிலா எண்களையோ, கணக்குகளையோ நிர்ணயிக்கின்றன. இவ்வாறு உருவாகிய எண்களில் எல்லா எண்களையும் அடக்கி ஆளும் வலிமை இந்த ஒன்பதாம் எண்ணுக்கே உரியது. 9, 18, 27 ஆகிய எண்களைத் திகதி எண்ணாகவோ, விதி அல்லது விளைவு எண்ணாகவோ வரப்பெறின் இவ்வெண்ணின் ஆதிக்கம் இவர்களிடம் காணப்படும். இவர்களுடன் இணையும் ஏனைய எண்கள் பொறுத்தும் இவர்களது வாழ்க்கை அமைப்பு மாறுபடும். இவ்வொன்பதாம் எண்ணை விதி அல்லது விளைவாக வரப்பெறுபவர்கள் தலைசிறந்த நிர்வாகத் திறமை மிக்கவர்கள். ஒன்றும் தெரியாதவர்கள்போல ஒரு இடத்தில் வீற்றிருப்பார்கள். ஆனால் ஒவ்வொருவர்பற்றியும் ஒரு சரியான கணிப்பீட்டைத் தம்முள் கொண்டிருப்பார்கள். எப்படியோ தமது சொல்லாலோ, செயலாலோ, நடத்தையாலோ அனைவரையும் கவர்ந்து வழிநடத்தும் ஆற்றல் மிக்கவர்கள். நல்ல உயரமும், கம்பீரமான தோற்றமும் உள்ளவர்கள், நிமிர்ந்த நடை, பயப்படாத சுபாவம், தனியாகவே எல்லாக் காரியங்களையும் செய்துமுடிப்பர். ஒருவரது உதவியும் இவர்களுக்குத் தேவைப்படமாட்டாது. சூத்திரமான மூளை உள்ளவர்கள். ராஜதந்திரமூளை இவர்களுக்குத்தான் உரித்தானது. விசித்திரமான செயல்களைச் செய்து மற்றவர்களைப் பிரமிக்கச்செய்வார்கள். இவர்கள் போக்கை மற்றவர்களால் புரிந்துகொள்வது கடினம். அஞ்சாநெஞ்சம் படைத்தவர்கள், வரும் துயர்கள் சிறிதுநேரம்தான் இவர்களை வருத்தும். பின்பு இவர்கள் இவற்றைத் துச்சமாக மதித்து, புது முயற்சிகளில் துரித முயற்சி எடுத்து வெற்றி



கண்டுள்ளார்கள். இவர்கள் அனேகமாகச் சவால்விட்டுத்தான் சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள். பிடிவாதகுணம் நிறைவாக இவர்களிடம் காணப்படும். நினைத்ததை நினைத்தபடி செய்துமுடிப்பர். அப்படிச் செய்துமுடிக்காவிடில் இவர்களுக்கு நித்திரை வரமாட்டாது. அசுரத்தனமாக முயற்சி செய்து முடிவு காண்பார்கள். வாழ்க்கை ஒரே போராட்டமாக அமையும். ஒன்பதுடன் நாலு வரப்பெறின் சண்டை பிடிப்பதில்தான் காலம் கழிப்பர். அடிபிடி சண்டையில் இவர்களுக்கு விருப்பமில்லை. உண்ணாவிரதம், வாய்ச்சண்டை போன்றவற்றில்தான் இவர்களுக்கு ஈடுபாடு இருக்கும். தேச சேவை செய்யவேணுமென்ற ஆர்வம் இவர்களிடம் இருக்கும். தேச நலனுக்காகப் போராடுவார்கள். தன்னிஷ்டப்படியே காரியங்களைச் செய்ய விருப்பமிருக்கும். யாரும் தன்னை அடக்கி ஆள்வதை விரும்பமாட்டார்கள். தமது கருத்தை யாரும் எதிர்த்தால் உடனே போர்மூளும். இவர்கள் இஷ்டப்படி செய்யமுடியாதபடி பிறர் தடுத்துவிட்டால் உடனே உதறிவிட்டு இக்காரியம் தூள்தூளாகச் சிதறட்டுமென விலகிவிடுவார்கள். இவர்கள் சண்டையில் லாபமா, சமாதானத்தில் லாபமா என்பதை ஆராய்ந்து உசிதமானதைச் செய்வார்கள். இவர்களை முகமூடி அணிந்த மனிதர் எனக் கூறலாம். தமது சுயதோற்றத்தை வெளியில் காட்டமாட்டார். எல்லோருக்கும் தமது தனிப்பட்ட திட்டங்களைச் சொல்லவோ, வெளிப்படுத்தவோ மாட்டார்கள். மிக அவதானமாகக் காரியத்தைச் சாதிப்பர். வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைக் கண்டுபிடிப்பர். ரசாயணம், வைத்தியம் முதலியவற்றில் மிகுந்த ஆர்வமும், தேர்ச்சியும் உண்டாகும். தெய்வீகமான ரகஸ்யங்களையும் அறிந்து அதனால் உலகினருக்கு வழிகாட்டுபவர்களும் இவர்களே. இவர்களிடம் சில அபூர்வமான சக்திகள் காணப்படும். இவர்களின் ஏனைய எண்கள் பொறுத்து குணங்கள் மாறுபடும்.

எவ்வளவு கஷ்டம் வரினும் தாங்கிக்கொள்ளும் சக்தி உண்டு. மனம் விரும்பும் வகையில் செலவு செய்வர். மற்றவர்க்குத் தைரியமூட்டும் வகையில் புத்திகூறுவர். பிள்ளையார், முருகன், காளி, அனுமார் போன்ற தெய்வங்களை வழிபடுவர்.

இவர்களில் நுண்ணிய அறிவு படைத்தவர்கள் உயர மாகக் காணப்படுவர். இவர்கள் திடசரீரிகளாக இருப்பர். இவர்கள் வாட்டசாட்டமாகக் காட்சி அளிப்பர். இவர்களைப் பார்த்தமட்டில் பராக்கிரமசாலிகளாகத் தோன்றுவர். மிக வேகமாக நடப்பர். இவ்வாதிக்கருடன் குரு ஆதிக்கம் வலுப் பெற்றிருப்பின், வாக்கு பலிதம் உண்டாகும். அனேகமாக இவர்கள் வாழ்க்கை சவால்விட்டு வாழும் வாழ்க்கையாக அமையும். கடல்கடந்த பிரயாணங்கள் ஏற்படும். ஒன்பது விளைவைக் கொண்டவர்கள்தான் அனேகமாக அதிகாரிக ளாகத் திகழ்வதைக் காணலாம். ஒரு ஸ்தாபனத்திலோ அல் லது வீட்டிலோ இவர்கள்தான் தலைமை வகிப்பதைக்காண லாம்.

இனி இவ்வாதிக்கத்தில் தோன்றிய ஒருசில பெரி யார்கள்பற்றி நோக்குவோம்.

உலக சரித்திரத்தையே மாற்றிய பொதுவுடைமைக் கொள்கையின் மூலகர்த்தா கார்ல்மார்க்ஸ்.

தோற்றம்: 5 – 5 – 1916

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| மாத எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு | 1 | சூரியன் | மேன்மை | |

இவ்வமைப்பை நோக்கும்போது, விதி எண் 9ஆக உள் ளது. இங்கு கார்ல்மார்க்ஸ் சரித்திரத்திலேயே ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார் என்பது விளங்குகிறது. விளைவு சூரியன். இது இவரை ஒரு மேன்மையான ஸ்தானத்தில் வைத்திருக் கும் என்பதும் தெரிகிறது. திகதி எண் 5ஆக உள்ளதால் ஜனவசியமும், சமூக ஆதரவும் ஏற்படும் என்பதையும் அறிய லாம். இவ்வமைப்பு உடையோர் பிரசித்தமடைந்து கீர்த்தி அடைவர்.

இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்.



கத்தோலிக்க திருச்சபைக்கு புத்துயிரூட்டிய வத்திக் கான் தலைவர் பாப்பரசர் 23ம் அருளப்பர்.

தோற்றம்: 25 - 11 - 1881

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 7 | கேது | சோதனை | வாழ்க்கை |
| மாத எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| வருட எண் | 7 | கேது | சோதனை | |
| விதி எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விளைவு | 5 | புதன் | தோழமை | |

இங்கும் விதிஎண் 9ஆக உள்ளது, ஆனால் பிறந்த திகதி எண் 7 கேது. இது ஆன்மீகத்துறையில் ஈடுபடுவதை யும், சமூகத்துக்காகப் போராடி வழிநடத்துவதையும் குறிக் கும். விளைவு 5தாக உள்ள காரணத்தால் ஜனவசியம் ஏற் படும். மக்கள் இவர்கள் வழியைப் பின்செல்வர். சாதனை களை நிலைநாட்டுவர். சூத்திரமான அறிவு காணப்படும். உலகப் பிரசித்தி, சமூகப் பிரசித்தி உண்டாகும்.

இனி 9பதை விளைவாகக்கொண்ட அமைப்பை நோக்குவோம்.

அரசியல் வாழ்விலும், ஆன்மீகத்துறையிலும் அய ராது பணிபுரிந்த மாமேதை சேர் பொன் அருணாசலம்.

தோற்றம்: 14 - 9 - 1853

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 5 | புதன் | தோழமை | வாழ்க்கை |
| மாத எண் | 5 | புதன் | தோழமை | |
| வருட எண் | 4 | இராகு | பகை | |
| விதி எண் | 4 | இராகு | பகை | |
| விளைவு | 9 | செவ்வாய் | சாதனை | |

இவ்வமைப்பை நோக்கும்போது 9 விளைவு வந்துள்ளதைக் காணலாம். தலைவனாகத் திகழும் தன்மை காணப்படுகிறது. ஜனவசியத்தைத் திகதி எண்ணான 5ந்து அள்ளி வழங்கும். வாக்குவன்மையை விதி எண்ணான 4 கொடுக்கும். மொத்தத்தில் வாழ்க்கை பெரும் சாதனையாக அமையும். நினைத்த விடயத்தை எப்பாடுபட்டாவது சாதித்து முடிப்பர். புரட்சிகரமானதுமான செயல்களைச் செய்து மற்றவர்களை வியப்பில் மூழ்கடிப்பர். சூத்திரமான மூளை அமையும். வாழ்க்கையில் பொறுப்புமிக்க செயல்களைச் செய்யவேண்டிய நிலை ஏற்படும். சவால்களை ஏற்று வெற்றிபெறும் ஆற்றல் கொண்டவர்கள் எந்தவித சவால்களைக்கண்டும் அஞ்சி புறமுதுகுகாட்டி ஓடமாட்டார்கள். அஞ்சா நெஞ்சமுத்தம் படைத்தவர்கள். எதிரியை எதிர்த்துநின்று போர்புரியும் ஆற்றல் படைத்தவர்கள். அநீதியைக்கண்டு அஞ்சி அடிபணிய மாட்டார்கள். நியாயவழியில் நின்று வெற்றிவாகை சூடுவார்கள். சிறிதும் அஞ்சாதவர்கள். உயிர் போயினும் மேற்கொண்ட செயலை விட மனம் வரமாட்டாது. எடுத்த காரியத்தை முடிக்காமல் நிம்மதியும் இவர்களுக்கு வரமாட்டாது. நித்திரை இன்றியும், உணவை ஒழுங்காகக் கவனிக்காமலும் தாம் மேற்கொண்ட காரியத்தைச் சரியாகவும், நிறைவாகவும் செய்து வெற்றிக்கொடியை நாட்டி மகிழ்ச்சி அடைவர். பாதுகாப்புப் படையினரிலும் இவர்களே தலைவர்களாகத் துலங்குவர். அதாவது, பொலிஸ் அதிகாரிகள் போன்ற வேலைகளையும் புரிவர்.

இனி இவ்வெண்ணைப் பெயரில் பெறுவோர் பெறும் அம்சங்களை நோக்குவோம்.

## 9

இவ்வெண் செவ்வாய்க் கிரகத்தைக் குறிக்கிறது. இவ்வெண்ணைப் பெயரில் பெறின் அறிவும், ஆற்றலும் உண்டாகும். சுற்றுடலில் போராட்டமும் முடிவில் வெற்றியும் அடைவர். சுகமான நீண்ட வாழ்க்கையும் அடைவர்.



## 18

இவ்வெண் சூரியனையும், சனியையும் தன்னுள் கொண்ட ஒரு அமைப்பாகும். இவ்வெண் தான் சொல்வது தான் சரி என வாதாடவைக்கும். வீண் சண்டைகளிலும், வீண் சிக்கல்களிலும் ஈடுபடச்செய்து இன்னல்களை ஏற்படுத்தும். சமூக விரோதமான காரியங்களில் சுயநலத்தால் ஈடுபட்டு வீண் பெயரையும் தேடுவார்கள். ஆசைகள் வளர்ந்து தெய்வீகத்தை அழிப்பதைக் காணலாம். இவ்வெண் பெருத்த போர்களைக்குறிக்கும் சுயநலம், வஞ்சகம், பழிவாங்கும் எண்ணம், மற்றவரை ஏமாற்றும் எண்ணம் என்பன தோன்றும்.

## 27

இவ்வெண் சந்திரனையும், கேதுவையும் தன்னில் கொண்ட அமைப்பாகும். இவ்வெண், ஆரம்பத்தில் கவலையை உண்டுபண்ணினும், அதிகார பதவி வகிப்பர். சமூகத்தைக் காக்கும் செயல்களில் ஈடுபடுவர். தொழிலாளரின் இன்னல்களை நீக்க, அவர்கள் கோரிக்கைகளை அடைந்து கொடுக்க முன்னின்று போராடி அடைந்துகொடுப்பர். எவரும் இவரை மதிப்பர். அதிகார உடையணியும் உத்தியோகங்களில் அதிகமாக முன்னேறுவார்கள். வெற்றிகரமான எண் இதுவாகும். எல்லாம் வெற்றியாக அமையும்.

## 36

இவ்வெண் குருவையும், சுக்கிரனையும் கொண்ட அமைப்பாகும். 3, 6, 9 போன்ற எண்களை முறையே திகதி எண், விதி எண், விளைவு எண்ணாகக் கொண்டவர்கள், இவ்வெண்ணைத் தமது பெயர் எண்ணாக அமைக்கலாம். இவ்வெண் மிக அதிர்ஷ்டமானது. கல்வி, கலைத்துறையில் முன்னேறுவர். கடல்கடந்த பிரயாணம் ஏற்படும். ஊர்விட்டு ஊர் மாறும்போது பேரும், புகழும் அடைவர். செல்வ விருத்தியும் உண்டாகும். எதிர்பாராத அதிர்ஷ்டங்களும் தேடிவரும். அரியபெரிய சாதனைகளை நிலைநாட்டுவர்.

## 45

இவ்வெண் இராகுவையும், புதனையும் தன்னுள் கொண்ட அமைப்பாக உள்ளது. இவர்கள் மனதில் தோன்றுவதை உடனே வெளியிடுவர். படபட என பேசுவர். இதனால் சிலபல பகைகள் வந்துசேர்ந்தபோதும் இவர்கள் தமாசாகப் பேசிச் சமாளித்துவிடுவார்கள். எல்லோருடனும் சகஜமாகப் பேசுவார்கள். பின்வாங்கவோ, தயங்கவோமாட்டார்ரள். ஜனவசியம் உண்டாகும். எத்தொழிலைச் செய்யினும் வெற்றி ஏற்பட்டு நன்றாக வாழ்வார்கள். இவ்வெண் பெரிதும் விரும்பத்தக்கது.

## 54

இவ்வெண் புதனையும், இராகுவையும் தன்னுள் கொண்ட ஒரு அமைப்பாகும். ஆரம்பத்தில் ஜனவசியம் உண்டாகும். வெற்றிகளும் வந்துசேரும். பேரும், புகழும், பதவிகளும் வந்தமையும். முடிவில் பிடிவாதத்தாலும், மற்றவரைத் தூக்கியெறிந்து பேசும் நிலையால், வீண் பகைகளைத் தேடி எல்லாம் இழக்கும் நிலை ஏற்படும்.

## 63

இவ்வெண் சுக்கிரனையும், குருவையும் தன்னுள் கொண்ட அமைப்பாக உள்ளது. இவ்வெண்ணைப் பெயரில் கொண்டவர்கள், அதிர்ஷ்டமான வாழ்க்கை வாழ்வர். கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். ஜனவசியம் உண்டாகும். கவர்ச்சியான தோற்றம் உருவாகும்.

## 72

இவ்வெண் கேதுவையும், சந்திரனையும் தன்னில் கொண்ட அமைப்பாகும். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று பொருத்தமான எண்களாக இருப்பதால் சிறந்த பலன்களை ஏற்படுத்தும். வாழ்க்கையில் பலத்த வெற்றிகள் உண்டாகும். 9 எண்களிலேயே மிக அதிர்ஷ்டமான எண் இது வாகும்.



இவர்கள் தேடும் சொத்துக்கள் பல தலைமுறைக்குப் போதுமானதாகக் காணப்படும். பேரும், புகழும், கௌரவமும் உண்டாகும். வாகனங்கள் வந்துசேரும். இவர்கள் எடுக்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். ஐஸ்வரியமான வாழ்க்கையை நடத்துவர். பேரும், புகழும், குறையாது வாழ்வர்.

## 81

இவ்வெண் சனியையும், சூரியனையும் தன்னில் கொண்ட அமைப்பாகும். இவ்வெண் வாழ்வில் பெரிய உயர் பதவிக்குத் தள்ளிச்சென்று பின்பு அப்பதவியைத் துறந்து பலத்த அவமானம் பெறச்செய்யும். ஆறும் எண் ஆதிக்கருக்கு நன்மை உண்டாகும். வேறு எண்காரர் வைப்பது அவ்வளவு நல்லதல்ல.

## 90

இவ்வெண் செவ்வாயையும், பூச்சியத்தையும் கொண்ட அமைப்பாகக் காணப்படுகிறது. இவ்வெண் பிடிவாதமாக வாழ்க்கையில் முன்னேறி வெற்றியீட்டிப் பிரபல்யம் அடைவதைக் குறித்தபோதும் விரும்பத்தக்கதல்ல. பிற்பகுதியுல் ஆண்டியாக்கி அலையவைக்கலாம்.

## 99

இவ்வெண் இரண்டு ஒனபதைக்கொண்ட செவ்வாய் வலுப்பெற்ற எண்ணாகக் காணப்படுகிறது. பிடிவாத குணம் மிதமிஞ்சி காணப்படும். பிறர் சொல்லும் கருத்துகளுக்கு எதிர்க் கருத்துகளையே வெளியிட்டுப் பகைகளைத் தேடி இன்னல் அடைவர். சூச்சுமமான மூளை உருவாகும். கல்வி, பொருள், சுகம் உண்டாகும். எப்போதும் எதிரிகள் இவர்களுக்கு இருந்தவண்ணம் இருக்கும்.

## 108

இவ்வெண் சூரியனையும், பூச்சியத்தையும், சனியையும் தன்னில் கொண்ட அமைப்பாக உள்ளது, ஆரம்பத்தில்

மேன்மையும் வெற்றியும் இருந்தபோதும், பெரிய சாதனைகளை நிலைநாட்டியபோதும் முடிவுகள் நல்லவையாக முடியுமெனக் கூறமுடியாது. மிக அவதானமாகக் காலத்தைக் கழிக்கநேரும்.

இரண்டாம் எண்ணைத் திகதி எண்ணாகவோ அன்றில் விதி அல்லது விளைவெண்ணாகவோ கொண்டவர்கள், ஒன்பதைப் பெயர் எண்ணாக வைத்தல் கூடாது.

இனி ஒன்பதாம் எண் ஆதிக்கரின் உடல் - நோய் - உணவு - மூலிகை என்பனபற்றி நோக்குவோம்.

மிகக் கம்பீரமான தோற்றமுடைய இவர்கள் பெரும்பாலும் அகன்ற நெற்றியும், விசாலமான கண்களும் உடைய இவர்கள் பார்வை குழந்தைகளின் பார்வையைப் போலக் களங்கமற்று இருக்கும். இவ்வாதிக்கர்கள் வயதுக்கு மிஞ்சிய வளர்ச்சியாகக் காணப்படுவர். சதைப்பற்று உள்ளவர்களாகக் காணப்படுவர். பார்வைக்கு பராக்கிரமசாலிகளாகத் தோன்றுவர். 8, 1, 9 ஆகிய எண்களை முறையே திகதி எண், விதி எண் ஆகக்கொண்டு ஒன்பதை விளைவாகக் கொண்டிருப்பின் அஞ்சாநெஞ்சம் படைந்தவர்களாகவும், பயில்வான்களாகவும் தோன்றுவர். 3, 6, 9 எண்களைத் திகதி எண்ணாகவும், விதி எண்ணாகவும், ஒன்பதை விளைவு எண்ணாகவும் கொண்டவர்களும் இவ்வாறே கட்டுமஸ்தான தோற்றத்துடன் காணப்படுவர். இவர்கள் எக்கூட்டத்தில் தோன்றினாலும் பார்ப்பவர்களுக்கு இவர்கள்மீதுதான் கண் போகும். எதுக்கும் அஞ்சாது முன்னின்று செயற்படுவர். மற்றவரால் முடியாத வேலையை இவர்கள் மிகச் சுலபமாகச் செய்துகாட்டுவார்கள். விளையாட்டுத்துறைகளிலும் முதலிடம் வகிப்பவர்கள் இவர்கள்தான். வெளிநாடுகளுக்கு எந்தவித சொந்தச் செலவு இல்லாமல் சென்று, பேரும், புகழும், பொருளும் தேடுவார்கள்.

நோய் - உணவு :

இவர்கள் தேகம் வளமையிலேயே சரியான உஷ்ணமான தேகம். இவர்கள் தமக்கு ஒத்துவராத உணவுகளை



உண்டால் உடனே பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே ஒத்துவராத உணவுகளை உண்ணாதுவிடல் நல்லது. மாமிச உணவுகளால் இவர்களுக்குக் குடல் சம்பந்தமான நோய்கள் உண்டாகும். 3, 6, 9 ஆகிய எண்கள் கொண்ட அமைப்பாகின் அஸ்மா அல்லது அக்சிமா போன்ற நோய் ஏற்படும். தக்காளி கத்தரிக்காய், அன்னாசி போன்ற கிரந்தியான உணவுகளைத் தவிர்த்து விற்றமின் 'சி' உள்ள உணவுகளை நன்கு அருந்த வேண்டும். நெல்லிக்கனி, தோடம்பழங்கள் போன்றவை நன்மைதரும். இவர்களுக்கு இரத்தம் உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டதாகவே இருக்கும். இவர்கள் வாழ்க்கையில் ஆப்ரேசன்கள் இடம்பெறும். சுரம் இவர்களுக்கு வருவதுண்டு. விபத்துக்களும் இவர்களுக்கு வருவதுண்டு. வெட்டுக்காயங்கள், மூட்டுநோவுகள், உடல்வலி போன்றவை தோன்றும். இவர்கள் சரீரத்துக்கு மிக நன்மைபயப்பது வெங்காயமாகும். இதை நன்றாக உணவில் சேர்ப்பது நன்மைதரும். கூடுமானால் வெள்ளைப்பூடும் சேர்ப்பது நன்மையாகும். சூடான உணவுகளைத் தவிர்த்து குளிரூட்டும் உணவுகளையே உண்டுவருதல் நன்மைபயக்கும். இஞ்சி அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம். சேப்பங்கிழங்கு, கருணைக்கிழங்கு, வெண்டைக்காய் இவர்களுக்கு ஒத்த பண்டங்களாகும். இவர்கள் தவறாது எண்ணெய் ஸ்நானம் செய்துவரவேண்டும்.

இனி ஒன்பதாம் எண் ஆதிக்கரின் அதிர்ஷ்டகாலம், முக்கிய நாட்கள், துரதிர்ஷ்ட தினங்கள், ஆடைகள், நிறம், உலோகம், இரத்தினம் போன்றவற்றை நோக்குவோம். 9, 18, 27 ஆகிய எண்களைத் தமது திகதி எண்ணாகவோ, விதி அல்லது விளைவு எண்ணாகவோ கொண்டால் இதன் பலன்கள் ஏற்படும்.

9ம் எண்ணைத் தமது ஆதிக்கத்தில் கொண்டவர்களுக்குச் செயற்கரிய காரியங்களைச் செய்வார்கள். நுற்பமான மூளை உடையவர்கள். மேலான இலட்சியங்களுடன் வாழ்ந்தால் வாழ்க்கை வளம்பெறும். எல்லா எதிர்ப்புக்களையும் சாமர்த்தியத்தால் வென்று வெற்றியுடன் வாழ்வர்.

18ம் எண்ணைக்கொண்டவர்கள் சுயலத்தை விட்டால்தான் இவர்களுக்கு நன்மையுண்டாகும். அவசரம் கூடாது. எல்லோருடனும் மனக்கசப்பை ஏற்படுத்தநேரும். எனவே பொறுமையாகவும், பிடிவாதத்தைக் குறைத்தும் நடக்கப் பழகவேண்டும். காதலில் அவசரப் போக்குத் தோல்வியில் முடியும். உணர்ச்சிகள் மனதைத் தீவிரமாகத் தூண்டிக்கொண்டே இருக்கும்.

27ம் எண்ணைக்கொண்டவர்கள் நற்காரியங்களிலேயே ஈடுபட்டு நல்ல பயனை அடைந்துவருவர். யோசனைகளெல்லாம் வெற்றிபெறும். அறிவே வெற்றிதரும். இவர்கள் தீவிர ஆராய்ச்சியாளர்கள். சாந்தமான சுபாவம் உடையவர்கள். ஆழ்ந்த யோசனையும், தளராத உழைப்பும் உடையவர்கள். பரட்சிகரமான சாதனைகளை நிலைநாட்டுவார்கள்.

அதிர்ஷ்ட காலம் :

5, 14, 23, 9, 18, 6, 15, 24, 21, 30 திகதிகள் அதிர்ஷ்டம் தருவன. 1, 10 திகதிகளும் சாதகமாகவே அமையும். 27ம் திகதிகளும் சாதகமாகவே அமையும். 27ம் திகதிகளில் நல்ல பலன்கள் நடைபெறும். இவ்வெண்கள் விதி, வினைவாக வரினும் நன்மையாக அமையும்.

துரதிர்ஷ்ட தினங்கள் :

2, 11, 20, 29 திகதிகள் விதி எண், வினைவெண் இவ்வாறுவரினும் அன்று தீய நாளாக அமையும். கூடியவரை அத்தினங்களில் நல்ல காரியங்களைச் செய்வதைத் தவிர்க்கவும். 9ம் திகதி இருந்தபோதும் வினைவு 2 வரின் ஆரம்பம் நன்மையாகவும், முடிவு தோல்வியாகவும் முடியும்.

இவர்களது நிறம் சிவப்பு, கடுஞ்சிவப்பும், நீலமுங் கூடப் பொருந்தும். வெளிறின பச்சை மற்ற வெண்மை மிகுந்த நிறங்கள் நன்மை தரமாட்டா. ஆடைகளின் கரையிலாவது செந்நிறம் இருப்பது நலம்.



இரத்தினம்

ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தந்து சரீர குற்றங்களைப் பவளம் நீக்கும்.

தொழில்

அனேகமாக உடுப்புப் போடும் தொழில்தான் இவர்ளுக்குரியது. அதாவது வைத்தியர் (கோட் அணிவர்), வக்கீல் (கோட் அணிவர்). பொலிஸ் அதிகாரி, ஆமிக் கொமாண்டர், பைலற், ஏன் உடுப்பு அணிபவர் கண்காணியாகவும் வரலாம். இவர்கள் உயிரைக்கூடத் துச்சமாக மதிக்கும் தியாகிகள். திறமைசாலிகள். அரசியல் துறையிலே முன்னேறலாம். தலைவராக, நிர்வாகியாக, இயக்குனர்களாக, உயர் அதிகாரிகள்போன்ற தலைமை ஸ்தானங்கள் அனைத்திலும் சிறப்பாக விளங்குவர். முப்படைகளிலும் சேர்ந்து உயர்வடையலாம். தலைசிறந்த விளையாட்டு வீரர்களாகவும் துலங்குவர். சாதனைகளை நிலைநாட்டும் பராக்கிரமசாலிகள் இவர்களே. எந்திரத்தின் ஈடுபாடுகளும் இவர்களுக்குண்டு. எஞ்ஜினியரிங் சம்பந்தமான தொழில்கள், இரும்பு சாமான்கள் உற்பத்திசெய்தல், இயந்திர வியாபாரம் முதலியவை இவர்கட்கு இயற்கையாகப் பொருந்தக்கூடிய தொழில்கள்.

இனி விவாகப் பொருத்தம், நண்பர்கள் தெரிவு என்பனபற்றி நோக்குவோம்.

இவர்கள் 9ம் எண் ஆதிக்கரையே மணக்கலாம். 5ம், 6ம், 3ம் எண் ஆதிக்கரும் நல்ல மனமொத்த காதலர்களாக அமைவர். 1, 4, 8 ஆதிக்கர்கள் விரும்பத்தக்கதல்ல.

எல்லா எண்களையும் ஆளும் திறமை ஒன்பதாம் எண்ணுக்கே உரியது. அதாவது ஒன்பதையும் ஒன்பதையும் கூட்டினால் ஒன்பதே திரும்ப வரும். ஒன்பதையும் ஒன்பதையும் பெருக்கினால் ஒன்பதே வரும். எந்த எண்ணையும் ஒன்பதால் பெருக்கினால் ஒன்பதே வரும். எந்த எண்ணையும் ஒன்பதுடன் கூட்டினால் அதே எண் திரும்பிவரும். எனவே பொருத்தங்களை நோக்குவோம்.

ஒன்பதாம் எண்ணை விளைவாகக் கொண்டவர்கள் இரண்டு அல்லது ஏழு விளைவாக வருபவர்களை மணந்தால் வாழ்க்கையில் வீண் பிரச்சினைகளுக்கு உள்ளாகி அல்லலுறுவார்கள். ஒன்பது விளைவாகப் பெறுபவர் ஐந்தை விளைவாகப் பெறுபவரைத் துணைவியாகவோ, துணைவனாகவோ கொள்ளின் மனமொத்த தம்பதிகளாகக் குடும்ப வாழ்க்கை நடத்துவார்கள்.

இனி பொருத்தங்களை உதாரணமூலம் நோக்குவோம்.

ஆண் தோற்றம்: *24-5-1959*
பெண் தோற்றம் : *9-5-1963*

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | 9 | செவ்வாய் |
| மாத எண் | 2 | சந்திரன் | 5 | புதன் |
| வருட எண் | 3 | குரு | 1 | சூரியன் |
| விதி எண் | 8 | சனி | 6 | சுக்கிரன் |
| விளைவு | 1 | சூரியன் | 3 | குரு |

இங்கு இவ்வமைப்புகளை நோக்கும்போது ஆறு, ஒன்பதிற்கு பொருந்தும். விதியை நோக்கும்போது, ஆணுக்கு 8ம் பெண்ணுக்கு 6ம் காணப்படுகிறது. சனியாதிக்கர் சுக்கிர ஆதிக்கரிடம் மிகவும் அன்பாகவும், அடங்கியும் நடப்பர். பொருளாதாரம் குடும்ப வாழ்க்கையில் போதிய அளவு காணப்படும். வாகனங்கள் பொருந்திவரும். இவ்வாறு பொருத்தங்கள் அமையும். இணைபிரியாத மனமொத்த தம்பதிகளாக அன்பாக வாழ்க்கை நடத்துவர். இவ்வாறான அமைப்பு இருப்பின் வயோதிபத்திலும் இணைபிரியாது அன்பாக வாழ்வர். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுப்பர். இருவரும் ஒருவரையொருவர் நேசிப்பதைவிட வேறு யாருக்கும் அதிகமான அன்பைச் செலுத்தமாட்டார்கள். இருவரும் ஒருவருக்கு ஒருவர் திருப்தி கொடுக்கக்கூடிய வகையில் வாழ்க்கை நடத்துவர். ஆணுக்கு திகதி எண் 6. பெண்ணுக்கு விதி எண் 6. இங்கும் இருவரும் சுக்கிர ஆதிக்கர்கள். மனமொத்த இன்ப வாழ்க்கை வாழ்வர். எனவே பொருத்தம் பார்க்கும்போது இவ்வாறு பார்த்துத் தெரிவது நன்மைதரும்.



இனி இன்னுமொரு அமைப்பை நோக்குவோம்.

ஆண் தோற்றம் : *9 - 6 - 1948*
பெண் தோற்றம் : *7 - 6 - 1954*

| | ஆண் | | பெண் | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 9 | செவ்வாய் | 7 | கேது |
| மாத எண் | 6 | சுக்கிரன் | 4 | இராகு |
| வருட எண் | 4 | இராகு | 8 | சனி |
| விதி எண் | 1 | சூரியன் | 5 | புதன் |
| விளைவு | 2 | சந்திரன் | 6 | சுக்கிரன் |

| | |
|---|---|
| 9 | 7 |
| 6 | 4 |
| 4 | 8 |
| 1 | 5 |
| 2 | 6 |

இங்கு ஆணின் விளைவு இரண்டு, பெண்ணின் திகதி எண் ஏழு. எனவே இங்கு பொருத்தம் உண்டு. அடுத்து ஆணின் திகதி எண் ஒன்பதாகவும், பெண்ணின் விளைவு ஆறாக அமைந்த காரணத்தால் இங்கு பொருத்தம் இருந்தபோதும் (X) தரைவடிவமான பொருத்தமாக உள்ள காரணத்தால் ஆணுடைய தாய்தந்தையருக்கும், பெண்ணுடைய தாய்தந்தையருக்கும் இடையில் பிரச்சினைவரும். தம்பதிகளுக்கிடையில் அன்பும் பாசமும் காணப்படும். ஆனால் தாய் தந்தையரது பிரசிசனை ஏற்படும். எனவே, மேற்காட்டப்பட்ட அம்சங்களைக் கவனத்தில்கொண்டு துணைவனையோ, துணைவியையோ, நண்பர்களையோ தெரிவுசெய்யலாம்.

இனி நாம் அறிந்துகொள்ளவேண்டிய பல விடயங்கள் உள. அவற்றை நோக்குவோம்.

நாம் எவ்வாறு, எமது பிறந்த திகதி, மாதம், வருடம் இவற்றைக்கொண்டு, பெற்ற அமைப்பைக்கொண்டு

எவ்வாறு எந்த எண்ணுக்கேற்ப பெயரை அமைப்பது ? எந்த வயதுகள் அதிர்ஷ்டமானவை ? என்பதுபற்றி ஆராய வேண்டும். எனவே ஒரு அமைப்பை எடுத்து ஆராய்வோம்.

இங்கு நாம் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அமைப்பை நோக்குவோம்.

தோற்றம் : 8-11-1902

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 8 | சனி | வேதனை | வாழ்க்கை |
| மாத எண் | 1 | சூரியன் | மேன்மை | |
| வருட எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| விதி எண் | 4 | இராகு | பகை | |
| விளைவு | 6 | சுக்கிரன் | ரசனை | |

இங்கு வாழ்க்கை 5 அம்சங்களாக வகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இது எவ்வாறு கணிக்கப்படுகிறது என்பதை முன்பு குறிப்பிட்டுள்ளேன். இவ்வமைப்பில் மிக முக்கியமானது 6 சுக்கிரன், இரண்டாவது 4 இராகு, மூன்றுவது முக்கியம் 8 சனி. எட்டாம் எண் ஆதிக்கருடன் 6ம் எண்ணுகிய சுக்கிரன் இணைந்துவிட்டால் வாழ்க்கை முன்னேற்றமாகவும், அதிர்ஷ்டகரமாகவும் துலங்கும். இத்துடன் பெயரின் எண்களை அறிந்துகொள்வோம்.

பெயர் : G G. PONNAMPALAM, இப்பெயர் கூடுதலாக வழங்கப்பட்டபோதும் G-G எனவும் வழங்கப்பட்டது. எனவே பெயரினுல் ஏற்படும் தாக்கத்தை நோக்குவோம். G. G. = 3 + 3 = 6. பெயர் சுக்கிரனுல் ஆளப்படுகிறது.
3 3

முழுப்பெயரை நோக்கும்போது

G. G. PONNAMPALAM
3+3 8 7 5 5 1 4 8 1 3 1 4
6 + 47 = 53.
5 + 3 = 8 சனி.



53ம் எண்ணைப் பெயரில்கொண்ட இவர் 8ம், 6ம் எண் ஆதிக்கர். இவரது முன்னெழுத்துக்களின் கூட்டுத்தொகை 6. இவரது பெயர் 53ம் எண்ணினதும், 6ம் எண்ணினதும் பலன்களைத் தருவதாக உள்ளது. அதாவது, எப்பெயர் கூடுதலாக வழங்கப்படுகிறது. அதற்கே சக்தி அதிகம். G. G. என்பதே அதிகமாக வழங்கப்படும் பெயர். எனவே 6 அதிர்ஷ்ட எண். இவரது விளைவும் 15 = 6 ஆகவுள்ளதால் இவர் ஒரு அதிர்ஷ்டசாலி. அதுமட்டுமல்ல இவர் வாழ்ந்த ஊரின் பெயரையும் கவனிக்கவேணடும். இவரது ஊர் யாழ்ப்பாணம். ஆகவே J A F F N A.
1 1 8 8 5 1 = 24.
2 + 4 = 6 சுக்கிரன்.

இவரது விளைவு 6, பெயர் 6, ஊர் 6. இவை எல்லாமே அதிர்ஷ்டமாக அமைந்துள்ளதை அவதானிக்கலாம். இவற்றைமாத்திரம் அன்றி வீட்டிற்குப் பெயர் இருந்தால் அதையும் பார்க்கவேண்டும். வீட்டு இலக்கத்தையும் பார்க்கவேண்டும். அதிர்ஷ்டசாலிகளாகப் பிறந்தும் பெயர், ஊர், வீட்டு இலக்கம், வீட்டுப் பெயர், கூப்பிடும் பெயர் ஆகியவை பாதகமாக அமையுமாயின் இவர் சரியான பலனை அனுபவிக்கமாட்டார். 2ம் இலக்கக்காரருக்கு 9ம் இலக்க வீடோ, ஊரோ, பெயரோ சரிவரமாட்டா. அதே போல 9ம் எண்ணுதிக்கர்களுக்கு 2ம் இலக்க வீடோ, ஊரோ, பெயரோ சாத்தியமற்றது. ஆபத்துக்களே நிகழும், ஏழாம் இலக்க வீடுகள், ஆத்மீகதுறையில் ஈடுபாடு உள்ளவர்களை உருவாக்கும். 6ம் இலக்க வீடு அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும். 9ம் இலக்க வீடு பிரச்சனைகள் மத்தியில் சாதனைகளை நிலைநாட்டும். 8ம் இலக்க வீடு, நோய்களை அடிக்கடி தோற்றுவிக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவு நடக்கும். 5ம் இலக்க வீட்டுக்கு ஒரே விருந்தினர்கள் வருவர். கலகலப்பாக வீடு இருக்கும். 31ம் 13ம் இலக்க வீடுகளில் சண்டைகள், ஆபத்துக்கள் நிகழும். 2ம் இலக்க வீடுகள் நிம்மதி அற்று அலைக்களிப்பதாக அமையும். 1ம் இலக்க வீடுகள் மேன்மையாகத் துலங்கும்.

மேற்காட்டிய அமைப்பை உடையவருக்கு 8, 4, 6, இம் மூன்று கிரகங்களின் ஆதிக்கங்களும் உண்டு. இவை மூன்றுக்கும் அமைவாக இவரது வாழ்க்கை அமையும். இவ்வெண்கள் வரும் வயதுகளில் நன்மைகள் நடைபெறும். இவ்வெண்களுக்கு எதிரான எண்கள் வரும் தினங்களில் தீமைகள் ஏற்படும். அதேபோல இவ்வமைப்பு வரும் திகதிகள் மிகமிக நல்லவை. இவைக்குப் பொருத்தமான நாட்களும் நன்மை பயக்கும். உதாரணமாக: 24 - 5 - 1983ம் நாள் அதிர்ஷ்டமானது.

| | எண் | கிரக நிலை | தன்மை | |
|---|---|---|---|---|
| திகதி எண் | 6 | சுக்கிரன் | ரசனை | வாழ்க்கை |
| மாத எண் | 2 | சந்திரன் | மென்மை | |
| வருட எண் | 9 | செவ்வாய் | சாதனை | |
| விதி எண் | 5 | புதன் | தோழமை | |
| விளைவு | 4 | இராகு | பகை | |

இவ்வமைப்பு வரும் தினங்கள் மிக அதிர்ஷ்டமானவை.

| அவரது அமைப்பு : | | இன்றைய அமைப்பு : | |
|---|---|---|---|
| 8 | சனி | 6 | சுக்கிரன் |
| 1 | சூரியன் | 2 | சந்திரன் |
| 2 | சந்திரன் | 9 | செவ்வாய் |
| 4 | இராகு | 5 | புதன் |
| 6 | சுக்கிரன் | 4 | இராகு |

இவ்வாறு ஒன்றுக்கொன்று பொருந்திய தினமாக அமையின், அது அதிர்ஷ்டகரமான நாளாக அமையும். பெயர் வைக்கும்போது திகதி எண், விதி எண், விளைவு இவற்றிற்குப் பொருந்தும் வகையில் அமையவேண்டும். நாடும், வீட்டு இலக்கங்களும் இவ்வாறே.

வெளிநாடு செல்பவர்களும், தொழிலை வேறு நாடுகளில் சென்று ஆரம்பிப்பவர்களும், திகதி எண், விதி எண், விளைவு ஆகியவற்றிற்குப் பொருத்தமான இலக்கமுடைய ஊர்களையே தெரிவு செய்யவேண்டும்.



உதாரணமாக:

JAFFNA

1 1 8 8 5 1 = 24 = 6 சுக்கிரன்.

யாழ்ப்பாணத்தை நோக்கின், கல்வியும், செல்வமும், பொருளாதார வளமும் மிக்க அதிர்ஷ்ட நாடு எனலாம். இங்கு 6, 8ம் எண் ஆதிக்கர்களும், 5ம் எண் ஆதிக்கர்களும் விரைவாக முன்னேறுவார்கள்.

COLOMBO

3 7 3 8 4 2 7 = 33

அருளும், பொருளும் ஒருங்கிணைந்த தலைமை நாடாகத் திகழ்வதை நாம் அவதானிக்கலாம்.

TRINCOMALEE

4 2 1 5 3 7 4 1 3 5 5 = 40

இவ்வெண் வரவேற்கத்தக்கதல்ல. 42 மாற்றின் நன்மைகள் ஏராளம் ஏற்படும். எட்டாம் எண் ஆதிக்கர்களும், இரண்டாம் எண் ஆதிக்கர்களும் நன்மை அடைவர்.

KANDY

2 1 5 4 1 = 13

ஆடம்பரமான இலக்கம். ஆச்சரியம் ஊட்டும் இலக்கம். 4, 1, 8ம் ஆதிக்கர் இந்த ஊரில் மேன்மை அடைவர்.

BATTICALOA

2 1 4 4 1 3 1 3 7 1 = 27

சாதனைகள் நிலைநாட்டும் நாடு. 5, 6, 9, 3ம் எண்காரருக்குச் சிறந்தது. 2ம், 7ம் எண் ஆதிக்கருக்கு துர்அதிர்ஷ்டமான ஊராகும்.

SRI LANKA

3 2 1 3 1 5 4 1 = 18

போராட்டம் மிக்கதாக இப்பெயர் காணப்படுகிறது.

A N U R A D H A P U R A

1 5 6 2 1 4 5 1 8 6 2 1 = 42

மிக அதிர்ஷ்டமிக்க இலக்கம். 6ம், 9, 8ம் எண்காரருக்கு அதிர்ஷ்டம் விளைவிக்கக்கூடிய ஊராக உள்ளது.

இவ்வாறு வாழும் ஊர்களின் பெயரின் பலாபலன்களையும் அறிந்து செயற்படவேண்டும். வெளிநாடு செல்பவர்கள் போகும் இடத்தின் பெயர் எண், தனது திகதி எண், விதி எண், விளைவு ஆகியவற்றிற்குப் பொருத்தமுள்ளதா எனப் பார்த்துப் போகவேண்டும். இல்லாவிடில் வீண் சிரமங்களுக்கு ஆளாக நேரிடும்.

வீட்டு இலக்கங்கள் பொருந்தாவிடில், நல்ல பொருத்தமான இலக்கமுள்ள வீட்டைப் பார்த்து மாறவேண்டும். வாகனங்கள் வாங்கும்போது, திகதி எண், விதி எண், விளைவு ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையில் நாள் பார்த்து வாங்கவேண்டும்.

எண்களின் காந்தம் உள்ள எண்கள்.

| | | | |
|---|---|---|---|
| எண் | 1க்கு | 4 | காந்தம் |
| எண் | 2க்கு | 7 | ,, |
| எண் | 3க்கு | 3 | ,, |
| எண் | 4க்கு | 1 | ,, |
| எண் | 5க்கு | 9 | ,, |
| எண் | 6க்கு | 6 | ,, |
| எண் | 7க்கு | 2 | ,, |
| எண் | 8க்கு | 1 | ,, |
| எண் | 9க்கு | 5 | ,, |

எனவே, இவ்வெண்களைப் பொறுத்துச் சரியான பொருத்தங்களை அறியலாம்.

ஒருவரின் பெயர் INDIRA GANTHI ஆனல் அவரை INDIRA என அழைப்பின், எப்பெயர் கூடுதலாக



வழங்கப்படுகிறதோ அப்பெயர் எண்ணை கூடுதலான ஆதிக்கம் செலுத்தும், INDIRA என அழைப்பின்

I N D I R A

1 5 4 1 2 1 = 14 = 5 தின் தன்மைகளைக் குறித்து நிற்கும்.

5ல் பெயர் உள்ளவர்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகியபோதும் மது அல்லது மங்கைக்கு அடிமையாவார். 7 ஆத்மீகத்துறைக்குத்தான் உவப்பானது. இல்லறத்துக்கு ஒத்துவரமாட்டாது. 2 வீண் அலைச்சல் தரும். 4 வீண் பகைகளை உருவாக்கும். எனவே இவைகளில் பெயரை வைக்கும்போது அவதானம் தேவை.

விவாகம் நடைபெறும் தினம் தங்கள் தங்கள் அமைப்பைக் கொண்டதாக அமைவது நன்மை தருவதாக அமையும். அதாவது ஒருவரின் அமைப்பு

| | | திருமண தினம் |
|---|---|---|
| திகதி எண் | 6 | 6 |
| மாத எண் | 4 | 4 |
| வருட எண் | 5 | 5 |
| விதி எண் | 8 | 8 |
| விளைவு | 1 | 1 |

இவ்வாறு அமையின் நல்லது. இருப்பினும் பொருத்தமான எண்கள் அமையினும் வரவேற்கத்தக்கது.

இனி ஒவ்வொரு எண்ணுக்கும் உதவிபுரியும் எண்களைப் பார்ப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1க்கு | 4, 8, 1 | ஆகிய | எண் | ஆதிக்கர்கள் |
| 2க்கு | 7, 2, 3 | ,, | ,, | ,, |
| 3க்கு | 2, 9, 3 | ,, | ,, | ,, |
| 4க்கு | 1, 8, 4, 2 | ,, | ,, | ,, |
| 5க்கு | எல்லோரும் உதவுவார்கள் | | | |
| 6க்கு | 3, 6, 9 | ஆகிய | எண் | ஆதிக்கர்கள் |
| 7க்கு | 2. 7, 4 | ,, | ,, | ,, |
| 8க்கு | 1, 4, 8 | ,, | ,, | ,, |
| 9க்கு | 3, 5, 6, 9 | ,, | ,, | ,, |

பிரயாணம் பற்றி நோக்குவோம்.

எமது அமைப்புக்கு ஏற்பவே பிரயாணத்தை மேற் கொள்ளின் நன்மை உண்டாகும் அல்லது பொருந்தும் எண் கள் வரும் நாளில் பிரயாணத்தை மேற்கொள்ளின் நன்மை உண்டாகும். விளைவு பாதகமாக இருப்பின் முடிவு தீமை யாக முடியும். உதாரணமாக: 9பது விளைவு உள்ளவர் 2 விளைவான தினத்தில் தோல்வியையே அடைவர்.

உங்கள் பரீட்சை எண்களும், திகதி, விதி, விளைவு எண்களுக்கு ஏற்ப பொருத்தமான இலக்கமாயின் திறமை யாகப் பரீட்சைசெய்து வெற்றி பெறுவர்.

சுவீப் டிக்கட்டுகள் எடுக்கும்போது திகதி, விதி, விளைவு ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையில் வாங்கின், அதிர்ஷ்டம் கிட்டலாம். உதாரணமாக நோக்குவோம்.

6
5
4
9
3 அமைப்பை உடையவரது சுவீப் டிக்கட்டின் எண் அமைப்பு :

**3 V 4500**

இங்கு Vக்கு 6, எனவே கூட்டுமொத்தம்

$3 + 6 + 45 = 54$

$5 + 4 = 9$

இவ்வாறு பார்த்து எண்கள் வரும் அமைப்பில் சுவீப் டிக் கட்டைத் தெரியலாம்.

**24 W 3600**

$24 + 6 + 36 = 66$

$6 + 9 = 3$

இவ்வாறும் அமையலாம்.

345 சீட்டிலுப்பில் 3 வரும் திகதியில் எடுக்கவேண்டும்.

நாம் எமது நல்ல காரியங்களை எமது திகதி, விதி, விளைவு ஆகியவற்றிற்கு ஏற்ப நேரம்பார்த்துத் தொடங்க



வேண்டும். உதாரணமாக: மூன்றும் எண் ஆதிக்கர் எந்த நேரத்தில் தமது நல்ல காரியத்தைத் தொடங்கலாம் என நோக்குவோம்.

8 மணி 45 நிமிடம்.

8 மணித்தியாலங்களையும் நிமிடமாக்கின்

$8 \times 60 = 480$

$480 + 45 = 525$

$= 12 = 3.$

இந்த நேரம் உத்தமமானது. இதுபோன்ற ஏனைய எண் களுக்கும் கணிக்குக.

இனி பெயர்களின் முதல் எழுத்துக்கள் அதிர்ஷ்ட கரமாக அமைந்துள்ளதா? என ஆராய்வோம் :

S. P. VIOLET என்னும்போது V யிலேயே பெயர் ஆரம்பிக்கிறது. எனவே இவ்வாறு பெயர்கள் ஆரம்பிக்கும் எழுத்தால் உண்டாகும் பலன்களை நோக்குவோம்.

## A (A, I, J, Y, Q) 1

இவ்வெண் மேன்மையைக் குறித்து நிற்கிறது. மிக அற்புதமான சக்திகள் இவ்வெண்ணுக்கு உண்டாகும். 1ம் எண்ணைக் குறிக்கும் எழுத்துக்கள் பெயரின் முதல் எழுத்தாக வரின் நேசமுள்ளவராக இருப்பார். புதுப்புது சிந்தனைகள் மனதில் தோன்றும். நல்ல நிர்வாகசக்தி அமையும், சுறு சுறுப்பு உண்டாகும். புத்திக்கூர்மை உண்டாகும். செய்யும் தொழிலில் உயர்ச்சி கிட்டும்.

## I

இவ்வெண் விடாமுயற்சி, மனமொருமுகப்பட்ட தன்மை, எண்ணங்களை உணர்ச்சியுடன் வெளியிடும் திறமை, நிர்மாணிக்கும் சக்தி, எல்லோரையும் தன்வயம் இழுக்கும் வல்லமை முதலியவைகளைக் குறிக்கும். ஆழ்ந்த யோசனையும், துரிதமாக வேலைசெய்யும் சக்தியும் உண்டாகும். சில சம

யங்களில் நிம்மதி இராது. இவ்வெழுத்து ஒரு தடவைக்கு மேல் பெயரில் வரின் நரம்பு சம்பந்தமான நோய்கள் வரும்.

## J

இவ்வெழுத்து இரட்டை மனப்பான்மையைக் குறிக்கும். பெண் குணங்களும், ஆண் குண்ங்களும் கலந்துநிற்கும். தீவிரவாதியானாலும் அன்புமிக்க இதயம் உடையவராவர். நல்ல நிர்வாகசக்தி இருக்கும். மிகுந்த தன்னம்பிக்கையும் ஊக்கமும் ஆக்கவேலைகளில் உற்சாகமும் உடையவர். பிறர் கூறும் யோசனைகளை ஒருநாளும் ஏற்கமாட்டார். எல்லாம் தனக்கே தெரியும் என்பார். சூழநிலையாலும் மற்றவர்களாலும் தனது முன்னேற்றம் தடைப்படுவதாக நினைப்பார். புகழையும் பதவியையும் விரும்புவார். இருபாலாரிடத்தும் ஆழ்ந்த சினேகிதத்தை விரும்புவர். பிறர் தன்னைப் பின்பற்றுவதையே எப்பொழுதும் விரும்புவர். துணிச்சலான வழிகாட்டி. மேலான இலட்சியங்களுக்காக அநேக கஷ்டங்களுக்கு தானாகவே உட்படுவர்.

## Q

இதற்கு மேலே தூக்கிவிடும் சுபாவம் உண்டு. இதனோடு சேருகின்றவற்றைத் தெய்வீகமாக்கும். நல்ல பலனுடைய எழுத்துக்களுடன் சேராவிடில் சந்தேகத்தையும் குழப்பத்தையும் குறிக்கும்.

## Y

மேன்மையான சுபாவம், பிறரைச் சார்ந்து நிற்க விரும்புதல், பெண்களைப்போன்று மென்மையாக இருத்தல், கணவான் என்று கூறும்படி நடந்துகொள்ளல் இவைகளே இவ்வெண்ணின் அம்சங்கள்.

## B (B.K.R.) 2

ஆத்ம சக்தியின் இருப்பிடம். நன்மைகளின் உறைவிடம். வெளியிடுவதைக் காட்டிலும் அதிகமான எண்ணங்களும் உணர்ச்சிகளும் உள்ளே இருக்கும். அதனால் சில சமயங்களில் மனதில் உள்ளவற்றை அப்படியே சொல்லமுடியவில்லையே என்று துன்புறுவர். ஆத்மீக வாழ்க்கையில் மிகுந்த பற்று காணப்படும். சக்திகளையும் பொருட்களையும் வீணாக்காமல் உபயோகப்படுத்துவார்கள். மேன்மைக் குணங்கள் பொருந்தாதவிடத்து சண்டைக்காரராயும் மாறுவர்.

## K

தாய்மை உணர்ச்சியைத் தூண்டும். பல கலைகளையும் கற்பர். முன்னேற்றமடைய மேலும் மேலும் நிலையான காரியங்கள் செய்யப் பிரியப்படுவர். தன் இனத்தைக் காப்பதில் ஆர்வமுண்டு. மேன்மையானவரானால் உலகத்திற்கே சேவை செய்வார்.

## R

இவர்களுக்குத் தூண்டுதல் தேவையில்லை. முன்னுக்கு வரத் துடிப்பார்கள். தன்னை எல்லோரும் அறிய வேண்டுமென்று முயற்சிசெய்வர். என்ன செய்யவேண்டுமென்கிற நிச்சயம் இல்லாமலேயே சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருப்பார்கள். சுலபமாகப் பிறரைப் புரிந்துகொள்வர். தன்னிஷ்டப்படியேதான் எப்பொழுதும் நடக்க விரும்புவார்கள். விடாமுயற்சியும், தளராத ஊக்கமும் உடையவர்களாவர்.

## C (C.G.L.S.) 3

வன்மையும் ஆண்மையும் குறிக்கிறது. படைப்பிற்கும் சக்தியையும், ஆளக்கூடிய பலத்தையும் உண்டாக்கும். எத்தொழில் புரியினும் மேன்மையையும், அசாத்தியமான சாதனைகளையும், மேதாவித் தன்மையும் குறிக்கிறது. பிறர் சோம்பேறிகளாக இருப்பதை இவர்களால் பொறுக்கமுடியாது. முன்னேறுவதில் தீவிர ஆர்வம் இருக்கும். மேன்மையான இலட்சியங்களை அமைத்துக்கொண்டு வாழவேண்டியது அவசியம். அப்படிச் செய்யாவிடில் பிறர் வாயால் கொடுமைக்காரர் என்ற பெயரைப் பெற நேரும். கலைகளிலும், கவின்த

களிலும் மிகுந்த ஆர்வம் இருக்கும். எக்காரியம் செய்த போதும் முடிவை அறியத் துடிப்பார்கள். செயற்திறன்மிக்கவர்கள். சக்தியை வீண்விரயம் செய்வார்கள். பிறரை ஆள்வதில் சமர்த்தர்கள். சுகானுபவங்களில் நிதானம் தேவை.

## G

தானே எல்லா சோதனைகளுக்கும், தியாகங்களுக்கும் உட்படுவர். எதையும் தாங்கும் இதயமும், மிதமிஞ்சிய தன்னம்பிக்கையும் உண்டு. சக்தியும், அன்பு மிளிரும் பொறுமையும் வியக்கும்படி இருக்கும். திருமணப் பிரச்சினைகளை எதிர்நோக்குவர். நோய்வாய்பட்டின் சீக்கிரம் குணமாகிவிடும். முடிவை ஆரம்பத்தில் இருந்தே சரியாக நோக்குவர். மேன்மையான இலட்சியம் இல்லாவிடில் இது ஏமாற்றுக்காரர்களையும் சோம்பேறிகளையும் குறிக்கும்.

## L

பிறரை வேலைவாங்குவதில் நிபுணர்கள். இதனால் குறிக்கப்பெறுவோர் சதா ஏவிக்கொண்டே இருப்பார்கள். ஒன்றையும் மறக்கமாட்டார்கள். நினைத்ததை நடாத்தியே தீருவார்கள். வெளியே மாட்டிக்கொள்ளாமல் ஆணி வேரை இரகசியமாக அறுத்துவிடுவார்கள். காரியவாதிகள்.

## S

தீவிரமான அபிப்பிராயங்களை உண்டாக்கும். புகழ்வர் இல்லாவிடில் இவர்கள் இகழ்வர். மிக உற்சாகமூட்டிப் பேசுவர். இல்லாவிடில் மிக வருந்துவதுபோல அன்பாகவும் பரிதாபமாகவும் பேசுவர். அல்லது சண்டை மூட்டிவிடுவார். இருவகை குணங்களும் காணப்படும். இருதலைக்கொள்ளி எறும்பாகக் காணப்படுவர்.



## D (D.M.T.) 4

நேர்மையான நடத்தை, துணிகரமான செயல், நிதானமான அபிப்பிராயம், சலியாத உழைப்பு, பாதகமான சூழ்நிலைகளையும் லக்ஷ்யம் செய்யாமல் உழைத்து வெற்றிகாணல் என்பவற்றைக் குறிக்கும்.

## M

இது புத்திசாலித்தனத்தையும், உழைப்பையும், விடாமுயற்சியையும் குறிக்கும். தீர்மானமான அபிப்பிராயங்களும் பிடிவாதமும் உண்டு. அடிக்கடி வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டவண்ணமிருக்கும். இல்லாவிடில் தொடர்ச்சியாகக் கவலைகள் வந்துகொண்டிருக்கும். பொறுப்புகளை ஏற்க அஞ்சுவார்கள். தானே பிறர் உதவியின்றி எல்லாவற்றையும் செய்வார்கள். அந்தஸ்துக்கு மேலான பதவியும் உண்டாகும். நுட்பமான அறிவும் ரசிகத்தன்மையும் இருக்கும்.

## T

மாற்றமுடியாத தீர்மானமும், விடாப்பிடிவாதமும் இருக்கும். பிறர்க்குப் புத்திமதிகள் போதிப்பார்கள். தீவிரவாதிகளாகத் துலங்குவர்.

## E (E N.H.X.) 5

ஆராய்ந்து விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து முடிவிற்கு வருதலைக் குறிக்கும். சூழ்நிலைக்கு ஒத்துப்போகும் தன்மையுண்டாகும். பல அரிய யோசனைகளும் முடிவுகளும் திடீரென மனதில் தோன்றும். அதைப் பின்பற்றுவார்கள். வேதாந்தம், யோகம் இவைகளில் பற்று ஏற்படும். பொதுசன அபிப்பிராயத்திற்குப் பயன்படுவார்கள். இரகசியத்தை விரும்புவர். மனதில் புயல் வீசினும் வெளியில் காட்டிக்கொள்ளாது அமைதியாக இருப்பதுபோலக் காட்டுவார்கள். சதா ஏதாவது ஒன்றை அடைய முயற்சி செய்வார்கள்.

ஆபத்துகள் வந்தால் மிக நிதானமாக நடந்து வெற்றியீட்டு வார்கள். இவர்களுக்கு உற்சாகம் ஏற்பட்டால் மற்றவர் களேயும் உற்சாகப்படுத்துவார்கள். சோர்வு ஏற்பட்டால் மற்றவரையும் அதைரியப்படுத்துவார்கள்.

## N

அன்பிலிருந்து ஆசைவரை, காமத்திலிருந்து கருணே வரை எல்லா உணர்ச்சிகளும் காணப்படும். உணர்ச்சி வசப் பட்டவராதலால் நண்பர்கள் மனதைக் கவர்வர். தன்னிஷ் டப்படி எல்லாவற்றையும் புரிவர். வாக்கு வல்லமை உண் டாகும். திறமையாக வாதிட்டுப் பேசுவார்கள். சிறு சொல் லும் இவர்கள் இதயத்தை அம்புபோலத் தாக்கும். பல பிரச்சினேகள் தோன்றியபோதும் வாதாடி வெற்றி காண்பர்.

## H

நடக்கப்போகும் சம்பவங்களே ஊக்குவிக்கும் சக்தி மிதமிஞ்சிக் கபணப்படும். ஜனவசியம் உண்டாகும். வீண் செலவும், சக்தி விரயமும் ஏற்படும். காரியங்களேத் திட்ட மிட்டுச் செயற்பட்டு வெற்றி காண்பார்கள். சுகமான இருப் பிடம் அமையும்.

## X

இதற்கு அறியமுடியாத அல்லது தெரியமுடியாத விஷயங்களேத் தெரிந்துகொள்ளும் சக்தி உண்டு. இதனுல் தைரியம், நிதானம், ஒப்பிட்டுப் பார்த்தல் இவ்வெழுத்தில் பெயர் வரப்பெறுபவர்கள் எல்லா இச்சைகளேயும் நிறை வேற்றுவார்கள். இருந்த நிலேயில் எல்லாவற்றையும் அறிந்து விடுவார்கள். சாமர்த்தியசாலிகளாக விளங்குவார்கள்.

## U (U.V.W.) 6

இவ்வெண் பெயரின் முதல் எழுத்தாகவோ, இறுதி எழுத்தாகவோ வரப்பெறின் ஆத்மீகத்துறையில் ஈடுபாடு ஏற்படும். ஐம்புலன்களான அனேத்தையும் அனுபவிப்பர். ஆத்மிக சக்தி இழுக்கும். யோசித்தே முடிவு செய்வார்கள். இவர்களிடம் எப்போதும் பணம் இருந்தவண்ணமிருக்கும். நண்பர்களே நன்கு விசுவசிப்பார்கள். மெதுவாகக் கவ னித்தபோதும் மிகக் கவனமாக முடிவு செய்வார்கள். இவர் களுக்கு ஆரம்பம் கடினமாகத் தோன்றினுலும் முடிவு மிக வெற்றிகரமாகவும் துச்சமாகவும் காணப்படும். இவ் எழுத்து தற்பாதுகாப்பு சக்தியைக் கொடுக்கும், நற்துணிபு நிறைய உண்டாகும்.

## V

இவர்களுக்கு முகநக நட்கும் நட்புகள் பிடிக்காது. ஆழமான தூய அன்பையே விரும்புவார்கள். பலரின் இன் னல்களேயும் பிரச்சினேகளேயும் தீர்த்துவைப்பார்கள். பிறரை நன்கு ஆராய்ந்து உணர்வார்கள். எப்போதும் சுறுசுறுப் பாக இருப்பார்கள். ஒரே இடத்தில் இருப்பது இவர்களுக் குப் பிடிக்காது. அறிவை அன்றுட வாழ்க்கையில் இலாப மடைய உபயோகிப்பார்கள். தெய்வீக விஷயங்களேத் தீவிர மாக ஆராய்வார்கள். தளராத தன்னம்பிக்கை காணப்படும். போதகர்களாக விளங்குவர். இனிமையாகப் பாடும் வல் லமை ஏற்படும்.

## W

இதனுல் எதிரிகளிடம் அனுசரித்துப்போகும் தன்மை உணர்த்தப்படுகிறது. அறிவும், அன்பும் மிகும். முன்னேற் றத்தில் ஆர்வமும், பிரமாதமாக வார்த்தையும், திறனும் உண்டாகும்.

## O (O. Z) 7

எல்லாவற்றையும் ஒன்று திரட்டும் சக்தி காணப் படும். அமைதியையும் தனிமையையும் விரும்பி வரவேற் பார்கள். தெய்வ பக்தி உண்டாகும். சுதந்திரப் பிரியர்கள். தம் இஷ்டப்படி காரியங்களேச் செய்துமுடிப்பர். சமூகத் துக்குத் தொண்டு செய்யும் மனப்பான்மை இவர்களிடம் காணப்படும். இவர் எழுத்து முடிவில் வரினும் இதன் குணங்

கள் காணப்படும். தீவிரமான யோசனை இருக்கும். காதல் பிரச்சினைகள் என்பன தோன்றும். டாம்பீகத்தில் பொருட்களை இழப்பர்.

## F (F. P.) 8

இவ்வெழுத்து பெயரில் வந்தால் துணிந்து சண்டைகளில் ஈடுபடுவர். அடிபிடிகளிலும் கலந்துகொள்வர். பொலிஸ், சிறைபோன்ற விடயங்களில் ஈடுபடநேரும். நண்பர்களை நன்கு விசுவாசிப்பர். தீவிரமான செயல்களில் ஈடுபடுவர். தோல்வி ஏற்பட்டாலும் வெளியில் காட்டிக் கொள்ளாது மறைத்துவிடுவர். வெற்றிகளைப் பெரிதும் விரும்புவர். திடகாத்திரமும், எதிர்க்கும் சக்தியும் நிறைந்து காணப்படும்.

## P

பெரிய ரசிகராக விளங்குவர். இனிமையாகப் பாடக்கூடிய தன்மை உண்டாகும். வாக்கு வன்மை தோன்றும். வேதாந்தியாகவும், கொடையாளியாகவும் இருப்பர். இவருக்கு முன்னேற்றமும், புகழும் வாயாலேயே ஏற்படும். செலவுகளும் கட்டுக்கடங்காது காணப்படும். கவர்ச்சிமிக்க தோற்றமும் உண்டாகும். நிர்வாக சக்தி அதிகரிக்கும். கருத்துக்களைப் பேச்சிலோ அன்றில் எழுத்திலோ வெளியிட்டுச் சமூகத்தைக் கவர்வார்கள்.

அனேகமாக நாம் நோக்கும்போது பிரபல்யமான பாடகர்களின் முன் எழுத்துக்களை நோக்குவோம்.

S. P. பாலசுப்பிரமணியம், J. P. சுந்தராம்பாள்,
S. P. சைலஜா, P. சுசிலா.

இங்கு இவர்களில் பெயர் ஆரம்ப எழுத்தும் S. எனவே இவ்வாறான ஆதிக்கர்கள் பாடுவதில் வல்லவர்கள்.

இனி நாம் எமது வாழ்க்கை தற்போது என்ன கட்டத்தில் உள்ளது என்பதையும், நாம் ஒரு காரியத்தை நினைத்துவிட்டு அதை நாம் செய்துமுடிக்க முடியுமா? இது வெற்றியாக முடியுமா? என்பதுபற்றி அறியலாம். இதுபற்றி நோக்குவோம்.



அதாவது, 24-5-1957ல் பிறந்த ஒருவருக்கு இன்று எப்படி? எனப் பார்க்கவேண்டுமாயின், அவர் தன் நிலை பற்றி என்று அறிய நினைத்தாரோ அன்றையத் திகதி, மாதம், வருடம் ஆகியவற்றில் இருந்து தனது பிறந்த திகதி, மாதம், வருடத்தைக் கழித்துவரும் எண்களைக் கூட்டி ஒற்றை எண்ணாக அமைக்கவேண்டும். இவ்வாறு வரும் ஒன்பது எண்களும் ஒவ்வொன்றைக் குறிப்பிடும். அதிலிருந்து அவர் நினைத்த காரியத்தையோ அல்லது தற்போது அவரது வாழ்க்கை நிலையையோ உணரலாம். எனவே மேற்காட்டிய பிறந்த தினத்தை இன்றைய தினம் 30 - 5 - 1982 எனக் கொண்டு கழித்து நோக்குவோம்.

இன்றைய தேதி 1982 — 5 — 30
பிறப்பு தேதி 1957 — 5 — 24 கழித்தல்.
25 — 0 — 6

2 + 5 + 6 = 4 — இராகு - பகை.

இவ்வாறு வரின் எங்கோ எமக்கு அறிந்தோ அறியாமலோ ஒரு பகை ஏற்பட்டுள்ளதை உணரலாம். இவ்வாறு இன்னுமொரு அமைப்பை உதாரணமாக நோக்குவோம்.

இன்றைய தேதி 1982 — 9 — 30
பிறந்த தேதி 1957 — 5 — 27
25 — 4 — 3

2 + 5 + 4 + 3 = 14 = 5 — புதன் - தோழமை.

எங்கோ ஒரு புதிய நட்பு உண்டாகியுள்ளது. ஆணாயின் பெண்ணுடையதும், பெண்ணாயின் ஆணுடையதாகவும் அமையலாம். அல்லது புதிய வியாபாரம் ஒன்றைத் தொடங்கப்போவதை அறியலாம். அல்லது திருமணப் பேச்சுவார்த்தைகள் நடப்பதை உணரலாம். இவ்வாறு தமது பிறப்புத் திகதி, மாதம், ஆண்டில் இருந்து, எந்தத் திகதியில் இருந்து கழித்து வரும். ஒவ்வொரு எண்களுக்குமான பலன்களைத் தனித்தனி நோக்குவோம். இவ்வாறு கழித்துவரும் எண் ஒன்றாயின்.

## 1

சூரியன் - மேன்மை. தொழிலில் முன்னேற்றத்தைக் குறித்து நிற்கிறது. அண்மையில் வேலை உயர்வு, உயர் அதிகாரிகள் ஆதரவு, மேன்மையான ஸ்தானம் வகிக்கும் நிலை உண்டாகி உள்ளதை அல்லது உண்டாகப்போவதைக் குறிக்கும்.

## 2

சந்திரன் — மென்மை. வாழ்க்கையில் தற்போது என்ன செய்வதென முடிவு எடுக்கமுடியாது தவித்துத் தத்தளித்து இன்னல் உறுவதையும், எங்கோ ஏமாறப்போவதையும், நிறைவில்லாத முடிவையும் குறிக்கும்.

## 3

குரு - போதனை. கல்வியால் ஏற்படப்போகும் முன்னேற்றம், பரீட்சை முடிவுகள், இயந்திரம் வாங்கத் திட்டமிட்டுள்ளதை அல்லது அண்மையில் வெளிநாட்டுப் பயணம் ஏற்பட உள்ளதை அல்லது ஏதாவது ஒரு பெரிய சொத்து வாங்க உள்ளதைக் குறிக்கும். வீடு, காணி, கார் வாங்க உள்ளதைக் குறிக்கும்.

## 4

இராகு - பகை. எங்கோ பகை வளர்ந்து அதனால் இன்னல் உறுவதைக் குறிக்கும்.

## 5

புதன் - தோழமை. எங்கோ காதல் பிறந்துள்ளதை அல்லது ஒரு புதிய நட்பு அல்லது திருமணம் பேசுவதையும் அன்றில் புதிய வியாபாரம் ஒன்றை மேற்கொண்டிருப்பதைக் குறிக்கும்.

## 6

சுக்கிரன் - ரசனை. அண்மையில் எதிர்பாராது ஒரு அதிர்ஷ்டம் அனுபவிக்க இருப்பதைக் குறிக்கும். காலம் அதிர்ஷ்டமாக உள்ளதை உணரலாம்.



## 7

கேது - சோதனை. காதலிலோ அல்லது குடும்ப வாழ்க்கையிலோ துன்பம் ஏற்படும். கவலையான நிலை தோன்றுவதை உணரலாம். குடும்பத்தில் பிரச்சினை அல்லது தனது காதல் சம்பந்தமான பிரச்சினை ஏற்படுவதை அறியலாம்.

## 8

சனி - சோதனை. எட்டாம் எண் வரின் அறுதியிட்டு என்னவென்று கூறமுடியாதபோதும் எங்கோ ஒரு மனஸ்தாபம் அல்லது சண்டை நடந்துள்ளதை உணரலாம்.

## 9

செவ்வாய் - சாதனை. 9பது வரின் ஏதோ ஒரு காரியத்தைச் சாதித்து முடிப்பர். தாம் இக்காலப் பகுதியில் போட்டுள்ள திட்டம் முயற்சியால் முடிவுறும். வெற்றி கிட்டும் என்பதைக் குறிக்கிறது.

தாம் ஒரு காரியத்தை நினைத்துவிட்டு அந்தவிடம் சரிவருமா அல்லது சரிவரமாட்டாதா என அறிய 100க்கும் 1000க்கும் இடையில் ஒரு எண்ணை நினைத்து நோக்கலாம்.
உதாரணமாக : நினைத்த எண்

126 ஆகின், $1 + 2 + 6 = 9$.

நிச்சயமாக நினைத்த காரியம் ஒரு சாதனையாக முடிவுறும். பெரிய வெற்றியாக அமையும். இனி ஒவ்வொரு எண்களும் வரும்போது என்ன முடிவு ஏற்படும் என்பதைத் தனித்தனி நோக்குவோம்.

## 1

நினைத்த காரியம் நடைபெற்று மேன்மை அடைவர்.

## 2

நினைத்தது நடக்காது; வீண் அலைச்சல்.
இக்காரியத்தில் ஈடுபடாதுவிடல் நன்மைதரும்.

## 3

நினைத்தது சமாதானமாக முடியும்.
நல்ல திறமைச் சித்தி உண்டாகும்.

## 4

நினைத்தது வீண் பகையாக முடியும்.
வெற்றி தரமாட்டாது.

## 5

நினைத்தது முடியும். பேரும் புகழும் கிட்டும்.

## 6

நினைத்தது அதிர்ஷ்டவசமாக நன்மையாக முடியும்.

## 7

நினைத்தது வீண் அலைச்சல். சோதனையாக அமையும்.

## 8

நினைத்ததை அறுதியிட்டுக் கூறமுடியாது.
உயர்த்தும், இறக்கும்.
எனவே திரும்ப ஒரு எண்ணைக் கூறிப் பார்க்கவேண்டும.

## 9

நினைத்தது நடைபெறும் அது பெரிய சாதனையாக அமையும்.
பேரும் புகழும் வந்துசேரும்.

ஒரு நாளில் ஒருவிடம் மட்டுமே பார்க்கவேண்டும். பேராசையில் சும்மா சும்மா நினைத்து, தவறான முடிவுகளை எடுக்கக்கூடாது.

**குறிப்பு :** இந்நூல் ஆக்கத்திற்கு முன்னோடியாக உதவிய நூல் சேதுராமன் எழுதிய **"எண் சோதிடம்"** என்னும் நூலாகும்